க வெளியீடு: எஅக

தமிழ்ப் புலவர் வரிசை

ஆறும் புத்தகம்

MADURAI UNIVERSITY LIBRARY
5 JAN 1973
MADURAI-2.

644

ஆசிரியர் :

திரு. சு. அ. இராமசாமிப்புலவர்

Book supplied by the University
central Co-op Stores, Madurai.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
ருநெல்வேலி. :: சென்னை 1.

First Edition: April, 1955.

THAMIZHP PULAVAR VARISAI

[All Rights Reserved]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS-1.

Head Office:

24, EAST CAR STREET, THIRUNELVELI.

Appar Achakam, 2/140, Broadway, Madras-1. I Ed. C. 1200.

பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம் முறையில் நம் நாட்டுப் புலவர்பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்தொண்டாகும் எனக்கருதி **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் ஐந்து நூல்கள் வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **ஆறும்** புத்தகமாகும்.

இதன்கண் **திருமூலர்** முதல் **போப்பையர்** ஈறாக நூக புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

இதனையும் முதல் ஐந்துபுத்தகங்கள் போலவே, ஆசிரியர்களும், மாணக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

இதனை எங்கள் வேண்டுகோளின்படி ஆக்கித்தந்த திரு. **கு. அ. இராமசாமிப்புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

உள்ளுறை

		பக்கம்
க.	திருமூலர்	1
உ.	கல்லாடர்	4
௩.	சேரமான் பெருமாள்	8
ச.	கருவூர்த்தேவர்	12
ரு.	புராணத் திருமலைநாதர்	18
சா.	முத்துத்தாண்டவர்	20
எ.	ஈழத்துக்குச் சென்ற இரு புலவர்கள்	24
அ.	அரசகேசரி	26
கூ.	சேந்தனார்	27
க0.	தலைமலைகண்ட தேவர்	31
கக.	வசைகவியாண்டான் புலவர்	34
கஉ.	நந்திக்கலம்பக ஆசிரியர்	42
க௩.	பகழிக்கூத்தர்	47
கச.	குரு நமச்சிவாயர்	50
கரு.	அபிராமப்பட்டர்	54
கசா.	சத்திமுற்றப்புலவர்	58
கஎ.	முத்துக்குட்டிப்புலவர்	62
கஅ.	அட்டாவதானம் சரவணக்கவிராயர்	66
ககூ.	நல்லாப்பிள்ளை	69
உ0.	வீரமாமுனிவர்	72
உக.	அழகிய சொக்கநாதபிள்ளை	78
உஉ.	நமசிவாயப்புலவர்	87
உ௩.	சின்னத்தம்பிப்புலவர்	91
உச.	சங்கர நமச்சிவாயப்புலவர்	95
உரு.	இராமநுசக்கவிராயர்	98
உசா.	பொன்னம்பல அடிகள்	104
உஎ.	தியாகராசச்செட்டியார்	107
உஅ.	கால்டுவெல்	119
உகூ.	கனகசபைப்பிள்ளை	126
௩0.	கிருட்டிணபிள்ளை	129
௩க.	போப்பையர்	135

MADURAI UNIVERSITY
MADURAI-2

தமிழ்ப் புலவர் வரிசை

[ஆறாம் புத்தகம்]

க. திருமூலர்

வருகை

திருக்கயிலையில் சிவயோகி ஒருவர் இருந்தார். அவர் திருநந்திதேவருடைய திருவருளைப் பெற்றவர். அவர் பொதியமலையை அடைந்து அகத்தியரைக் கண்டு வணங்க எண்ணினார். திருக்கயிலையை விட்டுப் புறப்பட்டார். வழியில் உள்ள நேபாளம், திருக்கேதாரம், காசி, திருச்சைலம், திருக்காளத்தி, திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருத்தில்லை முதலிய சிவபதிகளை வணங்கிக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்தார். அங்கே இறைவழிபாடு செய்துகொண்டு சிலகாலந் தங்கியிருந்தார். பிறகு அப் பதியை விட்டுப் புறப்பட்டுச்சென்றார்.

மூலன்

செல்லும்போது வழியிலே ஒரு காட்டில் ஆன் கூட்டங்கள் வருந்திக் கதறுதலைக் கண்டார். அண்மையில் சாத்தனூர் என்னும் ஓர் ஊர் இருந்தது. அவ்வூரில் மூலன் என்னும் இடையன் ஒருவன் இருந்தான். அவன்தான் அந்த ஆநிரைகளை மேய்ப்பவன். அந்த மூலன் அன்று ஊழ்வினை உருத்துவந் தூட்டியபடியால் இறந்துபோனான்.

அவன் இறந்தான் என்பதை ஆநிரைகள் அறிந்தே இரங்கின. அருண்மிக்க மூலனூர் ஆநிரையின் அல்லலைக் கண்டார். அவ்வல்லலைப் போக்கவேண்டும் என்று திருவுளத்தில் எண்ணினார்.

வேற்றுடலில் நுழைதல்

சிவயோகியார் சித்திகள் எல்லாவற்றினும் வல்லவர். வேற்றுடலில் நுழையும் (பரகாயப்பிரவேசம்) ஆற்றலும் அவருக்குண்டு. ஆகவே, அவர்தம் உடலைப் பாதுகாப்பான ஓரிடத்தில் வைத்துவிட்டு மூலனுடைய உடலில் தமது உயிரைப் புகவிட்டார். அவ்வளவில் மூலன் உயிர் பெற்றெழுந்தான். ஆன்கூட்டங்கள் அல்லல் நீங்கித் துள்ளிக் களித்தன. அவனுடலை நக்கி மோந்தன. பிறகு மேயலாயின. பொழுது போகும் வரையில் மேய்ந்த ஆக்கள் பிறகு வழக்கப்படி தத்தம் இருப்பிடங்களை நோக்கிப் புறப்பட்டன. சிவயோகியார் ஆக்கட்குப் பின்சென்று எல்லாவற்றையும் வீடுகளிற் சேர்த்தார். பிறகு தாம் ஓரிடத்தில் நின்றார்.

மூலன் மனைவி

வழக்கத்திற்கு மாறாகத் தன் கணவன் நேரஞ்சென்று வந்திருத்தலையும் வீட்டிற்கு வராமல் வெளியிலே நிற்றலையும் மூலன் மனைவி கண்டாள். கணவனுக்கு உடல் நலமின்றியுள்ளது போலும் என்று எண்ணியவளாய் உடல் மீது கையைவைத்துப் பார்க்கச் சென்றாள். உடனே சிவயோகியார், எட்டி நின்றுகொண்டு, "உனக்கும் எனக்கும் யாதொரு தொடர்பும் இல்லை. நீ என்னைத் தீண்டாதே," என்றார். பிறகு ஓரிடத்திலே போய்ச் சிவயோகத்தில் இருந்தார். மூலன் மனைவி இரவு முழுதும் உறக்கமின்றிக் கவலைகொண்டிருந்தாள். மறுநாள் பலரிடமுந்

தன் கணவன் செயலைத் தெரியப்படுத்தினாள். பலர் சிவ யோகியாரை வந்து பார்த்தார்கள். "இப்பொழுது இவ ரிடம் பெருமாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இது பைத்திய மன்று. இவர் கருத்து இறைவன்மேல் பதிந்திருக்கிறது. இனி இவர் உலக வாழ்க்கைக்குப் பயன்பட மாட்டார். ஆகவே அவரைத் தொல்லைப்படுத்துவதில் பயன் ஒன்றும் இல்லை," என்று கூறி மனந் தெளியச் செய்தார்கள்.

உடல் மறைவு

பிறகு சிவயோகியார் ஊரைவிட்டுப் புறப்பட்டு முதல் நாள் தமது உடலை வைத்திருந்த இடத்திற்குச் சென்று பார்த்தார். அவ் வுடல் காணப்படவில்லை. முதலில் சிறிது உளங்கவன்றாராயினும் பின் தேறித் தெளிந்தார். பொதியமலைக்குச் செல்லும் எண்ணத்தை விட்டுத் திருவா வடுதுறைக்கே சென்றார்.

திருமந்திரம்

சிவபெருமானை வணங்கிக் கோவிலுக்கு அண்மையில் அரசமரத்தின்கீழ் அமர்ந்து சிவயோகஞ் செய்யத் தொடங்கினார். மூலனின் உறவினர்கள் அங்கும் வந்து பார்த்து அவருடைய நிலையைத் தெரிந்துகொண்டு சென் றார்கள். மூலனார் அந்த இடத்தில் மூவாயிரம் யாண்டுகள் சிவயோகத்தில் இருந்தார். ஆண்டுக்கொருமுறை கண் விழிப்பார். அப்பொழுது பாடல் ஒன்று சொல்லுவார். அந்தப் பாடல்கள் சைவாகமங்களிலே கூறப்பட்ட ஞானம், யோகம், கிரியை, சரியை என்னும் நான்கினை யும் கூறுகின்ற திருமந்திரம் என்னும் பெயரைப் பெற்றன. திருமந்திர நூலிலே எல்லாப்பொருள்களையும் காணலாம்.

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே.

குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

என்பன திருமந்திரப் பாடல்கள்.

உ. கல்லாடர்

கல்லாடம் என்பது ஒரு சிவப்பதி. அது பாண்டி நாட்டில் உள்ளது.

"கல்லா டத்துக் கலந்தினி தருளி
நல்லா ளோடு நயப்புற வெய்தியும்"

என்பது மணிவாசகப் பெருமான் திருவாய்மொழி. இவர் இப்பதியிற் பிறந்தமையின் இப்பெயரை இடவாகு பெயராகப் பெற்றனரா, அன்றிக் கல்லாடம் என்னும் நூலைச் செய்தமையின் பெற்றனரா என்பது உறுதிசெய்யக்கூடாத ஒன்றாக இருக்கின்றது. இவர் வாழ்ந்திருந்த இடம் மதுரை என்று பல காரணங்களாற் பெறப்படுகின்றது. இவருடைய காலம் கடைச்சங்கத்தார் காலமாகும்.

இவருடைய குலம் முதலியவைகளைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இவருடைய சமயம் சைவசமயம் என்பது மட்டும் கல்லாடத்தால் நன்கு பெறப்படுகின்றது.

இவர் கடைச்சங்கத்தில் இருந்த புலவர்களில் ஒருவர். இவருடைய தாய் தந்தை முதலியவர்களைப்பற்றி ஒன்றுந் தெரியவில்லை. இவர் பாண்டியன் தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், அம்பர்கிழான், அருவந்தை, பொறையாற்றுக்கிழான் முதலியவர்களைப் பாடியவர். பதினோராந் திருமுறையில் கண்ணப்ப தேவர் திருமறம் என்னும் நூல் இவராற் செய்யப்பட்டிருப்பதோடு கல்லாடம் என்னும் தனிநூலும் இவராற் செய்யப்பட்டிருக்கிறது. இக் கல்லாடம் நூற்றிரண்டு அகவற்பாக்களை உடையது.

"மாணிக்கவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம்பலக்கோவை அகப்பொருள் இயலுக்கு மாறுபடுகின்றது," என்று சிலர் குற்றங்கூறினர். அக் கூற்றை மறுத்தற் பொருட்டு, அக்கோவையின் நூறு செய்யுட்களைக் குறிக்கோளாகக் கொண்டு இவர் கல்லாடத்தை இயற்றினர். கடைச்சங்கப் புலவரும் பிறருங்கூடிய பேரவைக்கண் கல்லாடம் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது.

கோவைக்குக் குற்றங்கூறியவர்கட்கு நல்லறிவு புகட்ட வேண்டும் என்று எண்ணிய கல்லாடர், கோவையின் சிறப்பியல்புகளை எடுத்துக் கூறினர். குற்றங் கூறியோர் கல்லாடரைப் பார்த்து, "நீர் நுமது கோவையை அரங்கேற்றஞ் செய்யுங்கால் ஏதேனும் புதுமை நிகழ்ந்தால் அன்றி நாங்கள் உமது உரையை ஒரு சிறிதும் பொருட்படுத்தோம்," என்றனர். கல்லாடர் ஆலவாய்ப் பெருமானை வேண்டிக் கொண்டார். ஆலவாய்ப் பெருமான் அரங்கேற்றம் நடக்கு

மிடத்திற்கு ஒரு புலவராக எழுந்தருளினர். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும், "ஆஆ மிக அருமையாக இருக்கின்றது," என்று கூறி வியந்து பாராட்டியதுடன் நூல் முற்றுப் பெற்றவுடன் திடீரென்று மறைந்தருளினர். இப் புதுமையினைக் கண்டு குற்றங்கூறியவர்கள் திகிலடைந்தனர். தமது ஆணவம் ஒழிந்து நல்லறிவு பெற்றனர். இச் செய்தியின் உண்மை,

"கல்லாடர் செய்பனுவல் கல்லாடம் நூறுநூல்
வல்லார்சங் கத்தில் வதிந்தருளிச்—சொல்லாயும்
மாமதுரை ஈசர் மனமகிழ்ந்து கேட்டுமுடி
தாமசைத்தார் நூறு தரம்"

என்னும் வெண்பாவால் அறியப்படுகின்றது.

கல்லாடர் தம் மனத்தில் தோன்றிய பொருளைச் சிறிதும் தட்டாத முறையில் பாடுதலில் மிக வல்லவர். கல்லாடத்து அகவற்பாக்கள் எல்லாவற்றிலும் இவர் மதுரை நகரைச் சிறப்பித்தும், திருவிளையாடற் கதைகளைச் சுட்டிக் காட்டியும் பாடியுள்ளார். இவர் பாண்டிய நாட்டிலே பிறந்து வளர்ந்தவரென்பது கல்லாட நூலின் போக்கால் ஒருவாறு உய்த்துணரக் கிடக்கின்றது. இவர் முருகக் கடவுளைத் தம்முடைய வழிபடு கடவுளாகக் கொண்டவர் என்றும் எண்ணலாம்.

"சமயக் கணக்கர் மதிவழி கூறாது
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் தனக்கு வளர்கவிப் புலவர்முன்
முதற்கவி பாடிய முக்கண் பெருமான்"

என்னும் கல்லாட மொழிகளால் இவர் பலவேறு சமய ஆராய்ச்சியும் உடையவர் என்பது பெறப்படும். இவர் பாடல் திருவள்ளுவமாலையிலும் ஒன்று காணப்பெறுகிறது. அது,

"ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தோர்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பால் மொழிந்த மொழி"

என்பதாகும். இவர் தொல்காப்பிய நூலுக்கு ஓர் உரை இயற்றியுள்ளார் என்பது,

"ஒல்காப் பெருமைத் தொல்காப் பியத்திற்(கு)
உரையிடை இட்ட விரகர்கல் லாடர்"

என்பதனாற் பெறப்படுகிறது. ஆனால், அவ் வுரை வழக்காற்றில் இன்மையின் மறைந்துவிட்டது போலும்.

இலக்கண நூல்கள் பலவற்றினும் இலக்கிய நூல்கள் பலவற்றினும் இவர் மிகவல்லுநர் என்பதை இவர் இயற்றியுள்ள கல்லாடம் நன்கு புலப்படுத்தும். கல்லாடம் மிகவும் கடின நடையில் அமைந்துள்ளது. உரை இன்றேல் எல்லோரானும் கற்றுணர இயலாது. இறுதியில் உள்ள சில பாடல்கள் பேரறிஞர்களையும் மருட்டுகின்றன. ஒருவர் கல்லாடத்தை நன்கு கற்றுத் தேர்ந்துவிடின் அவர் நிகரற்ற புலமைத் திறம்பெற்று விளங்கலாம் என்பதைக், "கல்லாடம் படித்தவனோடு சொல்லாடாதே," என்னும் பழமொழி விளக்குகின்றது. திருக்கண்ணப்பதேவர் திருமறம், கல்லாடம் ஆகிய இரண்டைத் தவிர வேறு நூல்களை இவர் செய்ததாகத் தெரியவில்லை.

௩. சேரமான் பெருமாள்

தோற்றம்

சேரநாட்டிலே மகோதை என்னும் பெயரையுடைய கொடுங்கோளூரிலே சேரர்குடியிலே சேரமான் பெருமாள் தோன்றினார். இவருடைய பிள்ளைப்பெயர் பெருமாக் கோதையார். அந்நாளில் சேரநாட்டைச் செங்கோற் பொறையன் என்னும் சேரமன்னன் ஆட்சிபுரிந்துவந்தான். அவன் பழம்பிறவியிற் செய்த நல்வினையால் மனவுறுதி தோன்றத் துறவறத்தை மேற்கொண்டு சென்றுவிட்டான். அமைச்சரும் பிறரும் பெருமாக்கோதையாரை அரசனாகத் தேர்ந்தெடுத்தார்கள். பெருமாக்கோதையார் தாம் முன்பு செய்திருந்த சிவத்தொண்டிற்கு ஒரு சிறிதும் குறைவு ஏற்படாதவகையில் அரசாட்சி புரிதலை மேற்கொண்டார்.

பெருமாக்கோதையார் உயிர்த்தொகைகள் எல்லாம் கழறியவைகளை அறியும் அறிவையும், பேராண்மையையும், பெருங்கொடை நலத்தையும், பிற நன்மைகளையும் சிவ பெருமானுடைய திருவருட்டிறத்தால் பெற்றுச் சிறந்து விளங்கினார்.

நீற்றிடத்தன்பு

சேரமான் பெருமாள், நன்னாளிலே நல்வோரையிலே திருமுடிசூடித் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வணங்கி யானைமேல் ஏறி நகர்வலம் வந்தார். அப்பொழுது ஒரு வண்ணான் உவர்மண் மூட்டையைச் சுமந்துகொண்டு சேரமான் பெருமாளுக்கு முன்னே வந்தான். அவனுடைய உடல் மழையினால் நனைந்த உவர்மண் ஒழுகப்பெற்று வெளுத்திருந்த தோற்றம், திருநீற்றைத் தூளாகப் பூசிய சிவனடியார் திருக்கோலத்தைப் போன்றிருந்தது. அதனால்

அவ் வண்ணானை ஒரு சிவனடியார் என்று எண்ணிய சேரமான் பெருமாள் உடனே யானையினின்றும் இறங்கி அவ் வண்ணானுக்கு முன்னே சென்று வணங்கினார். அதனைக் கண்ட வண்ணான் உள்ளங்கலங்கினான். அவன் சேரமானை வணங்கித், "தாங்கள் அடியேனை யார் என்று எண்ணி வணங்குகின்றீர்கள்? அடியேன் அடிமை வண்ணான்," என்று கூறினான். சேரமான் பெருமாள் உண்மையை உணர்ந்தார். "அடியேன் அடிச்சேரன். தாம் திருநீற்றுக் கோலத்தை நினைப்பித்தீர்; வருந்தாதீர்," என்று கூறிச் சென்றார். அமைச்சர் முதலாயினோர் சேரமான் பெருமாளின் திருநீற்றன்பை வியந்து பாராட்டினார்கள். சேரமான் பெருமாள் சிவனடியாரிடத்தும் சிவபெருமானிடத்தும் பேரன்புடையவராய் அரசியற்றிக் கொண்டிருந்தார்.

திருமுகம்

அந்நாளில் பாண்டி நாட்டில் மதுரையிலே பாணபத்திரர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மதுரைப் பெருமானைப் போற்றி வழிபடுதலையே தமக்குத் தொழிலாகக் கொண்டவர். அப் பாணபத்திரர் வறுமையினால் வாடுதலையறிந்த சோமசுந்தரப் பெருமான் பாணபத்திரருக்குப் பொருள் உதவி செய்ய எண்ணினார் பாணபத்திரரைப் பார்த்து, "உனக்குப் பெரும் பொருள் வழங்குமாறு நம் மாட்டுப் பேரன்புடைய சேரமன்னன் சேரமான் பெருமாளுக்கு ஒரு திருமுகம் தருகிறோம். அதனைச் சேரமான் பெருமாளிடம் கொடுத்துப் பொருள்பெற்று உன்னுடைய துன்பத்தைப் போக்குவாயாக," என்று கூறி,

"மதிமலி புரிசை மாடக் கூடல்
பதியிசை நிலவு பால்நிற வரிச்சிறகு
அன்னம் பயில்பொழில் ஆல வாயில்
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
தன்போல் என்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே."

என்னுஞ் செய்யுளையும் எழுதிக்கொடுத்தருளினர். பாண பத்திரர் உடனே புறப்பட்டுச் சேரநாட்டை அடைந்தார். கொடுங்கோளூரை அடைந்து அரண்மனைக்கு முன்னே வந்தார். சேரமான் பெருமானுக்குத் தெரியப்படுத்தினர் தமது வருகையை. சேரமான் பெருமாள் தலையின்மீது குவித்த கையினராய் உடனேபுறப்பட்டு வெளியே வந்தார். பாணபத்திரரைப் பன்முறை வணங்கினர். "அடிகள் எளியேனை ஒரு பொருளாக மதித்து ஈண்டு எழுந்தருளினீரே" என்றார். பாணபத்திரர் சிவபெருமானுடைய திருமுகத்தைச் சேரமான் பெருமாளிடம் கொடுத்தார். சேரமான் அத் திருமுகத்திற்குப் பன்முறை வணக்கஞ்செய்து படித்தறிந்தார். பலநாள் தமது மாளிகையில் வைத்துப் பாண பத்திரருக்கு விருந்து செய்தார். பிறகு அரண்மனையில் இருந்த பொருள்களில் பாணபத்திரருக்கு வேண்டிய அளவு யானை ஒட்டை முதலியவைகளின் மீது ஏற்றியனுப்பினர்.

பொன்வண்ணத்தந்தாதி

கூத்தப்பிரான் கட்டளைப்படி சேரமான் திருத்தில்லைக்குச் சென்றார். கூத்தப்பிரானை வணங்கிப் பொன்வண்ணத்தந்தாதி என்னும் நூலைப் பாடினர்.

"பொன்வண்ணம் எவ்வண்ணம்
அவ்வண்ணம் மேனி பொலிந்திலங்கும்

மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக் குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தன்னைக் கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ண
மாகிய ஈசனுக்கே.”

என்பது பொன்வண்ணத் தந்தாதியின் முதற்பாடல். சேரமான் பெருமாள் திருத்தில்லையை அடைந்து பொவண்ணத் தந்தாதியைப் பாடினார் என்னுஞ் செய்தி,

“அன்றுவெள் ளானையின் மீதிமை யோர்சுற் றணுகுறச்செல்
வன்தொண்டர் பின்பரி மேற்கொண்டு வெள்ளி மலையரன்முன்
சென்றெழி லாதி உலாஅரங் கேற்றிய சேரர்பிரான்
மன்றிடை யோதுபொன் வண்ணத்தந் தாதி வழங்கிதுவே.”

என்னுஞ் செய்யுளாற் பெறப்படும்.

சுந்தரர் நண்பர்

சுந்தரமூர்த்திநாயனாருக்கும் சேரமான் பெருமாளுக்கும் நட்புண்டாயிற்று. இருவரும் ஒன்று சேர்ந்து பல சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் சென்றனர். சேரமான்பெருமாள் திருவாரூரில் சுந்தரமூர்த்தி அடிகளுடன் இருக்கையில் திருவாரூர் மும்மணிக்கோவை என்னும் நூல் பாடினார். சுந்தரரும் சேரமான்பெருமாளும் சேரநாட்டில் இருக்கையில் சுந்தரமூர்த்தி அடிகள் திருவஞ்சைக்களம் திருக்கோயிலுக்குச் சென்றார். அப்போது சுந்தரர் இறைவன் அருளால் கைலையை நோக்கிப் புறப்பட்டார்.

கைலையை அடைதல்

அரண்மனையில் இருந்த சேரமான்பெருமாள் சுந்தரர் செயலை உணர்ந்தார். வெள்ளை யானையின்மேல் கைலைக்

குச் செல்லும் சுந்தரரோடு தாமும் செல்ல எண்ணினார். ஒரு குதிரையின் மேலேறித் திருவஞ்சைக் களத்தை யடைந்து குதிரையின் காதில் ஐந்தெழுத் தருமறையை உரைத்தார். அது விண்ணில் எழுந்து சுந்தரரது வெள்ளை யானையை வணங்கி வலஞ்செய்து அதற்கு முன்னாகச் சென்றது. அப்போது சேரமான்பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா என்னும் நூலைப் பாடிக்கொண்டு சென்றார். இருவரும் திருக்கயிலையை அடைந்து இறைவனை வணங்கிப் பண்டைய தம் பதங்களைப் பெற்றனர். சேரமான்பெருமாள் பாடிய உலா திருக்கயிலையில் சிவபெருமான் திருமுன் அரங்கேற்றஞ் செய்யப்பட்டது. அது பின்பு மாசாத்தரென்பவரால் திருப்பிடவூரிலே வெளிப்பட்டது.

சேரமான்பெருமாளால் இயற்றப்பட்ட பொன்வண்ணத் தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞானவுலா என்னும் மூன்று நூல்களும் பதினோராந்திருமுறையிற் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

---

௪. கருவூர்த்தேவர்

குலமுஞ்செயலும்

திருவிசைப்பாவில் பத்துத் திருப்பதிகங்களை இயற்றிய கருவூர்த்தேவர் கருவூரிலே மறையவர் குலத்தில் தோன்றினார். இலக்கண இலக்கியங்களைக் கற்று அவைகளில் சிறந்து விளங்கினார். சமய ஆராய்ச்சியில் ஈடுபட்டுச் சைவசமயமே மெய்ச்சமயமென்று தேறினார். மற்றைச் சமயங்களினும் விருப்பு வெறுப்பற்றுப் பொது நோக்கங்கொண்டார். சிவபிரான் திருவருள் இவருக்கு மிகுதியாக உண்டாயிற்று. எல்லாச் சித்துக்களையும்

இயற்றுதற்கு வல்லவரானார். சித்தாடலில் வல்லவராகவே இவருடைய பெயர் கருவூர்ச்சித்தர் என்றும் மருவலாயிற்று.

சித்து

கருவூர்மக்கள் கருவூர்த்தேவருடைய பெருமையை அறிந்துகொள்ளவில்லை. கருவூர்த்தேவர் மதுவையும் ஊனையும் உண்ணும் வாம மார்க்கத்தவர் என்று சொல்லி இகழ்ந்தார்கள். கருவூர்த்தேவர் அம் மக்கட்கு நல்லறிவு புகட்ட எண்ணினார். காலமல்லாத காலத்திலே பெரு மழை பொழியச் செய்தார். ஆறு பெருகிவரச் செய்தார். திருக்காப்பிடப் பெற்ற கோயிலின் திருக்கதவுகள் தாமே திறக்கச் செய்தார். விண்ணில் இயங்கி நினைத்த விடங்கட்குச் சென்றார்.

பலவிடங்கட்குச் செல்லுதல்

தேவர், பல பதிகட்குஞ் சென்று கடவுளைப்போற்ற விரும்பினார். கொங்குநாடு, குடநாடு, கன்னடநாடு, துளுவநாடு முதலிய நாடுகட்குச் சென்றார். காசி, காஞ்சி, காளத்தி, தில்லை, அருணை முதலிய சிவப்பதிகட்குச் சென்றார். பிறகு பாண்டி நாட்டை அடைந்து மதுரை முதலிய ஊர்கட்குச் சென்றார். தாமிரவர்ணியாற்றின் கரையில் உள்ள குருகூர்ப்பெருமாள் கோயிலுக்குச் சென்றார். தேவர் செல்வதற்குமுன் திருமால் தம்மடியார் கனவில் தோன்றிக், "கருவூர்ச் சித்தர் இவ்வூருக்கு வருகின்றார். அவரை வரவேற்றுப் போற்றுங்கள்," என்று திருவாய் மலர்ந்தருளினார். திருமாலடியவர்கள் திருக்கூட்டமாகச் சென்று தேவரைப் போற்றி அவருடைய வாழ்த்துரையைப் பெற்றார்கள்.

பிறகு தேவர், திருச்செந்தூர், கன்னியாகுமரி, சுசீந்திரம் முதலிய இடங்கட்குப் போய்விட்டுத் திருநெல்வேலியை அடைந்தார். நெல்லையப்பரை அழைத்தார். நெல்லையப்பர் விரைந்து வராமல் சிறிது தாழ்த்தார். தேவர் சினங்கொண்டு அவ்வூரை, "எருக்கு மூடக்கடவது," என்று சபித்தார். அவ்வளவில் நெல்லையப்பர் அடியார் குழாத்தோடு தேவர் முன் தோன்றி அவருக் கருள்புரிந்தார். தேவர், இன்பக்கடலில் இனிது ஆழ்ந்து திருவிசைப் பாப் பாடினார். சாபத்தையு மாற்றினார். பிறகு சில சித்துக்கள் செய்துகொண்டு திருக்குற்றாலத்தையடைந்தார். அங்குந் திருவிசைப்பாப் பாடினார். பிறகு பொதிய மலையை அடைந்து அகத்தியரைக் கண்டு வணங்கி அங்குத் தங்கியிருந்தார்.

தஞ்சைக்குச் செல்லுதல்

அந்நாளில் தஞ்சையில் சோழ மன்னன் ஒரு பெரிய கோயிலைக் கட்டினான். அதில் சிவபெருமான் திருக் குறியான சிவலிங்கத்தை அமைக்க முயன்றான். எவ்வளவோ முயற்சி செய்தும் மருந்திளகிப் பந்தனமாகவில்லை. மன்னன் வருந்தினான். " கருவூர்த் தேவர் வந்தாலன்றிக் காரியம் நடைபெறமாட்டாது," என்று விண்ணொலி எழுந்தது. அங்கு உருவத்தை மறைத்து எழுந்தருளியிருந்த போக நாதர் கருவூர்த்தேவரைத் தம் வியத்தகு ஆற்றலால் அழைத்தார். கருவூர்த்தேவர் கோயிலுக்குட்சென்று சிவலிங்கத்தை ஆவுடையாருடன் சேர்த்து ஒழுங்காகப் பிடித்துத் தமது வாயிலிருந்த பாக்கு வெற்றிலைச் சாற்றை உமிழ்ந்து இறுக்கினார். சிவலிங்கமும் ஆவுடையாரும் இறுக்கமாய் ஒன்றுபட்டுப் பசும்பொன்னை உருக்கி அமைத்ததைப்போல் அமைந்தது. அதனைக் கண்டு எல்லோரும் மிகுந்த வியப்படைந்தார்கள்.

திருவரங்கம் சேறல்

தேவர் பிறகு திருவானைக்காவுக்குப் போய்ப் பின் திருவரங்கத்தையடைந்தார். தேவரின் அழகைக்கண்டு திகைத்த ஒரு விலைமகள் தேவரிடத்தில் அன்புடையவளாய் அவரைப் போற்றி வழிபட்டாள். தேவர் அவ் விலைமாதின் இல்லத்திற்குச் சென்று அவளது இன்பத்தை நுகராமல் நுகர்ந்து இரண்டு நாள் தங்கினார். பிறகு திருக்கோயிலுக்குச் சென்றார். அரங்கநாதனை அழைத்து அவருடைய மார்பிலே இருந்த விலையேறப்பெற்ற மாணிக்க மாலையைக் கேட்டார். பெருமாளும் மறுக்காமல் கொடுத்தார். தேவர் அம் மாலையை அப் பொதுமகளுக் களித்தார். மேலும் அவளைப் பார்த்து, "நீ எப்பொழுது நினைத்தாலும் நாம் உடனே வருவோம்," என்று கூறி அங்கிருந்து புறப்பட்டார். திருப்பராய்த்துறை முதலிய இடங்கட்குப் போய்விட்டுக் கருவூரை அடைந்தார். திருவரங்கத்தில் திருமாலடியார்கள் திருவரங்கநாதனின் திருக்கழுத்தில் திகழ்ந்த மாணிக்கமாலையைக் காணாமல் திகைத்தார்கள். பிறகு விலைமகளிடம் மாலை இருத்தலை உணர்ந்து உசாவினார்கள். அம்மாது, "இம்மாலையை அடியாளுக்குக் கருவூர்த் தேவர் வழங்கினார். அவர் இன்றும் என் இல்லத்திற்கு வருவார்," என்று இயம்பினாள். அன்றிரவு அவ் விலைமகள் கருவூர்த் தேவரை எண்ணினாள். அச் சித்தர் வந்தார். அவரைக் காவலாளர் பிடித்துக் கோவில் அதிகாரிகளிடம் கொண்டு போனார்கள். கோவில் அதிகாரிகள் சித்தரைப் பார்த்து, "மாலையை எப்படிக் களவு செய்தாய்?" என்று உசாவினார்கள். தேவர், "திருவரங்கநாதரே எனக்கு மாலையைத் தந்தனர்," என்று கூறினார்.

கோவில் அதிகாரிகள் தேவர் மொழியைக் கேட்டு நகைத்தார்கள். "அரங்கநாதனை அவைக்கு அழைத்து அதனை மெய்ப்பிக்க வேண்டும்," என்றார்கள். தேவர் திருவரங்கநாதனுக்குத் தெரியப்படுத்தினார். அரங்கநாதன் விண்ணில் தோன்றினார். யாவருங் கேட்குமாறு, "மாணிக்க மாலையை நாமே கருவூர்த் தேவருக்கு வழங்கினோம்," என்று இயம்பி மறைந்தார். திருமாலடியார்கள், குற்றம் பொறுக்க வேண்டுமென்று தேவரை வேண்டிக் கொண்டார்கள். தேவரும் அவர்கட்கு அருள்புரிந்து கருவூரையடைந்தார்.

கோனிடம் கோள்

கருவூர்த் தேவரின் குலத்தினராகிய அந்தணர்கள் ஒருநாள் இரவு அரசன் இடத்திற்குப் போய்க், "கருவூர்த் தேவர் குலத்திற்குத் தகாத செயல்களைச் செய்கின்றார். மதுவும் ஊனும் மாந்தி வாமபூசை செய்கின்றார். அவரைக் கண்டித்தல் வேண்டும்," என்று கோனுரை கூறினார்கள். கருவூர்த் தேவரைக் கண்டிக்கக் காவலன் இசைந்தான். தேவரது இருப்பிடத்திற்குச் சென்றான். கருவூர்த் தேவர் கட்டளைப்படி அவருடைய மாணவர் இருப்பிடம் முழுவதையுஞ் சுற்றிக் காட்டினார். மதுவையும் ஊனையும் எங்குங் காணவில்லை. தூய பொருள்களே இருந்தன. அரசன் அவைகளைக் கண்டு ஐயந் தெளிந்தான். தேவருடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். பிறகு தேவர் அரசனைப் பார்த்து, "இப்போது இங்குள்ள அந்தணாளர்களின் இருக்கைகளையெல்லாம் ஆராய்ந்து பார்," என்று கூறினார். அரசன் அவ்வாறே சென்று எல்லாருடைய இருப்பிடங்களையும் ஆராய்ந்து பார்த்தான். யாண்டும் .. துக்குடங்களும்

ஊனும் நிறைந்திருத்தலைக் கண்டான். அவர்கள் மீது சினங்கொண்டு நகரத்தை விட்டுத் துரத்தினான்.

வீடுபேறு

கருவூர்த்தேவர் அரசனைப் பார்த்து, "அவர்களை விரட்டவேண்டாம்," என்று கூறினார். கருவூர்த் தேவரிடம் பகைமைகொண்ட அந்தணர்கள் கருவூர்த்தேவர்க்கு இடையூறு செய்யவேண்டும் என்னும் எண்ணத்துடன் ஆம்பிர நதிக்கரையில் கூடியிருந்தார்கள். ஆம்பிர நதிக்குச் சென்ற தேவர் அந்தணர் கையில் அகப்படாமல் திருவானிலைக்கோயிலுக்குத் திரும்பினார். அந்தணர்களும் பின் தொடர்ந்து கோயிலை யடைந்தார்கள். கருவூர்த் தேவர் பசுபதீச் சுரரைத் தழுவிக்கொண்டார். அவர் வீடுபேற்றை அடையவேண்டிய காலம் அண்மியபடியால் சிவபெருமான் திருவடி நீழலைச் சேர்ந்தார். அந்தணர்கள் தேவரின் மெய்யன்மையும் சிவபெருமானுடைய திருவருளையுங் கண்டு அஞ்சித் தாங்கள் செய்த குற்றத்திற்காக உள்ளம் வருந்தினார்கள். "அந்தணாளர்களின் தவறுகள் மன்னிக்கப் பட்டன," என்று விண்ணொலி எழுந்தது. அதனைக் கேட்டு அனைவரும் வியப்படைந்தார்கள்.

திருவிசைப் பாவையல்லாமல் கருவூரார் இரண்டொரு மருத்துவ நூல்களும், பூசாவிதி என்னும் நூலும் செய்திருப்பதாக அறியப்படுகிறது. கருவூர்த் தேவர் வரலாற்றைக் கொங்குமண்டல சதகம் பின்வருமாறு கூறுகிறது :

"வாய்த்தம் பலவெச்சி லாலட்ட பந்தன மாண்புறமீன்
காய்த்து மரஞ்சொரி யச்செய்து பத்தி கனிந்துசெந்தேன்
தோய்த்த திருவிசைப் பாப்பா டொருசித்தர் தோன்றிவர
வாய்த்த கருவூர்ப் பதிசேர்வ துங்கொங்கு மண்டலமே."

ரு. புராணத் திருமலைநாதர்

ஊர், காலம் முதலியன

பிற்காலத்தில் புராணத் திருமலைநாதர் என்று வழங்கப்பெற்ற திருமலைநாதர் இற்றைக்கு ஏறக்குறைய நானூறு யாண்டுகட்கு முன் இருந்தார். இவர் பிறந்த ஊர் காலம் முதலியன விளக்கமாகத் தெரியவில்லை. இவர் காஞ்சியில் உள்ள ஞானப்பிரகாச மடத்துப் பெரியார்களிடம் கல்வி கற்றுச் சமயதீக்கை பெற்றுச் சிறந்து விளங்கினார். இவர் அடிக்கடி தில்லையை அடைந்து கூத்தப் பிரானைப் போற்றிச் செல்வது வழக்கம்.

சிதம்பர புராணம்

திருமலைநாதரின் கல்விச் சிறப்பை யறிந்த தில்லை மூவாயிரர்கள் இவரைக் கொண்டு தில்லைக்குப் புராணஞ் செய்விக்க வேண்டும் என்று எண்ணினார்கள். வடமொழி நூல் ஒன்றைக் கொடுத்து அதனை மொழிபெயர்த்துப் பாடச் சொன்னார்கள். திருமலைநாதரும் அவ்வாறே பாடினார். அவ் வடமொழிப் படியில் இறுதிப்பகுதியில்லை. அதனை முடித்தற்கு எவ்வளவோ முயன்றும் இறுதிப் பகுதி அகப்படவில்லை. அப் புராணத்தைப் பாடிய பிறகு அவருடைய பெயர் புராணத் திருமலைநாதர் என நீண்டு நின்றது.

சொக்கநாத உலா

பிறகு திருமலைநாதர் மதுரைக்குச் சென்றார். அப்பொழுது அங்கு அரசாட்சி செய்துகொண்டிருந்த வீரமாறன் என்பவனோடு பழக்கம் ஏற்பட்டது. அம் மன்னன் திருமலைநாதரைத் தன் அவைக்களப் புலவராக இருக்குமாறு வேண்டிக் கொண்டான். திருமலைநாதரும் அவ்

வாறே அங்குத் தங்கி அம் மன்னனுக்குத் தமிழ்ச் சுவையைப் புகட்டிக் கொண்டிருந்தார். அக் காலை சொக்கநாதர் உலா என்னும் நூலை மதுரையில் எழுந்தருளிய சொக்கநாதப் பெருமானைமீது பாடினார். அவ்வுலா 516 கண்ணிகளைக் கொண்டது. மதுரைக் கடவுள் இயற்றிய 64 திருவிளையாடல்களும் ஒன்பது பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு உலாவில் அமைக்கப் பெற்றுள்ளன.

பரஞ்சோதி என்னும் மகன்

புராணத் திருமலைநாதருக்குப் பரஞ்சோதி என்னும் பெயருடைய மகனார் ஒருவர் இருந்தார். இவர் தம் தந்தையாகிய திருமலைநாதரிடமே இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தாமும் இலக்கண நூல் செய்யக்கூடிய ஆற்றலடைந்து பொருத்த இலக்கணமும் நூல்இலக்கணமும் அமைந்த சிதம்பரப் பாட்டியல் என்னும் அரிய இலக்கண நூல் ஒன்றையுஞ் செய்தார். சிதம்பரப் பாட்டியல் என்னும் நூலைச் செய்த பரஞ்சோதியார் புராணத் திருமலைநாதருடைய மகன் என்பது,

"பூமன்னு பொழில்வெண்ணெய் மெய்கண்டான் கச்சிப்
புகழ்புனைதத் துவஞான ப்ரகாசமாய் வந்து,
பாமன்ன வுரையென்ன வனருளா லவன்றன்
பதம்பரவிச் சிதம்பரப்பாட் டியலெனப்பேர் வகுத்தான்;
மாமன்னு சிதம்பரபு ராணமுதல் நூலும்
மதுரையுலா வும்பகர்ந்தோன் மருவுகுல மைந்தன்,
தேமன்னு புராணகலை பலதெரிபு ராணத்
திருமலைநா யகனருளின் தேசுபூண் டோனே."

"சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழால்
சிதம்பரபு ராணமுதற் செய்து—விதம்பெறுசீர்
சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தால்
சார்ந்தபரஞ் சோதியென்பான் தான்."

என்னுஞ் செய்யுட்களால் பெறப்படுகின்றன.

திருமலைநாதர், சிதம்பர புராணம், சொக்கநாதருலா ஆகியவைகளையன்றி வேறு நூல்களும் பல செய்தார். அவைகள் காலப்போக்கில் மறைந்துவிட்டன. மதுரைச் சொக்கநாதருலா அச்சியற்றப்பெற்று வெளிவந்துலவுகிறது.

---

௩. முத்துத்தாண்டவர்

ஊர்

முத்துத்தாண்டவர் திருஞானசம்பந்தப் பிள்ளையார் தோன்றிய சீகாழியிலே தோன்றினார். அவருக்கு இடப்பட்ட பிள்ளைப்பெயர் தாண்டவன் என்பது. முத்துத் தாண்டவர் இளமைக் காலத்தில் விலைமகளிர் கூட்டுறவைக் கொண்டார். அதனால் குட்டநோய் உண்டாயிற்று. கை கால்களின் விரல்கள் குறைந்தன. கண்டவர்கள் முத்துத்தாண்டவரை இகழ்ந்து ஒதுக்கினார்கள். அதன் பின் முத்துத்தாண்டவர் கோயிலிலேயே அமர்ந்து கடவுளை எண்ணி எண்ணி வழிபட்டார். "தமது நோயைப் போக்கியருள வேண்டும்," என்று இறைவன்பால் வேண்டிக் கொண்டார்.

விலைமகளே தேவி

அந் நாளில் சீகாழிக் கோயிலில் சிவபாக்கியம் என்னும் பெயருடைய தேவகணிகை ஒருத்தி தொண்டு செய்திருந்தாள். அவள் இறைவனிடத்தில் பேரன்புடையவள். இறைவன்மீது கொண்ட அவளுடைய தூய அன்பு அவளை உயர்நிலையில் நிற்கச் செய்தது. அவள் நாள்தோறுந் திருக்கோயிலை அடைந்து இனிய இசையுடன் பாடுவாள். அன்பு மிகுதியினால் ஆடுவாள். அவளுடைய மெய்யன்பு முத்துத்

தாண்டவருக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவர் அவளிடமும் அச்சமும் அன்புங்கொண்டார். அவளுடைய அழகை அவர் விரும்பவில்லை. அவளது இறையன்பையே அவர் பாராட்டினார். அக் கணிகையைத் தேவியாகவே போற்றினார்.

இறைவியின் திருவருள்

ஒரு நாள் இரவு முத்துத்தாண்டவர் நீண்டநேரம் கோயிலில் இருந்தார். பசிப்பிணி அவரை வருத்தியது. வாகன மண்டபத்திற்குச் சென்று ஒரு வாகனத்தின் கீழ் படுத்து உறங்கிவிட்டார். நள்ளிரவுப் பூசை முடிந்த பிறகு கோயிலைப் பூட்டிக்கொண்டு எல்லோரும் சென்றுவிட்டனர். அப்பொழுது இறைவி ஒரு சிறு பெண்ணாக முத்துத் தாண்டவருக்கு முன்னால் தோன்றினாள். முத்துத் தாண்டவரைத் தட்டி யெழுப்பினாள். முத்துத்தாண்டவர் திடுக்கிட்டெழுந்தார். இறைவி முத்துத்தாண்டவரைப் பார்த்து, "வருத்தமுறாதே; உணவு இதோ இருக்கிறது; உண்டு பசி தீர்," என்று கூறி உணவளித்தாள். முத்துத் தாண்டவர் அவ்வுணவினை உண்டு பசி தீர்ந்தார். பிறகு தேவியைப் பார்த்து, "எனது பசிப் பிணியைத் தீர்த்தாற் போல் பிறவிப்பிணியையுந் தீர்த்தருள வேண்டும்," என்று வேண்டிக்கொண்டார். இறைவி முத்துத்தாண்டவரைப் பார்த்து, "நீ தில்லைக்குச் செல். எல்லா நலன்களும் உண்டாகும்," என்று கூறி மறைந்தாள்.

முத்துத்தாண்டவர் இறைவியின் திருவருளை எண்ணி எண்ணி மகிழ்ந்தார். அம்பிகையின் திருமுன் சென்று உட்கார்ந்து மெய்ம்மறந்திருந்தார். விடியற்காலையில் கோயிலைத் திறந்தனர். முத்துத்தாண்டவரைக் கண்டதும் மெய்காவலன் திடுக்கிட்டான். "இரவில் களவுசெய்வ

தற்கு இங்கு வந்தாயோ? எவ்வழியாக வந்தாய்? எப்படி வந்தாய்?" என்று பல கேள்விகளை அடுக்கினான்.

தில்லைக்குச் செல்லுதல்

முத்துத்தாண்டவர் கோயிலுக்குள் இருந்த செய்தி எங்கும் பரவிற்று. பலபேர் கோயிலுக்கு வந்து கூடினார்கள். எல்லோரும் முத்துத்தாண்டவரை உசாவினார்கள். முத்துத்தாண்டவர் நிகழ்ந்ததைத் மொழிந்தார். அவரிடந் தோன்றிய மாறுதலையும் உடலொளி விளக்கத்தையுங் கண்டவர்கள் அவர் கூறியதை நம்பினார்கள். முத்துத்தாண்டவர் உடனே தில்லைக்குப் புறப்பட்டார். தில்லையை அடைந்ததும் அவருக்கு எல்லையற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. கூத்தப்பிரானைப் போற்றி வணங்கினார். திருவருளால் இசைப்பாடல்களை இயற்றும் ஆற்றல் அவருக்கு உண்டாயிற்று. உடனே அவர், கூத்தப்பிரான் மீது பாடல்களியற்றினார். கூத்தப்பிரான் படிக்காசுப் புலவருக்குப் பொருள் அளித்ததுபோல் முத்துத்தாண்டவருக்கும் பொருள் அளித்தார். நாள்தோறும் பஞ்சாட்சரப் படியில் ஐந்துபணம் வைத்தார். முத்துத்தாண்டவர் அப்பொருளைக் கொண்டு தமக்கு வேண்டியவைகளைத் தேடிக்கொண்டார்.

ஆறு வழிவிடல்

முத்துத்தாண்டவர் தில்லையில் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுவிட்டுத் தம் ஊரான சீகாழிக்குத் திரும்பிவிடுவார். எக்காரணத்தாலோ அவர் தில்லையில் தங்கியிருக்கவில்லை. முததுத்தாண்டவர் ஒருநாள் சீகாழியில் இருந்து புறப்பட்டுக் கொள்ளிடக் கரையை அடைந்தார். கொள்ளிடம் ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடிக்கொண்டிருந்தது. எவ்வாறு ஆற்றைக்கடந்து செல்வது என்று எண்ணமிட்டார். அந்த இடத்தில் நின்றுகொண்டே

கூத்தப்பிரானைப் பாடினார். பிறகு எது நேர்ந்தாலும் நேரட்டும் என்னும் துணிவுடன் ஆற்றுநீரில் இறங்கினார். ஆறு திருவையாற்றில் சமயாசாரியர்கட்குப் பிரிந்து வழி விட்டதுபோல் பிரிந்துவிட்டது. முத்துத்தாண்டவர் அவ் வழியே இறங்கிச் சென்று மறுகரையை அடைந்தார்.

பாம்பு நஞ்சுக்கு மருந்து

ஒருநாள் முத்துத்தாண்டவர் தில்லையிலிருந்து சீகாழியை நோக்கிப் புறப்பட்டார். வழியில் புதர்கள் அடர்ந்த ஓரிடத்தில் நச்சரவு ஒன்று தாண்டவரைத் தீண்டிவிட்டது. உடனே தாண்டவர்,

பல்லவி

அருமருந்தொரு திருமருந்து
அம்பலத்தே கண்டேனே　　(அரு)

அநுபல்லவி

திருமருந்துடன் வரு மருந்து
தில்லை அம்பலத் தாடு மருந்து
இருவினைகள் அறுக்கும் மருந்து
ஏழைஅடியார்க் கிரங்கு மருந்து　　(அரு)

சரணம்

திருத்தித் தித்தியென் றாடுமருந்து
தேவாதி மூவர்கள் காணுமருந்து
கருத்தைத் திருத்தி இருத்துமருந்து
காலனைக் காலால் உதைத்தமருந்து　　(அரு)

என்னும் இசைப்பாட்டைப் பாடினார். பாம்பு நஞ்சு இறங்கி விட்டது.

முடிவு

முத்துத்தாண்டவர் கூத்தப்பிரானைப் பல ஆண்டுகள் போற்றியிருந்து பின் திருவடி நீழலை யடைந்தார்.

எ. ஈழத்துக்குச் சென்ற இரு புலவர்கள்

புலவர் வறுமை

ஏறக்குறைய அறுநூறுயாண்டுகட்கு முன்னர்ப் பாண்டிய நாட்டிலே தெய்வத் திருவருள் கைவரப்பெற்ற இருபுலவர்கள் இருந்தனர். இருவரும் பல நூல்களைக் கற்றுத் துறைபோயவர்கள். இருவருக்கும் தெய்வத் திருவருள் இனிது அமைந்திருந்தது. ஆயினும் புலவர்களைப்பற்றி வாட்டும் வறுமை இருவரையும் நன்கு வருத்தியது. மிடிக்கனலால் அவர்கள் நன்கு வாட்டப்பெற்றனர்.

ஈழத்துக்கேகல்

அந்நாளிலே ஈழநாட்டில் தமிழ்நாட்டரசன் ஒருவன் அரசாட்சி புரிந்திருந்தான். தமிழ்நாட்டில் இருந்து புலவர்கள் சென்றால், அவர்களை அவன் மிகவும் போற்றி அவரவர் தகுதிக்கேற்றவாறு பரிசில்கள் வழங்கி அனுப்பிக் கொண்டிருந்தான். அம்மன்னனின் புகழைக் கேட்ட இருவரும் புறப்பட்டு ஈழநாட்டை யடைந்து அரசன் அவையை அடைந்தனர். இதில் வியக்கத்தக்க செய்தி என்னவென்றால், புலவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் உணரார். இருவரும் அரசனை அடைந்து அவன்மீது அருமையான செய்யுட்களைப் பாடினார்கள். அரசன் இருவருக்கும் ஒரே தன்மையில் நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச்செய்தான். அப்பொழுதுகூட ஒருவரை ஒருவர் உணர்ந்து நட்புக் கொள்ளவில்லை. இருவரும் தாந்தாம் உயர்ந்தவரென்றும் தத்தமக்கே சிறந்த பரிசுகள் வழங்கவேண்டும் என்றும் போட்டியிட்டனர்.

வியத்தகு நிகழ்ச்சி

இருவரில் உயர்ந்தவர் யார், தாழ்ந்தவர் யார் என்று அரசனால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதன் பொருட்டு

அவன் ஒரு சூழ்ச்சியை உள்ளத்தில் எண்ணிக்கொண்டு இருவரையுஞ் சிறிதுகாலம் அவ்விடமே தங்கியிருக்கப் பணித்தான். புலவர்களும் அவ்வாறே தங்கியிருந்தனர். அந்நாளில் கதிர்காமத்தில் திருவிழா நடைபெறத் தொடங்கியது. ஒருநாள் முருகப்பெருமான் மஞ்ஞையூர்தியில் திருவுலாப் போந்தருளினர். அரசன் அறிஞர்கள் இருவருடனும் அங்குச் சென்றான்.

புலவர்கள் இருவரையும் பார்த்து, "உங்களில் ஒருவர், முருகப்பெருமானுடைய ஊர்தியாக அமைந்துள்ள மயில் தன் வாயிற் பற்றியுள்ள பாம்பை விட்டுவிடும்படியாகப் பாடவேண்டும். உடனே அந்தப் பாம்பை மயில் பற்றிக் கொள்ளும்படியாக மற்றவர் பாடவேண்டும். இதனுல் நான் உங்கள் தகுதியறிந்து உங்கள் விருப்பப்படியே நடப்பேன்," என்று நவின்றான். அரசன் கூறிய இம்மாற்றங்களைக் கேட்ட உடனே ஒருபுலவர்,

> தாயரவைச் சீறிவரு சந்த்ரோத யந்தனக்குன்
> வாயரவை விட்டுவிட வேண்டாவோ—

என்று அரைவெண்பாப் பாடினர். உடனே மயிலின் வாயில் அமைக்கப்பட்டிருந்த பாம்பு வாயிலிருந்து நழுவி விழுந்தது. இதனைக் கண்டதும் மற்றைப் புலவர்,

> —தீயரவைச்
> சீறுமடி யார்பரவும் செங்கதிர்கா மப்பெருமாள்
> ஏறு மயிலே எடு.

என்றார். அவ்வளவில் நழுவிவிழுந்த பாம்பு மயிலின் வாய்க்கு முன்னிருந்தபடியே போய்விட்டது. இதனைக் கண்டு அரசன் பெரு வியப்படைந்தான். புலவர் இருவரும் சமமான பெருமையுடையவர்கள்தான் என்று முடிவு செய்து, இருவரும் விரும்பியவைகளையெல்லாம் வழங்கிப்

போற்றினன். அதன்பின் இருவரும் நண்பர்களாகி நாடு திரும்பினர். இவ்வளவு பெருமையுடையவர்களாக விளங்கிய அவர்கள்கூடத் தமது பெயரை உலகில் நிலைநாட்டாமல் மறைந்து போயினர்.

அ. அரச கேசரி

தோற்றம்

ஏறக்குறைய ஐந்நூறு யாண்டுகளுக்குமுன் யாழ்ப்பாணத்து நல்லூரிலே அரசகேசரி என்னும் மன்னர் குலப் புலவர் ஒருவர் தோன்றினர். இவர் பரராச சேகர மன்னரின் மருகர். இவர் தோன்றிய சமயம் சைவசமயம்.

கல்விப் பயிற்சி

இவர் மன்னர் குலத்தில் தோன்றியும் கல்வியிலே கருத்துச் செலுத்தினர். தம் மாமனாகிய பரராச சேகரரைப் போல் கல்வியிற் சிறந்து விளங்கவேண்டுமென்று பெருவிருப்புக்கொண்டார். அந்நாளில் பாண்டி மண்டலத்தில் ஆழ்வார் திருநகரியில் அட்டாவதானம் இராமாநுசக் கவிராயர் என்பவர் கல்வியறிவிற் சிறந்து விளங்கினர். அரசகேசரி ஆழ்வார் திருநகரியை அடைந்து இராமாநுசக் கவிராயரிடம் கல்வியை நன்கு கற்றார். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு முதலிய சங்கநூல்களையெல்லாம் ஐயந்திரிபறக்கற்று அவைகளிலெல்லாம் வல்லவரானர். வடமொழி வல்லாரிடத்தில் அம் மொழியையும் நன்கு கற்றுத் தேறினர்.

நூல் இயற்றல்

காளிதாசரால் செய்யப்பெற்ற இரகு வமிசத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினர். இந்நூல் 2500

செய்யுட்களைக் கொண்டதாய்ச் சொன்னயம், பொருள் நயம், கற்பனாலங்காரம் முதலிய நூல் அழகுகளெல்லாம் அமையப்பெற்றுச் சிறந்து விளங்குகிறது. இந்நூலின்கண் திலீப மன்னன் காமதேனுவை வழிபட்டு மகனாக இரகு என்பவனைப் பெற்றகதையும், இரகுவின்கதையும், இரகுவின் மகனான அயன் கதையும், அவன் மகன் தசரதன் கதையும், தசரதன் மகன் இராமன் கதையும், இராமன் மகன் குசன் கதையும் பிறவும் சொல்லப்படுகின்றன. செய்யுட்கள் பல விடங்களில் அரிதிற் பொருள் உணருமாறு விளங்கும். இந்நூல் திருவாரூரில் தியாகேசர் திருமுன்பு அரங்கேற்றஞ் செய்யப்பட்டதென்பர். அரசகேசரியைப் பற்றிய பிற வரலாறுகள் விளக்கமாகவில்லை.

சக. சேந்தனார்

சேந்தனார் என்பவர் பட்டினத்தடிகள் இல்லறத்தில் இருந்தபோது பட்டினத்தடிகளின் தலைமை அலுவலாளராக அமைந்திருந்தார். பட்டினத்தடிகள் துறவை மேற்கொண்டு சென்றபின் அரசன் பட்டினத்தடிகளின் செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டு சேந்தனாரைப் பார்த்து, "பட்டினத்தாரின் செல்வம் அளவுகடந்தது என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய பொருள்கள் இன்னும் எங்கெங்குள்ளன காண்பிப்பீராக," என்று சொல்லி வருத்தினான். சேந்தனார், "உள்ளன இவ்வளவுதான். மேற்கொண்டு நான் ஒன்றும் அறியேன்," என்றார்.

அரசன் சேந்தனார் உரைகளை நம்பவில்லை. அவரைச் சிறையில் அடைத்து வருத்தினான். சேந்தனாருடைய மனைவியும் ஒரே மைந்தனும் அரசனுடைய கொடுங்

கோலுக்கு அஞ்சினர். கூலிவேலை செய்து நாள் கழித்த னர். பட்டினத்தார் பல விடங்களினுஞ் சுற்றித் திரிந்து திருவெண்காட்டை யடைந்தார். சேந்தனுருடைய மனைவி யும் மைந்தனும் பட்டினத்தடிகளைக் கண்டு தொழுது வணங்கிக் கதறியழுதார்கள். அவர்களுடைய வருத்தத் தைக் கண்டு பட்டினத்தடிகள் உள்ளம் இரங்கினுர். "நீங் கள் யாவர்? உங்களுக்கு நேர்ந்த குறை யாது?" என்று உசாவினுர். அவர்கள் நிகழ்ந்ததைக் கூறினுர்கள். உடனே அடிகள் மனமிரங்கி,

> "மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மன்னினுனும்
> நித்தமுந் தேடிக்காணு நிமலனே அமல மூர்த்தி
> செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தற்கு வேந்தனிட்ட
> கைத்தளை நீக்கி என்முன் காட்டுவெண் காட்டுளானே."

என்ருெரு செய்யுளைப் பாடினுர். அவ்வளவில் இறைவன் கட்டளைப்படி ஆனைமுகக்கடவுள் சேந்தனுரின் விலங்கைத் தறித்துப் பட்டினத்தடிகளின் முன்னர் உய்த்தார். சேந்த னுர் பட்டினத்தடிகளை வணங்கினுர். பட்டினத்தடிகள் அவருக்கு அருள்புரிந்தார். "திருத்தில்லைக்குச் சென்று காட்டு விறகின் விலையினுல் அடியவர் ஒருவருக்கு அமு தருத்தி அங்கு உறைக," என்று கட்டளையிட்டார். சேந்த னுர் தில்லையை அடைந்து அடிகள் கட்டளைப்படியே நடந்து வந்தார்.

ஒருநாள் சோழமன்னன் தில்லைக் கூத்தப்பிரானுக் குச் சிறப்பான வழிபாடுகள் செய்து பூசை செய்விக்கப் போனுன். அப்போது விண்ணெுலி ஒன்று, "நாம் இப் போதுதான் சேந்தனிட்ட களியை உண்டனம். உனது பூசையைச் சிறிதுபோது பொறுத்துச் செய்யலாம்," என்று எழுந்தது. மன்னன் அவ்வொலியைக் கேட்டான். சேந்தன் என்னும் அருந்தவன் யாவனோ தெரியவில்லையே.

நாம் அவனை எப்போது கண்டு வணங்கப்போகிறோமோ என்று உள்ளம் வருந்தினான். "சேந்தன் என்னும் பெரியாரை எனக்குத் தெரிவிப்பவர்கட்கு நன்கொடை மிக வழங்குவேன்," என்று பறையறைவித்தான். வேற்றூரில் இருந்து தில்லைக்குள் நுழையும் எல்லையில் ஆயம் வசூலிக்கும் கணக்கன் ஒருவன், "சேந்தனை நான் அறிவேன்; நண்பகற்போதில் அவனைக் காட்டுகிறேன்," என்று கூறினான். அரசனும் மற்றையோரும் சுங்கச் சாவடியில் திரண்டிருந்தனர்.

சேந்தனார் காட்டில் இருந்து விறகுவெட்டி மனைவிமக்களுடன் கட்டித்தூக்கிக்கொண்டு சுங்கச் சாவடியை நெருங்கினார். சாவடியில் கூட்டம் மிகுதியாக இருந்தலைக் கண்டு நம்மிடம் இருந்து தீர்வைப் பணத்தைப் பெற்றுக் கொண்டு உள்ளே விடுவதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ தெரியவில்லையே என்று எண்ணமிட்டுக்கொண்டு வந்தார். சுங்கக்கணக்கன் முன்னால் வந்து சேந்தனாரை அரசனுக்குக் காட்டினான். அரசன் உடனே கீழே விழுந்து சேந்தனாரை வணங்கினான். சேந்தனார் மருண்டு ஒருபக்கமாக ஒதுங்கி நின்றார். கூடியிருந்த மக்கள் அரசனுக்குப் பித்து மிகுந்துவிட்டதோ என்று எண்ணமிட்டுக்கொண்டு நின்றார்கள். சேந்தனார் அரசனைப் பார்த்து, "அரசே உன்னால் சிறையிடப்பட்டு வருந்திக்கிடந்த என்னை நீ வணங்குவது முறைமை அன்று," என்று கூறினார். அரசன் சேந்தனாரைப் பார்த்து, "நீ கூத்தப்பிரானது திருவருட்குரியோன். உனது பெருமையை நான் உணர்ந்து கொண்டேன். எனது வழிபாட்டை ஏற்றுக்கொண்டு நீங்கள் இனிமேல் எனது அரண்மனையில் அமர்ந்திருத்தல் வேண்டும்," என்று கூறி வேண்டிக்கொண்டான். அரசனுடைய வேண்டுகோளுக்குச் சேந்தனார் இணங்கவில்லை.

மேலும் இறைவன் திருவடித்தொண்டைக் குடும்பத்துடன் செய்துகொண்டிருந்தார்.

மார்கழித் திருநாள் ஒன்றிலே தேர் ஓடாமல் தெருவிலே சேற்றில் தடைப்பட்டு நின்றது. அதனை இழுத்து நிலையிற் சேர்த்தற்கு அரசன் பெருமுயற்சி செய்தான். கூத்தப்பிரான் சேந்தனாரது பெருமையை இப்பொழுதும் வெளிப்படுத்த எண்ணினார். அவர் விண்ணொலியாக "சேந்தா நீ தேர் நிலைக்கு வருமாறு பல்லாண்டு பாடுக," என்று திருவாய் மலர்ந்தருளினார். உடனே சேந்தனார் திருப்பல்லாண்டு பாடத் தொடங்கினார். கூத்தப்பிரான் திருவருளால் செய்யுள் பாடும் ஆற்றலும் சேந்தனார்க்கு உண்டாயிற்று.

"மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க,
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே."

என்று தொடங்கித் திருப்பல்லாண்டு பாடியருளினார். உடனே எல்லோரும் மனங்களிக்கும்படி தேர்விரைந்து சென்று நிலையை அடைந்தது. மக்கள் சேந்தனாரின் பெருமையை நன்கு உணர்ந்து போற்றி வழிபட்டார்கள். சேந்தனாரால் இயற்றப்பெற்றவைகள் திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருவிடைக்கழி முருகர் பதிகம் முதலியவைகள். இவைகள் ஒன்பதாந் திருமுறையிலே சேர்க்கப்பெற்றுள்ளன. சேந்தனார் கூத்தப்பிரான் திருவடிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்து வீடுபேற்றை யடைந்தார்.

---

௧௦. தலைமலைகண்ட தேவர்

தலைமலைகண்ட தேவர் என்பவர் மறவர் குலத்திலே தோன்றினார். முற்பிறப்பின் நல்வினையினால் நல்லறிவு மிக்கவராய் விளங்கியிருந்தார். அவருடைய குலத்தொழில் போர் செய்தல். ஆயினும் தலைமலைகண்ட தேவர் குலத் தொழிலில் ஈடுபடாமல் நல்லொழுக்கத்தில் நிலைத்து நின்றார். இளமை முதற்கொண்டே நல்லவர்களுடைய கூட்டுற வும் சிவபெருமானுடைய திருவடிகளிடத்திலே நிறைந்த அன்பும் தலைமலைகண்ட தேவரிடத்திலே பொருந்தியிருந் தன. செய்யுள் பாடுந்திறனும் தலைமலைகண்ட தேவரிடம் நன்கு அமைந்திருந்தது.

தலைமலைகண்ட தேவரின் மனைவியொடு பிறந்தவர்கள் ஏழுபேர். அவர்கள் போர்புரிதல் வேட்டையாடுதல் கன்னம்வைத்துக் களவுசெய்தல் முதலிய மறக்குலத் தொழிலை மேற்கொண்டு காலங்கழித்திருந்தார்கள். தலைமலைகண்ட தேவர் அவர்களைப்போல் தொழில் பழகாமல் ஏடுங் கையுமாக இருந்தமையால், வறுமையால் பிடிக்கப் பட்டார். தேவரின் மனைவியோ கணவன் குலத்தொழிலில் புகாமையைக் கண்டு உள்ளம் வருந்தினாள். தேவர் தம் மனைவியைப் பார்த்து, "நம்மை இறைவன் காப்பாற்று வான். இந்த வறுமையைக்கண்டு உள்ளம் வருந்தாதே," என்று ஆறுதல் உரைகள் கூறினார். ஆனால், தேவரின் மனைவிக்கு மனநிறைவு உண்டாகவில்லை. கணவனும் தன் உடன் பிறந்தார்களோடு களவிற்குச் செல்லவேண்டும் என்று எண்ணினாள். தன் விருப்பத்தைக் கணவனிடமுந் தெரிவித்தாள். தேவரோ களவுக்குச் செல்ல விரும்ப வில்லை. நாள்தோறும் வறுமையின் கொடுமை மிகுந்து வந்தது. மனைவியின் தொல்லையோ வளர்ந்தது. தன்னுடன்

பிறந்தாரின் மனைவிமார்கள் உதவுவதைக் கொண்டே குடும்பம் நடத்திய அம் மாது ஒருநாள் தன் கணவனையும் தன்னுடன் பிறந்தார்களோடு களவுக்குச் செல்லுமாறு மிகவும் வற்புறுத்தினாள். அக் காலை தலைமலைகண்ட தேவர் இறைவன்மீது யமகவந்தாதி ஒன்று பாடி முடித்திருந்தார். அவ்வந்தாதி திருக்கடவூர்ச் சிவபெருமான்மேல் இயற்றப் பெற்றது. மனைவியின் தொல்லையையும் வறுமையின் கொடுமையையும் பொறுக்காத தேவர், ஒருநாள் தாமும் தம் மைத்துனன்மார்களோடு களவுக்குச் செல்ல இணங்கினார். தேவரின் மனைவி அச் செய்தியைத் தன்னுடன் பிறந்தவர்களுக்குத் தெரியப்படுத்தித் தன் கணவனையும் உடனழைத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டாள். அவர்களும் அதற்கு இணங்கினார்கள்.

காரிருள் மிக்க ஓர் இரவிலே தலைமலைகண்ட தேவர் தம் மைத்துனன்மார்களோடு களவுக்குப் புறப்பட்டார். அவருடைய உள்ளமோ சிவபெருமானுடைய திருவடிகளின்மேற் பதிந்திருந்தது. தலைமலைகண்ட தேவரின் மைத்துனர் ஏழுபேரும் தலைமலைகண்ட தேவரையும் உடன் அழைத்துக்கொண்டு திருப்புவனம் என்னும் ஊரில் ஒரு பெருஞ் செல்வன் வீட்டிற்குச் சென்றனர். அவ் வீட்டுக்காரன் பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வத்தையும் குறைவறப் பெற்றவன். ஒவ்வொருநாளும் இரவில் உறங்கத் தொடங்கும்போது சிவபெருமான்மீது ஒரு செய்யுள் பாடிவிட்டுத்தான் உறங்குவது என்னும் உறுதி படைத்தவன். தலைமலைகண்ட தேவரின் மைத்துனர்கள் பொருளறைக்கு நேரே கன்னக் கோலால் வழியுண்டாக்கினர். ஒருவன் தலைமலைகண்ட தேவரையும் உடனழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அன்று அந்த வீட்டுக்காரன் வழக்கம்போல் பாடத் தொடங்கினான்.

"தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்ந்தான்—உலையில்"

என்று அரை வெண்பாவைப் பாடினன். அதற்குமேல் அப் பாட்டை எப்படிப் பாடிமுடிப்பதென்று அவனுக்கு விளங்கவில்லை, நள்ளிரவு வரையில், "உலையில் உலையில்," என்று சொல்லிக்கொண்டே இருந்தான். உள்ளே களவு செய்ய நுழைந்த இருவரும் சிறிதுபோது காத்திருந்தனர். பாட்டின் பிற்பகுதியை அமைக்க வேண்டிய விதம் தலைமலை கண்ட தேவருக்கு நன்கு விளங்கிவிட்டது. அவர் தாம் இருக்கும் இடத்தையும் மறந்தார், "இருப்புவண மேனியனே என்றாலோ........" என்று கூறினர். உடனே செல்வன்,........ஆமாம் திருப்புவனத் தீசன் திறம்...." என்று பாட்டை முடித்தான். தலைமலைகண்ட தேவரோடு உள் நுழைந்திருந்தவன் தலைமலைகண்ட தேவரின் செயலைக் கண்டதும் அஞ்சி எழுந்து வெளியே ஓடிப்போனன். செல்வனல் தொடங்கப்பெற்ற பாடல் :

"தலையில் இரந்துண்பான் தன்னுடலிற் பாதி
மலைமகளுக் கீந்து மகிழ்ந்தான்—உலையில்
இருப்புவண மேனியனே என்றாலோ ஆமாம்
திருப்புவனத் தீசன் திறம்."

என்று அமைந்ததைக் கண்டதும் மகிழ்ச்சியடைந்த செல்வன் எழுந்து தேடிப்பார்த்தான். தலைமலைகண்ட தேவரைக் கண்டான். அவரைப் புகழ்ந்து போற்றினன். "தாங்கள் யார்? இந்நேரத்தில் இங்குவரக் காரணம் யாது?" என்று உசாவினன்.

தலைமலைகண்ட தேவர் தாம் ஒரு கள்வன் என்றும், களவு செய்தற்பொருட்டு வந்ததாகவும் கூறினர். தேவரின் சைவக்கோலத்தையும் முகத்தோற்றத்தையுங் கண்ட செல்வன் தேவரின் மொழியை நம்பவில்லை. மேலும்

வற்புறுத்திக் கேட்டான். தேவர் தம் வறுமையின் கொடுமையையும் மனைவியின் தொல்லையையும் பொறுக்காமல் களவுக்கு வந்ததை விவரமாகச் சொன்னார்.

செல்வன், தன்னுடைய பொருளில் வேண்டிய அளவு அள்ளி மூட்டைகட்டிச் செல்லுமாறு பணித்தான். தேவரும் அவ்வாறே கட்டிச் சென்றார். அன்றுமுதல் அவருடைய வறுமை தொலைந்தது. தேவரின் மைத்துனர்கள் நிகழ்ந்ததை அறிந்தார்கள். தாமும் அன்றுமுதல் கொலை களவு முதலியவைகளை நீக்கி நல்லவர்களாகி ஒழுகத் தொடங்கினார்கள்.

---

௧௧. வசைகவியாண்டான் புலவர்

பாண்டி நாட்டிலே ஒட்டப்பிடாரம் என்னும் ஊரிலே வசைகவியாண்டான் புலவர் தோன்றினார். அவருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் ஆண்டான் என்பது. ஆண்டானுடைய சமயம் வைணவம் என்ப. குலம் அந்தணாளர் குலம். ஆண்டானுடைய தந்தையின் பெயர் வைகுந்தநாதன்.

ஆண்டானுக்கு அகவை ஐந்து ஆனதும் அவனுடைய பெற்றோர் அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினர். ஆண்டான் கல்வி பயிலச் சென்ற பள்ளிக்கூடம் திண்ணைப் பள்ளிக்கூடம். உபாத்தியாயரோ மாணவர்கட்குக் கடுமையான தண்டங்கள் விதிப்பவராகவும் மிகக் கொடியவராகவும் இருந்தார். ஆகவே, ஆண்டான் பள்ளிக்கூடத்தைக் கொல்லுங் கொலைக்கூடமாக எண்ணினான். பள்ளிக்குப் போகாமல் ஏய்க்கத் தொடங்கினான். அகவை ஐந்திரட்டியாகியது.

ஒருநாள் ஒரு சித்தர் ஆண்டானுக்கு முன்தோன்றினார். ஆண்டானை உற்றுப்பார்த்தார். ஆண்டானுக்கு அருளுரை வழங்க எண்ணினார். காளியின் அருமறையை ஆண்டானுடைய காதுகளிலே உரைத்து, "இதனை நன்றாக உருவேற்றுவாயாகில் உனக்கு நல்ல பயன்கள் ஏற்படும்," என்று கூறிச்சென்றார்.

வெளியிலே சுற்றித்திரிந்தால் பள்ளி மாணவர்கள் பற்றிச் சென்று பள்ளியிற் சேர்ப்பர் என்று அஞ்சிய ஆண்டான், அவ்வூர்க் காளிகோயிலில் காளிக்குப்பின் பதுங்கியிருந்து அருமறையை உருவேற்றினான். நாட்கள் பல சென்றன. ஒருநாள் காளி ஆண்டானுக்கு முன் தோன்றினாள். "உனக்கு இசைபாடும் வரம் வேண்டுமா? அல்லது வசைபாடும் வரம் வேண்டுமா? இரண்டில் ஏதாவது ஒன்றினைக் கேள். அவ்வாறே கொடுக்கிறேன்," என்று திருவாய் மலர்ந்தருளினாள். வினைவழிப்பட்ட ஆண்டான், "எனக்கு வசைபாடும் வரந்தான் வேண்டும்; அதனையே அருள்வாயாக!" என்றான். உடனே காளி தேவி வேப்பிலையின் ஈர்க்கு ஒன்றினால் வல்லெழுத் தொன்றை ஆண்டானுடைய நாவில் எழுதி," உன்னுடைய வாக்கில் இருந்து பிறக்கும் மொழிகள் பிறந்தவாறே பலிக்குமே யல்லாமல் ஒன்றும் பொய்க்காது," என்று கூறி மறைந்தாள்.

ஆண்டான் காளிதேவியின் வரத்தை ஆராய்ந்து பார்க்கத் தொடங்கினான். காளி உருவச்சிலையின் ஒரு கொங்கை அற்று விழவேண்டுமென்றும் கோவிலுக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த கீற்றுக் கொட்டகை தீப் பற்றியெரிய வேண்டும் என்றும் ஒரு செய்யுள் பாடினான். உடனே சிலையின் கொங்கை அற்று விழுந்ததுடன் கொட்டகையுந் தீப்பற்றி எரிந்து தொலைந்தது.

காளி கொடுத்த வரத்தைக் கொண்டு அவளுக்கே தீமையை உண்டாக்கிய ஆண்டான் அச்சம் முழுவதையும் விட்டான். அவனுடைய குணம் கோரகுணமாக மாறியது. மறுநாள் காலையில் ஆண்டான் எழுந்து தெருவிற்போய் விளையாடினான். ஆண்டானைத் தெருவிற்கண்ட பள்ளியாசிரியர் அவனைப் பிடித்து வருமாறு சிறுவர்களை அனுப்பினார். சிறுவர்கள் ஆண்டானைக் கட்டியிழுத்துச் சென்று ஆசிரியர் முன்பு நிறுத்தினார்கள். ஆசிரியர் ஆண்டானை அடித்துத் தண்டனைகள் விதிக்கத் தொடங்கினார். ஆசிரியர் செயல் அவருக்கு நமனாக முடிந்தது.

"கூலியீந்தனன் குறைத்திலன் படித்திலன் கொடிய
கோலி லங்குகை வாத்தியான் கொண்டபெண் டாட்டி
தாலி யற்றிடும் படிவரந் தாடி ...."

என்று வசைகவியை ஆண்டான் பாடத் தொடங்கினான். பாட்டு முடியுமுன்பே ஆசிரியன் தலை படீரெனப் பிளந்தது. அவர் கீழே விழுந்து மாண்டார்.

அந்த உபாத்தியாயருக்குச் சடகோபன் என்னும் பெயருடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் தன் தந்தைக்கு நேர்ந்த கதியைக் கண்டு உள்ளங் கலங்கினான். ஆண்டான் அடிகளிலே விழுந்து புரண்டு கதறினான். அவனுடைய துன்பநிலைக்கு இரங்கிய ஆண்டான், "நான் உன்னைக் காப்பாற்றுகிறேன் அஞ்சாதே," என்று தேறுதல் மொழிகள் கூறினான்.

ஆண்டானுடைய தன்மையை உணர்ந்த செல்வர்கள் மிகுந்த அச்சங் கொண்டனர். ஆண்டானுக்குப் பொருள் சிவிகை முதலியவைகளை வழங்கினர். பொருள்களை யெல்லாம் ஆண்டான் சடகோபனுக்கே வழங்கினான். தன்மாட்டுச் சிறு பிழை புரிவார் மீதும் ஆண்டான் வசை

கவியை விசையுடன் வீசினான். உயிர்மீது நசையுடைய எவரும் வசைகவிவாணனுக்குத் தவறு செய்யத் துணிய வில்லை.

ஒருகால் ஆண்டான் வெற்றிலைத் தோட்டம் ஒன்றின் வழியாகச் சென்றான். சிறிது வெற்றிலை கொடுக்குமாறு தோட்டக்காரனிடம் கேட்டான். ஆண்டான் தன்மையை அறியாத அவன் "கொடுக்கமாட்டேன்" என்றான். அதனாற் சினங்கொண்ட ஆண்டான் வசைகவி ஒன்றைப் பாடி அவ் வெற்றிலைத்தோட்டம் கரிந்து ஒழிந்து போகும்படியாகச் செய்தான்.

திருமணம் நடந்துகொண்டிருந்த வீடு ஒன்றிற்கு ஆண்டான் சென்றான். அங்கிருந்தவர்கள் ஆண்டானை மதிக்கவில்லை. தவறுஞ் செய்தார்கள். ஆண்டான் மண வீட்டைப் பிணவீடாக்கி வேற்றிடஞ் சென்றான்.

ஒருசமயம் நாட்டில் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் உணவுக்குத் திண்டாடினர். ஆண்டான் மலையாள நாட்டு மன்னனிடஞ் சென்று ஏதேனும் பெற்றுவரலாம் என்னும் எண்ணத்துடன் புறப்பட்டான். பாண்டி நாட்டைக் கடந்து நாஞ்சில் நாட்டை அடைந்தான். ஒற்றர்கள் சிலர் இச் செய்தியை உணர்ந்தனர். விரைந்து மன்னனிடஞ் சென்று, "வசைகவி யாண்டான் என்னும் விடத்தினுங் கொடியவன் வருகிறான். அவன் வாக்கால் ஏதேனும் பாடத் தொடங்கினால் நமக்கு அழிவு நேர்தல் திண்ணம்," என்று செப்பினர். கேரளமன்னன் இதனைக் கேட்டு அஞ்சி நடு நடுங்கினான். தன்னுடைய முதலமைச்சனைப் பார்த்து, "நீ அந்த வசைகவி யாண்டான்பாற் சென்று, 'தாங்கள் யாது செய்யக் கட்டளையிட்டாலும் அவ்வாறே செய்யக் காத்திருக்கிறோம். எங்கள்மீது வசைகவி பாடாமல்

செல்லவேண்டும்' என்று வேண்டிக்கொள்," என்று சொல்லியனுப்பினன். முதலமைச்சனும் அவ்வாறே சென்று ஆண்டானைக்கண்டு வேண்டிக் கொண்டான். ஆண்டான் முதலமைச்சனைப் பார்த்துத், "திங்கள் தோறும் ஒவ்வொரு பாரஞ் சர்க்கரை ஒட்டப்பிடாரத்திற்கு அனுப்ப வேண்டியது," என்று கட்டளையிட்டுவிட்டுத் திரும்பினன்.

"அக்கணமாங் கவன்நடுங்கி முதலமைச்சன்
தனைஎவி ஐய நீயிங்கு
எக்கடமை விதித்தாலும் செய்கின்றேம்
எம்மிறைவர்க் கெதிர்வா ராமல்
மெய்க்கவியொன் றும்பகரா தேகுகெனப்
பணிந்துமிக வேண்டச் செய்தான்
சர்க்கரையோர் பாரம்மதி தோறும் அனுப்
புதிர்எனுஞ்சொல் சாற்றிப் போனன்."

திங்கள்தோறும் மலையாள மன்னனிடம் இருந்து ஒவ்வொரு பாரம் சர்க்கரை வந்துகொண்டிருந்தது. ஆண்டான் அந்தச் சர்க்கரையைப் பலருக்கும் வழங்கிக் கொண்டிருந்தான். ஆண்டானுடைய தந்தை வைகுந்தநாதன் ஒருநாள் பல தடவை, "சர்க்கரை கொடு; சர்க்கரை கொடு," என்று கேட்டுத் தொந்தரவு செய்தான். ஆண்டானுக்குச் சினமுண்டாகியது.

"நக்கவரி சித்தவிடோ ருடுப்பதற்குத்
துணியுமின்றி நாட்டில் உள்ளோர்
ஒக்கவருந் திடும்பஞ்ச காலத்தில்
சிறிதேனும் உணர்வி லாமல்
சர்க்கரைசர்க் கரையென்றே
சிணுங்குதற்குத் தலைப்பட்டாய்."

என்று பாடத்தொடங்கினன். அக்கணமே வைகுந்தநாதனது தலை திடீரென்று வெடித்தது. அவன் மாண்டு

முடிந்தான். தன் தந்தையினுடைய தலை தன் பாட்டினால் வெடித்ததைக் கண்ட ஆண்டான் உள்ளம் வருந்தினான். ஆண்டானது செயலைக் கண்டவர்கள் அனைவரும் அவனை வெறுத்தார்கள்.

ஆண்டான் வாழ்ந்திருந்த அந்தணத் தெருவில் இருந்த பைந்தொடி யொருத்தி கன்றுக்குச் சிறிதும் பால் விடாமல் நாள்தோறும் பால் கறந்தபடியினால் கன்று சாவியாகியது. இச்செய்தியை உணர்ந்த ஆண்டான் அந்த மடமாதுமீது வசைபுராணம் ஒன்று பாடினான்.

ஆண்டானது நன்செய் நிலத்தை அளந்தறிவதற்காக அந்த ஊர்க் கணக்கப்பிள்ளை வந்து அளக்கத் தொடங்கினான். கணக்கனுக்கும் ஆண்டானுக்கும் பிணக்கு நேர்ந்தது. அந்தக் கணக்கப்பிள்ளையின் கையிற் பாம்பு கடிக்குமாறு ஆண்டான் வசைகவி ஒன்று பாடினான். எங்கிருந்தோ பாம்பு ஒன்று வந்து ஆண்டானுடைய கையிற் கடித்துவிட்டது. ஆயினும் அந்தக் கணக்கப்பிள்ளை சிறிதும் அஞ்சவில்லை. கத்தியால் பாம்பு கடித்த விரலை அறுத்தெறிந்துவிட்டு வீட்டிற்குப்போய் உயிரோடிருந்தான். ஆயினும் ஆண்டான், அந்தக் கணக்கனை அந்தகன் உலகினுக்கு அனுப்பியே தீர்வதென்று முடிவுசெய்து காளிமடல் என்னும் நூலைப்பாடி அவனைக்கொன்றே தீர்த்தான்.

சிந்துக்களஞ்சியப் புலவன் என்பவன் ஒருவன் அந்நாளில் வண்ணங்கள் சிந்துகள் முதலியவைகளைப் பாடுவதில் புகழ்பெற்றவனாய் விளங்கியிருந்தான். அவன் ஒட்டப் பிடாரத்திற்குத் திக்குவிசயஞ் செய்துகொண்டு வந்து சேர்ந்தான். அவன் புலவர்களிடமெல்லாம் திறை வாங்கும் பெரும்புலவனாகப் புலவரேறாகத் திகழ்ந்துகொண்டிருந்தான். ஆண்டானையும் அடக்கித் திறைபெறவேண்டு-

மென்பது அவனுடைய எண்ணம். சிவிகையில் இவர்ந்து வந்த அவன் திண்டு மெத்தை முதலியவைகளைப் போட்டுப் பேராரவத்தோடு அமர்ந்திருந்தான். சில புலவர்கள் ஆண்டானிடஞ் சென்று சிந்துக்களஞ்சியப் புலவனின் செருக்கை அடக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர் ஆண்டான் தன்னுடைய கையில் ஒரு தேங்காயை எடுத்துக்கொண்டு சிந்துக்களஞ்சியப் புலவன்பாற் சென்றான். அப்புலவன் அமர்ந்திருந்த இருக்கையில் தானே ஆண்டானும் அமர்ந்து திண்டில் சாய்ந்தான். ஆண்டான் செயல் சிந்துக்களஞ்சியப் புலவனுக்குச் சினத்தை உண்டாக்கியது. அவன் ஆண்டானைச் சினத்துடன் பார்த்து, "என்போல் நீ சிந்து பாட வல்லையோ?" என்று உசாவினான். ஆண்டான் தான் கொண்டுபோன தேங்காயை அப்புலவன் முன்பு வைத்துத், "துண்டு துண்டு துண்டு துண்டு" என்று அடுக்கொலிச்சொல் சிலவற்றைக் கூறினான். ஆண்டான் கூறிய அத்தனை துண்டுகளாக அத்தேங்காய் தானாகவே உடைந்து சிதறியது. ஆண்டான் அத் தேங்காயைப் புலவனுக்குச் சுட்டிக்காட்டி, "இவ்வாறு பாட்டினால் உன்னுடைய தலையையும் உடைக்க வல்லேன். நீயும் இவ்வாறு செய்யவல்லையா?" என்று உசாவினான். சிந்துக்களஞ்சியப் புலவனைப் பேரச்சம் சூழ்ந்துகொண்டது. அவன் ஆண்டானை வணங்கி, "என்னை ஒன்றுஞ் செய்யாதே. நான் தோற்றேன்," என்று கூறி வந்தவழியே ஓடிப்போனான்.

ஆண்டான் ஒருநாள் எண்ணமிட்டான். "நாம் பலருடைய உயிருக்கு நமனாக இருந்தோம். சேதுக்குப் போய்க் கடலில் மூழ்கித் தீவினையைப் போக்கிக்கொள்ள வேண்டும்," என்று முடிவுசெய்தான். தான் மிக விருப்பத்துடன் நேசித்திருந்த ஒருமாதைத் தனியே விட்டுச் செல்லுதற்கு ஆண்டானுக்கு மனமில்லை. ஆகவே அவன்,

"சேதுக்குப் போய்நான் திரும்பும் அளவும்இந்த
மாதுக்குக் காவல் வயிரனும் மாடனுமே"

என்று சொல்லிவிட்டுச் சென்றான். அன்றுமுதல் அந்த மாது குடியிருக்கும் வீட்டுப்பக்கம் செல்லும் ஆடவர் உடனே குருதியைக் கக்கி மாண்டொழியத் தொடங்கினார்கள். இச்செயலைக் கண்டோர், "ஆண்டான் செயல் புலி ஏகாதசி விரதம் பிடித்தாற்போல் இருக்கிறது," என்று கூறினார்கள். திரும்பி ஊர் வந்து சேர்ந்த ஆண்டான் தான் ஊரில் இல்லாத சமயத்தில் நிகழ்ந்ததை அறிந்து உள்ளம் வருந்தினான்.

வசைகவியாண்டான் திருச்செந்தூருக்குச் சென்றான். முருகக்கடவுள்மீது செய்யுள் இயற்றத்தொடங்கினான். பழக்க வாசனையினால் வசைதான் வந்தது.

"மைச்சேலுண் கண்ணொருத்தி மாதவிடாய்க் காரியவள்
மாட்டுச் சென்று
கைச் சேட்டை செய்தகந்தா......"

என்று பாடத் தொடங்கினான். அவ்வளவில் அசரீரி, "அடடா! போதும். இந்த மட்டில் நீ நிறுத்தவில்லையானால் இன்று உன்னுடைய உயிர்க்கு முடிவுவரும். நீ இனிமேல் இந்த உலகத்தில் பலருக்கும் நமனாக இருக்க மாட்டாய். மிகுவிரைவில் விண்ணுலகஞ்செல்வாய்," என்று ஒலித்தது. இதனைக்கேட்ட ஆண்டான் எப் பதியிலும் நாம் இத்தகைய புதுமையைக் கண்டதில்லையே என்று வியப்படைந்து நாணி அவ்வூரைவிட்டுப் புறப்பட்டான்.

வழி நடந்து வேற்றூர் செல்லும்போது அவனுடைய நாவில் கொடிய புண் உண்டாயிற்று. ஆண்டான், "அந்தோ நாம் தீவழியிற் சென்று தொல்லையைத் தேடிக் கொண்டோம்," என்று உள்ளம் வருந்தினான். ஓர் ஊரில்

நோயாக ஓரிடத்தில் வீழ்ந்துவிட்டான். ஆண்டானுடைய தன்மையை உணர்ந்த எவரும் அவனை நெருங்கவில்லை. அவன் உயிர்விடும்போது ஒரு பெண், "நான் இனி எங்கு செல்வேன்," என்று கூறிக்கொண்டு அவனிடமிருந்து குதித்தோடினளாம்.

கஉ. நந்திக்கலம்பக ஆசிரியர்

நந்தி

தென்பாண்டி நாட்டிலே நெல்லை மாவட்டத்தில் பாண்டிய மன்னர்கள் காலத்தில் சிற்றரசன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் பாண்டியனுக்கடங்கிக் கப்பம் கட்டுபவன். அவனுக்கு மனைவியும் நான்கு புதல்வர்களும் இருந்தனர். அரசன் வாழ்ந்திருந்த ஊரின் சேரியில் இழி குலத்தில், மாதொருத்தி நால்வகைப் பெண்களில் பது மினியாகத் தோன்றினள். அந்த மாதின் எழில் அரசனை மயக்கியது. அவன் அவளை மணந்து இன்பந் துய்த்தான். அவளைத் தீண்டும்பொழுதெல்லாம் தீட்டுக்கழிதற்கேற்ற கழுவாயைச் செய்த பின்னரே அரண்மனையில் நுழைவான். ஆயினும் தக்கோர்கள் அரசனது செயலை வெறுத்தனர். அந்த இழிகுல மாதினிடம் மைந்தன் ஒருவன் தோன்றி னன். அரசன் அந்த மைந்தனுக்கு நந்தி என்று பெயர் சூட்டினன். அப்புதல்வன் கல்விகற்று அறிவுடையவனாக விளங்கினன்.

கடனும் சூழ்ச்சியும்

அந்நாளில் செட்டியொருவன் விலையுயர்ந்த ஆடை யொன்றை விலை கூறிக்கொண்டு தெருவழியே சென்றான்.

நந்தி செட்டியை அழைத்தான். ஆடையின் விலை யாது என்று உசாவினான். அதற்குச் செட்டி, "இவ்வாடையின் விலையைக் கேட்டு அரசனே திகைத்துப்போனான். அவனாலும் வாங்கமுடியவில்லை. அவ்வாறாக நீ விலையைக் கேட்டு யாது செய்யப்போகிறாய்?" என்றான். "மூன்றாண்டிற்குப்பின் வட்டியும் முதலுமாக விலையைத் தருகிறேன். இவ்வாடையைத் தந்துவிட்டுச் சீட்டெழுதி வாங்கிச்செல்," என்றான் நந்தி. அரசனின் மகன் நந்தி என்பதை உணர்ந்த செட்டி விலையை வசூலித்துவிடலாம் என்னும் துணிவுடன் சீட்டெழுதிப் பெற்றுக்கொண்டு ஆடையைத் தந்து சென்றான். நந்தி அந்த ஆடையைத் தாயிடம் கொடுத்தான். அவள் அதனை அணிந்துகொண்டாள். அன்றிரவு அரசன் வந்தான்; ஆடையைப் பார்த்தான். "இஃதெவ்வாறு உனக்குக் கிடைத்தது?" என்று கேட்டான். மகன் வாங்கித் தந்தான் என்றாள் மாது. அரசன் நந்தியை அழைத்து நிகழ்ந்ததை அறிந்தான். "மூன்றாண்டிற்குப் பிறகு விலையை எவ்வாறு கொடுப்பாய்?" என்று உசாவினான். "திருவருள் எவ்வாறு வழிகாட்டுமோ தெரியவில்லை," என்று நந்தி பதிலுரைத்தான். நாட்கள் பல சென்றன. அரசன் திடீரென்று இறந்தான்.

நந்தி வாள் ஒன்றைக் கையிலேந்திக்கொண்டு தன் முன்னவர்கள்பாற் சென்றான். "நீங்கள் நான்குபேர், நானோ ஒருவன். சத்திரியமாதின் வயிற்றில் பிறந்த நீங்கள் முடி சூடுவதாயின் என்னை வென்று முடி சூடுங்கள்," என்று கூறிப் போர்புரிவதற்கு அறை கூவினான். அரசனுடைய மக்கள் நால்வரும் அஞ்சினர். அந்த ஊரை விட்டே ஓடிப்போனார்கள். நந்தி அரியணை யேறினான். மறையவர்களும் பிறரும் நந்தியின் ஆட்சிக்கீழ் இருந்தால் தாழ்ச்சி வரும் என்று வேற்றிடங்களுக்குச் சென்றுவிட்

டார்கள். நந்தியின் செயலைக் கண்டவர்கள் வியப்படைந்திருந்தார்கள். நந்தி மேலும் வியக்கத்தக்க செயல்களைச் செய்யத்தொடங்கினான். பொன்னாலாகிய காசுகளையெல்லாம் மாற்றிவிட்டுக் காசுகளையெல்லாம் தோலால் அமைத்தான். நந்தியின் ஆட்சியில் தோல் காசுகள் வழங்கின; பாண்டிய மன்னனுக்குத் தரவேண்டிய கப்பத்தை நெல்லாகக் கொடுத்துவிட்டான். நந்தியிடம் சீட்டெழுதி வாங்கிய செட்டி வந்தான். அவனுக்குச் சேரவேண்டிய பொருள் முழுவதையும் தோற்காசாகவே தந்தான். செட்டியோ அந்தத் தோல் காசுகளையெல்லாம் நந்தியின் நாட்டிலேயே கொடுத்துவிட்டுத் தனக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக்கொண்டு போய்விட்டான். செட்டியின் கடன் தீர்ந்தபின் மீண்டும் பழைமைபோற் பொற்காசுகளே வழங்கச்செய்தான்.

உடன்பிறந்தார் சூழ்ச்சி

நந்திக்கு அஞ்சி ஓடிய நால்வரும் ஊர் ஊராக அலைந்து திரிந்தார்கள். முடிவில் அவர்கள் நந்தியை வென்று எவ்வாறேனும் அரசாட்சியைக் கைப்பற்றுவதென்று முடிவுசெய்தார்கள். ஒருவன் மந்திரவாத வித்தைகளில் சிறந்தவனானான். ஒருவன் வாட்போரில் கெட்டிக்காரனானான். ஒருவன் தந்திர வித்தைகளில் தேர்ச்சி பெற்றான். மற்றொருவனோ தமிழ் நூல்களை நன்கு கற்றுத் தமிழ்ப்புலன் ஆகி வசைபாடுவதில் கைதேர்ந்தவனானான். பிறகு எந்தவழியில் நந்தியைத் தொலைத்து நாட்டைக் கைப்பற்றலாம் என்று நால்வரும் கலந்தெண்ணினர். வசை பாடி நந்தியைத் தொலைப்பதுதான் தக்கது என்று முடிவாகியது.

தமிழ்ப்புலவனானவன் நந்திக்கலம்பகம் என்னும் பெயரோடு நந்தியின்மீது கலம்பகம் ஒன்றைப் பாடினான்.

அதில் அறம் வைத்துப்பாடினான். அந்த அறம் நந்தியின் உயிரை விரைந்து போக்கத்தக்கதாக அமைந்திருந்தது. நால்வரும் நந்தியின் அரண்மனை வாயிலை அடைந்தார்கள். தங்கள் வருகையை நந்திக்குத் தெரியப்படுத்தினார்கள். நந்தி நால்வரையும் அழைத்து வழிபாடுகள் செய்தான். கலம்பகம் இயற்றியோன், "தங்கள் மீது கலம்பகம் ஒன்று இயற்றியுள்ளேன், தாங்கள் அதனைக் கேட்க வேண்டும்," என்றான். நந்தி தன் அவைப்புலவர்களை, "அக்கலம்பகம் எவ்வாறிருக்கிறது? படித்துப்பாருங்கள்," என்றான். அவர்கள் படித்துப் பார்த்தார்கள். "இந்தக் கலம்பகப் பாடலைக் கேட்டால் எமன் உலகடைவது திண்ணம். ஆனால், கலம்பகம் அருமையாக இருக்கிறது," என்றார்கள். நந்தி நமக்கு இத்தகைய பகைவர் யாராக இருத்தல் கூடும் என்று எண்ணினான். அவர்கள் தன்னுடன் பிறந்தார்களே என்பது நந்திக்கு அப்பொழுது தான் விளங்கியது. நாம் இறந்தாலும் சரி. இதுவரையில் அரசாண்டது போதும் இப் பனுவலைக் கேட்போம் என்று முடிவுசெய்தான். அமைச்சர் முதலியோர் கேட்கக் கூடாது என்று எவ்வளவோ கூறித்தடுத்ததையும் அரசன் பொருட்படுத்தவில்லை. "நீங்கள் கலம்பகத்தைப் படியுங்கள்," என்றான்.

கலம்பகத்தால் முடிவு

கலம்பகம் இயற்றிய புலவன், "அதனை இங்கிருந்து கேட்டல் கூடாது; இடுகாட்டிலே சிதையடுக்கிச் சிதையின்மீது படுத்துக்கொண்டு கேட்கவேண்டும்," என்றான். நந்தி இடுகாட்டிலே சிதை அடுக்கச்சொன்னான். அவ்வாறே சிதை அடுக்கப்பட்டது. அமைச்சர் புலவர் முதலியோருடன் இடுகாட்டை யடைந்து சிதையின்மீது படுத்துக்

கொண்டான். படுத்துக்கொண்டு கலம்பகத்தைப் படிக்கச் சொன்னான். கலம்பகம் பாடியவன் கலம்பகத்தைப் படிக்கத் தொடங்கிப் படித்தான். பாடல்கள் முடியுந் தோறும் முடியுந்தோறும் நந்தியின் ஆவி சிறிது சிறிதாக ஒடுங்கி வந்துகொண்டேயிருந்தது. புலவன் கலம்பகத்தின் இறுதிப் பாட்டாகிய,

> "வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
> வையகம் அடைந்ததுன் கீர்த்தி
> கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
> கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
> தேனுறு மலராள் அரியிடஞ் சேர்ந்தாள்
> செந்தழல் புகுந்ததுன் மேனி
> யானும்என் கலியும் எவ்விடம் புகுவேம்
> எந்தையே நந்திநா யகனே."

என்னுஞ் செய்யுளைப் பாடியவுடன் நந்தியின் தலை இரண்டாகப் பிளந்தது. அவன் விண்ணவரூர் புகுந்தான். நால்வரும் நந்தியின் உடல்மீது விழுந்து புலம்பினர். செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து நால்வரும் அரசாட்சியை மேற்கொண்டனர். நந்திக்கலம்பக நூல் அச்சிடப்பட்டு உலகில் நிலைபெற்றுள்ளது. ஆயினும் ஆசிரியர் பெயர் தெரியாமல் வழங்கி வருகின்றது.

௧௩. பகழிக்கூத்தர்

தோற்றம்

மதுரைமாவட்டத்திலே உள்ள சிற்றூர் ஒன்றில் கரும்பொன் வினைஞர் குலத்திலே பகழிக்கூத்தர் தோன்றினார். கூத்தர் என்பது பெற்றோரால் இடப்பட்ட பெயர். பாண்டிய மன்னர்களது போருக்கு வேண்டிய பகழிகளை (அம்புகளை)க் கூத்தர் செய்யுந்தொழிலில் தலைசிறந்து நின்றமையால் பகழி என்னும் அடை, பெயருக்குமுன் சிறப்பிற்காகப் பொருந்தி நின்றது. முற்பிறப்பின் நல்வினையினால் பகழிக்கூத்தருக்குக் கலைமகள் திருவருள் எளிதில் அமைந்து நின்றது. அழகிய பாக்களைப்பாடும் ஆற்றலைப் பெற்றிருந்தார். ஆயினும் செய்யுட்களைக் கடவுளர்மீதோ மனிதர்கள்மீதோ பாடவில்லை. தமது குலத்தொழிலிலேயே கருத்தைச் செலுத்தி யிருந்தார்.

கூத்தர் நோக்கமும் முருகன் கட்டளையும்

"எந்தத் தெய்வம் செந்தமிழில் விருப்பம் உடையதாக இருக்கிறதோ அந்தத்தெய்வம் தன்மீதுபாடுமாறு கட்டளையிடட்டும். அவ்வாறு கட்டளையிட்டால் பாடுகிறேன்," என்று கூத்தர், கடவுளர்கள்மீது பாட்டுப் பாடுமாறு தம்மிடம் கூறியவர்கட்கெல்லாம் பதிலுரைத்துக் கொண்டிருந்தார். செந்திலம்பதிவாழ் முருகக் கடவுள் ஒரு நாள் பகழிக்கூத்தரின் கனவில் தோன்றினார். இலைத்திருநீற்றையும் சீட்டு ஒன்றையும் தந்து மறைந்தருளினார். பகழிக்கூத்தர் திடுக்குற்று விழித்தார். முருகன் கனவில் வழங்கிய பொருள்கள் பக்கத்தில் இருக்கக்கண்டார். மிகுந்த வியப்படைந்து திருநீற்றையும் சீட்டையும் விழுந்துவிழுந்து வணங்கி யெழுந்தார். திருநீற்றை அணிந்து கொண்டார். சீட்டைப் படித்துப் பார்த்தார். அந்தச் சீட்டில்,

"பூமாது போற்றும் புகழ்ப்பகழிக் கூத்தாவுன்
பாமாலை கேட்கயாம் பற்றேமா—ஏமம்
கொடுக்க அறியேமா கூற்றுவன்வா ராமல்
தடுக்க அறியேமா தாம்."

என்று வெண்பா ஒன்று எழுதப்பட்டிருத்தலைக் கண்டார். உடனே முருகப்பெருமான்மீது பிள்ளைத்தமிழ் என்னும் நூல் ஒன்றைப் பாடத் தொடங்கினார். அக் கடவுள் தந்த பாட்டிலிருந்த பூமாது என்னும் சொல்லையே முன்னாக அமைத்துப் பாடி முடித்தார். பிறகு பிள்ளைத்தமிழை எடுத்துக்கொண்டு திருச்செந்தூரை அடைந்தார்.

செந்தூரில் தங்கியிருத்தல்

திருச்செந்தில் சென்ற பகழிக்கூத்தர், அப் பதியில் எழுந்தருளிய முருகனை வழிபடுபவர்களும் இரண்டாயிரம் என்னும் தொகையினை யுடையவர்களும் ஆகிய அந்தணாளர்களைக் கண்டு, தாம் முருகன் கட்டளைப்படி பிள்ளைத்தமிழ் பாடி வந்திருத்தலைத் தெரியப்படுத்தினார். பகழிக்கூத்தர் கம்பிய குலத்தினர் என்பதை உணர்ந்த அவர்கள் கூத்தரை ஒரு பொருட்படுத்தவில்லை. குலவெறியில் மூழ்கிய அவர்கள் முருகன் கட்டளையிட்டான் என்பதையும் நம்பவில்லை. முருகனை முழுதும் நம்பி வந்த கூத்தர் திண்டாடும்படியாக நேரிட்டுவிட்டது. தங்குமிடத்திற்கும் உணவுக்கும் திண்டாடிய அவர் மிகத் தொல்லையுடன் மூன்று திங்களைக் கழித்தார். முருகன்மீது அவருக்கு அடிக்கடி சினமும் உண்டாயிற்று. ஆயினும் அவர் கனவினை எண்ணிக் களிப்புடன் இருந்தார்.

முருகன் திருவிளையாடல்

முருகன் பகழிக் கூத்தருக்கு அருள்செய்ய எண்ணினார். தமக்கு அணியப்பட்டிருந்த பதக்கம் ஒன்றை எடுத்

துக் கனவில் பகழிக் கூத்தரிடம் தந்தார். "இதனை ஈடாக வைத்துக் கொண்டு இன்னவிடத்தில் இரு. நூல் அரங்கேற்றமாகும்," என்று இடமுங் குறிப்பிட்டார். கனவையும் பதக்கத்தையுங் கண்ட கூத்தர் கவலை நீங்கினார். முருகன் குறிப்பிட்ட இடத்திற் சென்று தங்கியிருந்தார்.

அந் நாளில் குலசேகரன்பட்டினம் என்னும் ஊரில் காத்த பெருமாள் மூப்பனார் என்பவர் ஒருவர் முருகக் கடவுண்மாட்டுப் பேரன்புடையவராக இருந்தார். முருகக் கடவுள் அம் மூப்பனாரின் கனவின்கண் தோன்றிப் பகழிக் கூத்தரைப்பற்றிக் கூறிப் பிள்ளைத் தமிழ் நூலை அரங்கேற்றஞ் செய்யுமாறு செய்விக்க வேண்டுமென்று திருவாய் மலர்ந்தருளியதுடன் பகழிக் கூத்தர் தங்கியிருக்குமிடத்தையும் தெரிவித்து மறைந்தார்.

கனவு கண்ட மூப்பனார் முருகக் கடவுளின் திருவருளை எண்ணிப் பெருமகிழ்வு அடைந்தார். செல்வநலம் மிக்காராதலின் பல்லக்கில் புறப்பட்டுத் திருச்செந்தூரை அடைந்தார். பதக்கம் களவு போனதனால் கோவிலில் குழப்பம் மிகுதிப்படுவதற்குள் கோவிலாளர்களைக் கண்டு முருகப் பெருமான் கட்டளையைக் கூறினார். முருகன் அடியவர்களாகிய அந்தணாளர்களின் ஆணவம் அடியோடு அடங்கிவிட்டது. அந்தோ இழிகுலத்தினன் என்று எண்ணினோம். இவ்வாறு பழி விளைத்திடும் என்பதை அறியாமற் போயினோமே என்று வருந்தினர். இரண்டாயிரரும் மூப்பனாரோடு புறப்பட்டுப் பகழிக் கூத்தரைத் தேடிச் சென்றனர்.

மூப்பனார் பகழிக்கூத்தரைக் கண்டு அவருடைய அடிகளைப் பணிந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் பாராட்டிப் புகழ்ந்து பேசிக்கொண்டனர். பிறகு இருவரும் புறப்பட்டு அந்தணாளர்களுடன் திருக்கோவிலை அடைந்

தனர். கூத்தர் முருகப்பிரானைப் போற்றி வணங்கிப் பிள்ளைத் தமிழைப் படித்துப் பொருளை விரித்துரைத்தார். பிள்ளைத்தமிழ்ப் பாக்களின் இனிமையையும், பொருள் நயத்தையும் கேட்டவர்கள் அனைவரும் பெருங் களிப்படைந் தனர். முருகக்கடவுள் ஒரு புலவனாக அவையில் எழுந் தருளியிருந்து பிள்ளைத்தமிழைக் கேட்டு மகிழ்ந்ததுடன்,

> "செந்தமிழ்க்கு வாய்த்த திருச்செந்திற் பதிவாழும்
> கந்தனுக்குப் பிள்ளைக் கவிசெய்தான்—சொந்தத்
> திருமாது சேர்மார்பன் தேர்ப்பாகன் வண்மை
> தருமால் பகழிக்கூத் தன்."

என்றொரு சிறப்புப்பாயிரமுங் கூறியருளி மறைந்தார். அரங்கேற்றம் முடிந்தபின் பகழிக் கூத்தருக்குப் பெரும் பொருளை மூப்பனார் நன்கொடை வழங்கிப் பகழிக் கூத்த ரிடம் இருந்த முருகப்பெருமானது பதக்கத்தை மீட்டார். பிள்ளைத்தமிழ் அரங்கேற்றத்தைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் பெருங்களிப்படைந்தனர்.

கச. குரு நமச்சிவாயர்

குரு நமச்சிவாயர் என்பவர் திருவருணையில் எழுந் தருளியிருந்த குகை நமச்சிவாயர் என்பவருடைய மாணவர். குரு நமச்சிவாயருடைய காலம் பல நூற்றாண்டுகட்கு முற் பட்டமையான் அவருடைய ஊர் நாடு முதலியன அறியப் பெறவில்லை.

குரு நமச்சிவாயர் குகை நமச்சிவாயருடைய அரு ளுரையைப் பெற்று மெய்யறிவு கைவரப்பெற்றவராக விளங்கினார். குகை நமச்சிவாயர் தம் மாணவர் தம்மினும் சிறந்த மெய்ஞ்ஞானியாக மாறிவருதலைக் கண்டு மிகுந்த வியப்படைந்தார். ஒரு நாள்,

"ஆல்பழுத்துப் பட்சியினுக் காகார மானதெனு
வேல்பழுத்து நின்றவிலை வீணிலென—

என்று அரை வெண்பாவைப் பாடினார். எஞ்சியதை முடிக்குமாறு தம் மாணவராகிய குரு நமச்சிவாயருக்குக் கட்டளையிட்டார். குரு நமச்சிவாயர்,

—சாலவனச்
செய்யா வொருத்தருடன் சேர்ந்தும் இருப்பீரோ
ஐயா நமச்சிவா யா."

என்று வெண்பாவைப் பாடி முடித்தார். குரு நமச்சிவாயரைக் குகை நமச்சிவாயர் நோக்கி, "நீ தில்லையிற் சென்று இரு" என்று திருவாய் மலர்ந்தருளினார். குரு நமச்சிவாயர் தில்லையை நோக்கி அருணையில் இருந்து புறப்பட்டார். இரவில் ஓர் இடத்தில் தங்கினார். பசி நோய் மிகுதியாயிற்று. அப்போது அவர் உண்ணுமுலை அம்மையை எண்ணி,

"அண்ணு மலையார் அகத்துக் கினியாளே
உண்ணு முலையே உமையாளே—நண்ணு
நினைதோறும் போற்றிசெய நின்னடியார் உண்ண
மனைதோறும் சோறு கொண்டு வா."

என்னும் வெண்பாவைப் பாடினார். உமையவள் உணவு கொண்டு வந்து வழங்கினாள். பிறகு குருநமச்சிவாயர் தங்கிய இடங்களிலெல்லாம் உமையவளைப் பாடியே உணவு பெற்றார். ஓர் ஊரில்,

"தாயிருக்கப் பிள்ளை தளருமோ தாரணியில்
நீ யிருக்க யான்தளர நீதியோ—வேயிருக்கும்
தோளியே விண்ணோர் துதிக்குந் திருமுத்து
வாளியே சோறுகொண்டு வா.'
மின்னும் படிவந்த மேககளத் தீசருடன்
மன்னுந் திருமுத்து வாளியே—பொன்னின்
கலையாளே தாயேயென் கன்மனத்தே நின்ற
மலையாளே சோறுகொண்டு வா."

என்னும் வெண்பாக்களைப் பாடினார். விருத்தாசலம் என்னும் பழமலையில்,

“ நன்றிபுனை யும்பெரிய நாயகியெ னுங்கிழத்தி
என்றுஞ் சிவன்பால் இடக்கிழத்தி—நின்ற
நிலைக்கிழத்தி மேனி முழுநீலக் கிழத்தி
மலைக்கிழத்தி சோறுகொண்டு வா.”

“ முத்தநதி சூழும் முதுகுன் றுறைவாளே
பத்தர் பணியும் பதத்தாளே—அத்தர்
இடத்தாளே மூவா முலைமேலே ஆர
வடத்தாளே சோறுகொண்டு வா.”

என்னும் வெண்பாக்களைப் பாடினார்.

பிறகு சிதம்பரத்தை அடைந்தார். கூத்தப்பிரானுடைய கட்டளைபடி தில்லைவாழ் அந்தணர்கள் குருநமச்சிவாயருக்குத் தங்கியிருப்பதற்கு இடம் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். குருநமச்சிவாயர் அங்கு யோக நிட்டையில் அமர்ந்திருந்தார். அப்போது பசிநோய் அடுத்தது. உடனே,

“ ஊன்பயிலுங் காயம் உலராமல் உன்றனது
வான்பயிலும் பொன்னடியை வாழ்த்துவேன்-தேன்பயிலும்
சொல்லிய நல்லார் துதிக்குஞ் சிவகாம
வல்லியே சோறுகொண்டு வா.”

என்னும் வெண்பாவைப் பாடினார். சிவகாமி அம்மையார் உணவினைக் கொண்டுவந்து குருநமச்சிவாயர் முன்பு வைத்து,

“ கொண்டுவந்தேன் சோறு குகைநமச்சி வாயரது
தொண்டர் அடியார் சுகிக்கவே—பண்டுகந்த
பேய்ச்சிமுலை யுண்ட பெருமாள் உடன்பிறந்த
நாச்சி சிவகாமி நான்.”

என்னும் வெண்பாவைப் பாடிச்சென்றார். குருநமச்சிவாயரைக் கண்டு வழிபடச் சென்றவர்கள் அவர் முன்பு

காசுபணம் முதலியவைகளை வைத்துவைத்துச் சென்றனர். குருநமச்சிவாயர் அப்பொருள்களை யெல்லாம் ஏழை எளியவர்களை வாரிக்கொள்ளச் செய்தார். இதனைக் கண்ட தில்லைவாழ் அந்தணர்கள் பொருள்கள் வீணாகப் போகின்றன. இவரைக் கோயிலுக்குள் கொண்டுபோய்ச் சேர்த்தால் பல திருப்பணிகள் நடந்தேறும் என்று எண்ணமிட்டார்கள். பெருமுயற்சி செய்து கோயிலுக்குள் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். குருநமச்சிவாயருடைய முயற்சியால் கூத்தப்பிரானுக்குத் திருப்பணிகள் பல நடந்தேறின. கூத்தப்பிரான் குருநமச்சிவாயருக்குத் திருநடனத்தையும் ஆடிக் காட்டினார். அக் கூத்தைத் தில்லை வாழ் அந்தணர்களும் கண்டு மகிழ்ந்தார்கள்.

“ஆக்கியகால் நோகாதோ தட்டன் முயலகன்மேல்
தாக்கியகால் தானுஞ் சலியாதோ—வாக்கா
தினவரதா தில்லைத் திருத்தாண்ட வாநீ
அனவரதங் கூத்தாடி னால்.”

என்னும் வெண்பாப் பாடிக் குருநமச்சிவாயர் அம்பல வாணனின் திருக்கூத்தை நிறுத்தினார்.

குருநமச்சிவாயர் பாடிய தனிப்பாடல்கள் எண்ணற்றவை. பரமரகசியமாலை, சிதம்பர வெண்பா, அண்ணாமலை வெண்பா முதலியவை நூல்வடிவில் உள்ளன. இவருடைய ஆசிரியராகிய குகைநமச்சிவாயர் அருணகிரியந்தாதி, தனிவெண்பாமாலை முதலிய நூல்களைப்பாடியுள்ளார்.

கரு. அபிராமப்பட்டர்

அபிராமியந்தாதியைப் பாடியருளிய அபிராமப்பட்டர் என்பவர், சோழநாட்டிலே திருக்கடவூரிலே அந்தணர் குலத்திலே தோன்றினர். சோதிடத்தை நன்கு பயின்ற இவர் சோழ மன்னனிடத்திலே சோதிடஞ் சொல்லுந் தொழிலை மேற்கொண்டிருந்தார். இவரும் இவருடைய வழிமுறையினரும் திருக்கடவூரில் எழுந்தருளிய அபிராமியம்மை மீது பேரன்பு கொண்டு விளங்கினர். பழவினைப் பயனால் அபிராமப்பட்டரிடம் மயக்கந்தரும் பொருள்களை உண்ணும் தீய பழக்கம் ஏற்பட்டது. அறிவினைத் திரிக்கும் பொருள்களை அடிக்கடி உண்டு அறிவு திரிந்து நின்றார். சிலர் இச்செய்தியை அரசனிடம் அறிவித்தனர். அபிராமப்பட்டர் அறிவுநிலை திரிந்துள்ள சமயம் பார்த்து அவரைத் தன்னிடம் அழைத்து வருமாறு ஏற்பாடு செய்தான் அரசன்.

பட்டர் அறிவு திரிந்திருந்த சமயம் பார்த்துச் சிலர் பட்டரை அழைத்துப்போய் அரசன் முன்பு நிறுத்தினர். பட்டர் அறிவு திரிந்துள்ளார் என்பதை அரசன் அறிந்து கொண்டான். அவன் உடனே பட்டரைப் பார்த்து, "இற்றை நாளின் ஐந்துறுப்புக்களை (பஞ்சாங்கத்தை)க் கூறும்," என்று சொன்னான். மறுநாள் மதியின் முழு மறைவு (அமாவாசை) நாள். ஆனால், அறிவு திரிந்திருந்த அபிராமப்பட்டர் மறுநாள் முழுத்திங்கள் நாள் (பௌர்ணமி) என்று கூறிவிட்டார். அரசன் உடனே தன் சபையில் இருந்த பலரையும் சாட்சி வைத்தான். பிறகு அபிராமப்பட்டரைப் பார்த்து, "நாளைக்குக் கதிரவன் மறைந்தவுடன் கிழக்குத் திக்கிலே முழுமதி தோன்றுதல் வேண்டும். அவ்வாறு தோன்றாதொழியில் உன்னை

என்னுடைய வாட்படைக்கு இரையாக்கி விடுவேன். நான் அந்தணனைக் கொன்றுவிட்டேன் என்று உலகினர் யாது கூறினும் கூறுக. அதனை நான் ஒரு பொருட்படுத்தமாட்டேன்," என்று மிகுந்த கடுஞ்சினத்துடன் கூறினான்.

அபிராமப்பட்டர் தம்முடைய தவற்றினை எண்ணி மனம் வருந்தினார். வாளைக்கொண்டு அரசன் நம்மைக் கொலைபுரிவதற்குமுன் நாம் நம்முடைய வழிபடு கடவுளாகிய அபிராமியின் தாளைப்போற்றி நாளைக்குத் திங்கள் தோன்றுமாறு வேண்டுவோம்; அவ்வாறு தோன்றாவிடின் உலகம் அறிய இறந்தொழிவோம் என்று முடிவு செய்தார். மறுநாள் ஒரு பெரிய தீக்குழியை உண்டாக்கினார். நூறு கால்களோடு கூடிய ஒற்றைவார் உறியொன்றை அமைத்துத் தாம் அந்த உறியின் மேலடுக்கில் அமர்ந்து இறைவியைப் போற்றிப் பாடத்தொடங்கினார். கிழக்குத் திக்கில் கதிரவனும் தோன்றினான்.

"உதிக்கின்ற செங்கதி ருச்சித் திலக முணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி யென்றன் விழித்துணையே."

என்பது முதலாவது பாட்டு. ஒவ்வொரு பாட்டு முடியும் தோறும் உறியின் அடுக்கு ஒன்றைச் சேதித்துக் கொண்டே சென்றார். செய்யுட்கள் தொண்ணூற்றொன்பது முடிந்தன. உறியின்கால்களும் தொண்ணூற்றொன்பது சேதிக்கப்பட்டு ஒன்றுமட்டும் எஞ்சி நின்றது. அபிராமிதேவி அதுவரையிலும் தோன்றவில்லை.

அபிராமிப்பட்டருக்குக் கவலை மிகுதியாயிற்று. இறைவி அருள்புரியாள் போலும். அரசனுடைய வாளால்

மாய்தலைவிட எண்டுத் தீயில் வீழ்ந்து மாய்தலே சிறந்தது என்று முடிவு செய்தார்.

"குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ்
கொங்கைவல்லி
கழையைப் பொருத திருநெடுந் தோளுங்
கருப்புவில்லும்
விழையப் பொருதிறல் வேரியம் பாணமும்
வெண்ணகையும்
உழையைப் பொருகண்ணு நெஞ்சிலெப் போதும்
உதிக்கின்றவே."

என்னும் இறுதிப் பாட்டையும் பாடி முடித்து உறியின் இறுதிக் காலையும் கொய்தார். அவர் தீயில் விழுமுன் அபிராமியம்மை தோன்றினாள். தனது கைகளை நீட்டிப் பட்டரைப் பற்றித் தரையில் விட்டாள். விண்ணவர் மலர்மாரி பெய்தனர். தேவியின் திருவடிகளைப் பட்டர் வணங்கிப் போற்றினார். தேவி பட்டரைப்பார்த்து "அஞ்சாதே" என்று அடைக்கலங்கொடுத்தருளினாள். தனது இடது காதில் அணிந்திருந்த குண்டலத்தை வலது கையால் வாங்கிக் கிழக்குத்திக்கில் வீசினாள். அக்குண்டலம் திங்கள் தோன்ற வேண்டிய இடத்திற்குச் சென்று திங்களைப்போல் விளங்கி நின்றது. அமாவாசை நாளில் திங்கள் தோன்றி விளங்குதலைக்கண்டு உலகினர் பெருவியப்படைந்தனர். சிலர் இஃதோர் இந்திரசாலம் என்றனர்.

சோழமன்னன் திங்கள் தோன்றியதைக் கண்டு திகைப்படைந்தான். அபிராமப்பட்டன் இடத்திலே தெய்வத் திருவருள் மிகுதியாக அமைந்திருக்கிறது. நாம் இதனை நன்கு உணர்ந்து கொள்ளாமற் போனோமே என்று உள்ளங் கலங்கினான். "பட்டர் யாண்டுளார்?" என்று உசா

விக்கொண்டு பட்டரைத் தேடியோடினன். வெட்டிக் கொலை செய்து விடுவதாகக்கூறிய நமக்கு எத்தகைய துன்பமும் ஏற்படாமல் இருக்கவேண்டுமே என்னும் கலக்கம் அரசனுக்குப் பெரிதாயிற்று. அபிராமப்பட்டரைக் கண்ட உடன் அவர் அடிகளில் முடிபடப் படியில் வீழ்ந்தான். "நான் தங்களுடைய பெருமையை உணர்ந்து கொள்ளாமல் தவறு செய்துவிட்டேன். என் தவற்றினைப் பொறுத்து அருள்புரியவேண்டும்" என்று கூறி இரங்கி வேண்டினன். அபிராமப்பட்டர் அரசனுக்கு வாழ்த்துரை கூறினர். "உன்னுடைய சொல்லினல்தான் நான் இறைவியின் திருவருள் பெற்றுச் சிறப்படைந்தேன்; ஆகையால் உன்னுடைய உள்ளத்திலே சிறிதும் ஐயங்கொள்ளாதே," என்று கூறினர். பிறகு இருவரும் ஒன்று பட்ட மனத்தினராய் அளவளாவினர். நிகழ்ந்த செயலை எல்லோரும் உணர்ந்து அபிராமப்பட்டரைப் புகழ்ந்து போற்றினர்கள். இரவு முழுவதும் இறைவியின் குண்டலத் திங்கள் விளங்கி நின்று மறுநாட் காலையில் மறைந்தது. அரசன் அன்று முதல் அபிராமப்பட்டருக்கு அடியவனாய் நின்று அவருடைய குறிப்பறிந்தொழுகினன். அபிராமப் பட்டர் இயற்றியதாக அபிராமியந்தாதி ஒன்றைத் தவிர வேறு நூல்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அபிராமியந்தாதியை மெய்யன்புடன் பாடிப் போற்றுவோர் வேண்டிய வேண்டியாங்கெய்தி இன்புறுகின்றனர்.

கசா. சத்திமுற்றப்புலவர்

சோழ வளநாட்டிலே சத்திமுற்றம் என்னும் ஊரிலே சத்திமுற்றப்புலவர் தோன்றினார். சத்திமுற்றப் புலவருக்குப் பிள்ளைமைக் காலத்தில் இடப்பெற்ற பெயர் நாளடைவில் மறைந்து போகப் புலவர் தோன்றிய ஊரின் பெயரே புலவர்க்கு இணைந்து வழங்கி நின்றது. அவருடைய குலம் காலம் முதலியனவும் விளக்கமாகத் தெரியவில்லை.

சத்திமுற்றப்புலவர் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் வழுவறப்பயின்று அவைகளில் சிறந்த தேர்ச்சிபெற்றுத் திகழ்ந்தார். புலவர்பெருமக்களை வாட்டி வருத்தும் மிடியன் என்னுங் கொடியன் சத்திமுற்றப் புலவரையுஞ் சுற்றி வளைத்தான். புலவர் அக்கொடியனின் அல்லல்களைத் தாங்கக் கூடாதவராயினார்.

அந்நாளில் மதுரையில் அரியணையில் அமர்ந்திருந்த பாண்டிய மன்னன் புலவர்களின் மிடிக்கோர் கூற்றுவனாய் விளங்கினான். சத்திமுற்றப்புலவர் மதுரையை அடைந்து தமது வறுமை நோயைக் களைய எண்ணினார். புறப்பட்டுக் காடுகளையும் மலைகளையும் கடந்து கூடலைக் கூடினார். தமது வறுமை நோய் தொலைந்ததென்று உள்ளங் களித்தார்.

புலவரைப் பிரிந்த அவர் மனைவியோ உறவினர் இல்லங்களில் குற்றேவல் செய்து காலம் போக்கினார். மதுரையை அடைந்த புலவர் அரண்மனை வாயிலை அடைந்து வாயிற்காவலரைக் கண்டார். அவர்களைப் பார்த்து, "நீங்கள் பூவேந்தன்பாற் சென்று புனனாட்டில் இருந்து பாவேந்தன் ஒருவன் வந்துள்ளான் என்று தெரியப்படுத்துங்கள்," என்று புகன்றார். புலவரின் தோற்றம் மிகத் தாழ்வாகவும் ஆடைகள் கிழிந்து நைக்கப்

பெற்றவைகளாகவும் இருத்தலைக் கண்ட வாயிற்காவலர் எள்ளி நகையாடினர். "நீயும் ஒரு புலவனேயோ? போ போ அப்பாலே போ. உன்னுடைய திருக்கோலம் அரசர் களைக் காண்டற்கு ஏற்றதன்று," என்று கூறிவிட்டனர்.

எத்தனையோ சிறப்புக்களைப் பெறலாம் என்று எண்ணி வந்த புலவரின் எண்ணம் மண்ணாகி உள்ளம் புண்ணாயிற்று. அவர் அந்த மாட மதுரையின் மறுகு களில் சுற்றித் திரிந்தார். கண்டவிடங்களில் உண்டார். கண்ட இடங்களில் படுத்துறங்கினார்.

புலவர் செய்தி இவ்வாறாக இருக்கும் நாளில் அரசன் ஒரு நாள் வயல் பக்கங்களுக்குச் சென்றான். அங்கு சில நாரைகளைக் கண்டான். அவைகளின் வாய்க்கு எதனை ஒப்பாகக் கூறலாம் என்று எண்ணமிட்டான். ஒன்றும் விளங்கவில்லை. அரண்மனையை அடைந்தபின் தன் அவைக்களத்துப் புலவர்களைப்பார்த்து, "நாரை வாய்க்குத் தகுந்த உவமையாக வேறொன்றை எடுத்துக் கூறுபவர் கட்குத் தகுந்த நன்கொடை வழங்குவேன்," என்று தெரி யப்படுத்தினான். அங்கிருந்த புலவர்கள் தக்க உவமை கூறமுடியாமல் கவன்றிருந்தனர்.

அரசன் ஒரு நாள் இரவில் மாறு கோலத்துடன் ஊரைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு வந்தான். அப் போது தேர் முட்டியின் அண்மையில் சோழ வளநாட்டுச் சத்திமுற்றப்புலவர் படுத்து உறக்கம் பிடிக்காமல் புரண்டு கொண்டிருந்தார். அப்பொழுது நாரைகள் சில வடக்கில் இருந்து தெற்கு நோக்கிப் பறந்து சென்றன. புலவர் வாயில் இருந்து செய்யுள் ஒன்று புறப்பட்டது.

"நாராய் நாராய் செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்குபிளந் தன்ன

MADURAI UNIVERSITY LIB
75817
031:1AW

பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரி
ஆடி வடதிசைக் கேகுவீ ராயின்
எம்மூர்ச் சத்திமுற்ற வாவியுள் தங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டே
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடை இன்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழை யாளனைக் கண்டனன் எனுமே.”

என்பது அச்செய்யுள். ஊர் சுற்றிக்கொண்டு வந்த மன்னன் புலவரின் செய்யுளைக் கருத்தூன்றிக் கேட்டான். புலவரின் வறுமைநிலை அரசனின் உள்ளத்தை உருக்கியது. தான் விரும்பிய உவமையும் பாட்டில் இருத்தலைக் கண்டான். அவனுக்கு இன்பமும் துன்பமும் ஒருங்கே உண்டாகியது. பேரறிவு நிரம்பப் பெற்ற புலவரும் இவ்வாறு வறுமையால் வாடுகிறாரே என்று வருந்தினான். விரைந்து அரண்மனையை அடைந்தான். ஏவலன் ஒருவனை அழைத்துத், “தேர் முட்டியிடத்தில் ஒரு மனிதன் படுத்திருக்கிறான். நீ விடியும் வரை அந்த இடத்திலே அவனைக் காத்திருந்து விடிந்தபின் அவனை நம்மிடத்திற்கு அழைத்து வா ! அந்த மனிதனுக்குச் சிறுமை எதனையுஞ் செய்து விடாதே,” என்று சொல்லி அனுப்பினான்.

காவலன் கட்டளைப்படியே ஏவலன் விரைந்து சென்று புலவரைக் கண்டான், விடியும் வரை அவர் வேற்றிடஞ் சென்று விடாமல் காத்திருந்தான். விடிந்தபின் அழைத்துக்கொண்டு போய் அரசனிடம் நிறுத்தினான். அவ்வள

வில் புலவர் தமது வறுமையை அரசனிடம் பாடத் தொடங்கி,

"வெறும்புற் கையுமரி தாக்கிள்ளை சோறுமென் வீட்டில்வரும்
எறும்புக்கு மார்ப்பத மில்லை மன்னா...................."

என்றார். அவ்வளவில் அரசன், "புலவரே நிறுத்தும் உம்முடைய பாட்டை," என்றான். புலவர் திடுக்கிட்டார். அரசன் பாடல்களில் விருப்பமில்லாதவனோ அல்லது பாட்டைக் கேட்டால் பொருள் கொடுக்கவேண்டுமென்று அஞ்சுகிறானோ தெரியவில்லையே என்று உள்ளம் ஏங்கினார். புலவரின் குறிப்பை உணர்ந்த அரசன், "இப்பாட்டின் எஞ்சிய பகுதியைப் பாடுவதற்குக் காலம் பின்னால் இருக்கிறது. அப்பொழுது பாடிக் கொள்ளலாம்" என்றான். பிறகு அரசன் சத்திமுற்றப்புலவரின் அழுக்காடைகளைக் களையச் செய்து நல்லாடைகள் புனையச் செய்தான். அணிகலன்களைப் பூட்டினான். அறுசுவைப் பொருள்களோடு இனிய விருந்து செய்தான். அவ் வின்பத்திலே திளைத்த புலவர் வீட்டிலே மனைவி எவ்வாறு அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறாளோ என்று உள்ளம் வருந்திக்கொண்டிருந்தார்.

அரசன் புலவரது ஊர் பெயர் முதலியவைகளை உசாவி அறிந்துகொண்டான். கண்ணபிரான் குசேலரைக் கனப்படுத்தியதைப் போலச் சத்திமுற்றப் புலவரைத் தான் கனப்படுத்த எண்ணினான். புலவரின் ஊருக்கு ஆட்களையும் பொருட்களையும் புலவருக்குத் தெரியாமல் அனுப்பினான். புலவரின் குடிசையை அழகிய மாடமாளிகையாகக் கட்டச் செய்தான். வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையும் அங்கு அமைத்தான். புலவரின் மாளிகை ஒரு சிற்றரசனின் மாளிகைபோல் சிறந்து விளங்கியது.

பிறகு அரசன் புலவரைப் பார்த்து, "நீவிர் நும்மூர்க்குச் சென்று சிலநாள்கழித்துப் பிறகு வருக" என்று

கட்டளையிட்டு அனுப்பினான். அவன் புலவர்கையில் பொருள் ஒன்றுங் கொடுக்கவில்லை. அரசன் செயல் புலவருக்குத் திகைப்பையளித்தது. நாம் அணிந்துள்ள அணியில் ஒன்றைவிற்றேனும் வறுமையைப் போக்குவோம் என்னும் எண்ணத்துடன் ஊருக்குத் திரும்பினார். தமது இல்லத்திற்குப் போய்ப்பார்த்தார். அவருக்குப் பெருவியப்புண்டாகியது. சிலநாள் இல்லத்தில் தங்கியிருந்தார் பிறகு சிவிகையிற் புறப்பட்டு மதுரையை அடைந்து அரசனைக்கண்டார். முன்பு நிறுத்திய செய்யுளின் எச்சத்தையும் பாடத்தொடங்கி,

"என்னிருங் கலியாம்
குறும்பைத் தவிர்த்த குடிதாங்கியைச் சென்று கூடியபின்
தெறும்புற்கை யானை கவளங்கொள் ளாமல் தெவிட்டியதே."

என்று பாடிமுடித்தார். மேலும் அரசன்மேல் பல செய்யுட்கள் இயற்றினார். சத்திமுற்றப் புலவரும் அரசனும் ஆருயிர் நண்பர்களாயினர். புலவர் அரசனுடைய அவைக்களத்திற்குத் தலைமைப் புலவரானார். இறுதிவரை அரசனும் புலவரும் கலாவிநோதர்களாய்க் காலங்கழித்திருந்தனர்.

கஎ. முத்துக்குட்டிப் புலவர்

தோற்றம்

சேது நாட்டில் உள்ள பரத்தை வயல் என்னும் ஊரிலே முத்துக்குட்டிப் புலவர் தோன்றினார். இவருடைய தந்தையார் பெயர் தாண்டவராயசாமி. தாயார் பெயர் முத்துத்தாய். இவர் இளமையில் கற்கவேண்டியவைகளை ஒழுங்காகக் கற்றார். பின்னர் ஒரு புலவரிடம் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றார். அப்புலவர் கடவுளன்பு மிக்கவர். அவர் முத்துக்குட்டிப் புலவரைப் பார்த்து,

"கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்,
நற்றாள் தொழாஅர் எனின்."

என்று திருவள்ளுவர் கூறியிருக்கிறார் அன்றோ? அறிவாளி களாக விளங்குவோர் கடவுள் வழிபாட்டை மிகுதியாகக் கொள்ளுதல் வேண்டும். தெய்வ வழிபாடுதான் எல்லா நலன்களையும் அளிக்கும்," என்று அறிவுரைகள் கூறினார்.

திருவருள்

முத்துக்குட்டிப் புலவர் நூல்களைக் கற்கும் நேரம் போக, எஞ்சிய நேரமெல்லாம் தம் வழிபடு கடவுளை நினைந்து வேண்டுவதே தொழிலாக இருந்தார். அதனால் இவருக்குத் தெய்வத்திருவருள் கைவந்தது. இவருடைய வாக்கில் பிறந்த மொழிகள் பலிக்கும் தன்மையுடையவை களாக இருந்தன. அக்கால வழக்கப்படி இவர் பல செல்வர்களிடமுஞ் செய்யுள்பாடிச் சென்று நன்கொடை பெற்றுக் காலங்கழித்துக் கொண்டிருந்தார்.

கடவுள் உணவளித்தல்

ஒருமுறை முத்துக்குட்டிப் புலவர் திருக்கோட்டி யூருக்குச் சென்றார். இவர் அங்குப்போய்ச் சேர்ந்த பொழுது இரவு நெடுநேரம் ஆகிவிட்டது. எங்கும் உணவு அகப்படுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. மக்கள் அனைவரும் இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுத்துவிட்டார்கள். முத்துக்குட்டிப் புலவருக்கோ பசி மிகுதியாக இருந்தது. புலவர் தேரடியில் இருந்து, "இரவு நெடுநேரம் ஆகிவிட்டது. இனிமேல் மனிதர்களால் உணவு அகப்படுமென்று நம்புவதற்கு இடமில்லை; ஓ சௌமிய மூர்த்திக் கடவுளே! நீதான் உணவு கொடுக்கவேண்டும்," என்னும் பொருளை அமைத்து ஒரு செய்யுள் பாடினார்.

அவ்வூரிற் கோயில் கொண்டருளிய சௌமிய மூர்த்திக் கடவுள் ஓர் அந்தண வடிவங்கொண்டு சர்க்கரைப் பொங்கலைக் கொண்டுவந்து தேரின்மீது முத்துக்குட்டிப் புலவருக்குத் தெரியும்படியாக வைத்துச் சென்றார். முத்துக்குட்டிப் புலவர் அவ்வுணவினை உண்டு,

"ஊருண் டுறங்கி ஒருசாம மாயிற்றிவ் வூர்தனிலே
நீரும் பருக்கையும் ஆர்தரு வாரிந்த நேரமென்றேன்
மூரன் மலர்மங்கை மார்பா சவுந்தர மூர்த்தியுன்றன்
தேருந் தருங்கட்டிச் சோறுங் கடற்கரைச் சீனியுமே."

என்னும் செய்யுளைப் பாடினார்.

கொள்ளைத்தமிழ்

அந்நாளில் நாட்டரசன் கோட்டை என்னும் ஊரிலே நல்லதம்பிப்பிள்ளை என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் இருந்தான். அவன் சேதுபதியின் மந்திரியாயிருந்த தாண்டவராயபிள்ளை என்பவனுக்கு இளவல். அவனுடைய பெயர்தான் நல்லதம்பியே தவிரச் செயல்களெல்லாம் பொல்லாதவைகளாக இருந்தன. செல்வனாக இருந்தபடியாலும் தமையன் அமைச்சனாக இருந்தபடியாலும் மூர்க்கத் தனமாக நடந்து, "கெட்டவன்" என்னும் பெயரைத் தேடிக்கொண்டான். அவன் கொடியவன் என்று எங்கும் பெயராகிவிட்டது. சிலர் முத்துக்குட்டிப் புலவரைப் பார்த்து, "நீங்கள் நல்லதம்பிப் பிள்ளையின்மீது பிள்ளைத் தமிழ் ஒன்று பாடிக்கொண்டு செல்வீர்களாயின் நல்ல பரிசு கொடுப்பான்" என்று கூறினார்கள். நல்லதம்பிப் பிள்ளையின் பொல்லாத செயல்களையெல்லாம் கேள்விப்பட்டு அவனை மிக வெறுத்திருந்த புலவர் உடனே, "நான் அவன்மீது பிள்ளைத்தமிழ் பாடமாட்டேன். கொள்ளைத் தமிழ்தான் பாடுவேன்," என்று கூறி,

"பட்ட விளக்க மாற்றினுக்கோர்
    பட்டுக்கயிறு தரித்தாற் போல்
இட்ட பெயரே நல்லதம்பி
    என்றே நினைக்கிட் டிசைத்த வரார்
எட்டிப் பழமே பழஞ்செருப்பே
    எள்ளத்தனையும் நாண மிலா
மட்டிப் பயலே நல்லதம்பி
    மடவோய் சாகாய் வாழ் வாயோ."

என்று ஒரு செய்யுள் பாடினார். இச்செய்யுள் இயற்றப் பட்ட மறுநாளே நல்லதம்பி இறந்தான். அவன் இறந்த செய்தி எழுதப்பெற்ற ஓலையுடன் தோட்டியொருவன் முத்துக்குட்டிப் புலவரின் ஊருக்கு வந்தான். செய்தி இன்னதென்று தெரிந்துகொண்ட முத்துக்குட்டிப் புலவர்;

"நல்லதம்பி என்றொருவன் நாட்டரசன் கோட்டையிலே
அல்லனென்று போனனென் றுள்வந்தான் அம்மானை
அல்லனென்று போனனென் றுள்வந்தான் ஆமாயின்
சொல்லவந்த தூதுவனும் தோட்டிகாண் அம்மானை
தோட்டியவன் கூடநின்று சுட்டவன்காண் அம்மானை"

என்று ஓர் அம்மானைச் செய்யுள் பாடினார். இவருடைய வாக்குப் பலித நிலைமையை உணர்ந்த மக்கள் இவரிடம் அன்பும் அச்சமுங் கொண்டவர்களாக ஒழுகினர். இவர் தம்மைப் பெற்றதாய் தந்தையரிடத்தில் பேரன்புடையவர் என்பது,

"தருமணி யாந்தாண் டவராய சாமியென் தந்தையவன்
திருவனை யாண்முத்துத் தாயுல கேத்துஞ் செயலக்குமி
இருவரும் ஈன்ற தமிழ்முத்துக் குட்டியென் பேணிவர்தம்
பெருமையை நீடூழி காலமும் வாழ்த்திப் பெருகுவனே."

என்னுஞ் செய்யுளால் பெறப்படும்.

நூல்கள்

பரிசில் கருதிப் பலர்மீதும் தனிநிலைச் செய்யுட்கள் பல இயற்றியதே யன்றி இவர் நூலாக எதுவுஞ் செய்ய வில்லை. இவருடைய தனிப்பாடல்களும் பெரும்பான்மை மறைந்துபோயின.

கஅ. அட்டாவதானம் சரவணக் கவிராயர்

தோற்றம்

அட்டாவதானம் பெரிய சரவணக்கவிராயர் என்பவர் சேதுநாட்டிலே முதுகுளத்தூரிலே தோன்றினார். குலம், வேளாளர் குலம். அந்நாளில் இராமநாதபுரத்தில் சோம சுந்தரம் பிள்ளை என்பவர் சிறந்த பேரறிஞராக விளங்கி யிருந்தார். அவர் சிவஞான முனிவரிடம் கல்வி கற்றுத் தேறியவர். எல்லா நூல்களிலும் வல்லவர். சரவணப் பெருமாட் கவிராயர் அந்தச் சோமசுந்தரம் பிள்ளையிடத்தில் நன்கு கல்வி கற்றுத் தேறினார். செய்யுள்பாடுந் திறமை மிக வியக்கத்தக்கவாறு கவிராயருக்கு அமைந்தது. மிக விரைவாகவும் அருமையாகவும் ஆசிரிய விருத்தங்களைப் பாடினார். இவரது கல்வித் திறமையை அறிந்த முத்துராமலிங்க சேதுபதி இவரைத் தம் அவைக்களப் புலவராக அமர்த்தினார். கவிராயர் சேதுபதியின் அவைக்களப் புலவராக அமர்ந்திருந்ததோடு தமிழ்நாடு முழுவதுஞ் சென்று தமது கல்வித்திறத்தைக் காட்டிப் பலவகையான நன்கொடைகள் பெற்றார். எங்குச்சென்றாலும் சேதுபதியையே புகழ்ந்து பாடுவார். இவருடைய வாக்குப் பலிதமுள்ளது. ஒருவனைக் கெடவும் வாழவும் பாடவல்லவர்.

பெருமிதம்

இவருடைய கல்விப் பெருமிதம் அளவற்றது. எந்த அரசரையும் ஒருபொருட்படுத்தாமல் பாடுவார். எப்பெரிய அரசரும் எழுடி எதிர்நடந்து வந்து தன்னை வரவேற்க வேண்டும் என்பார். தெய்வத் திருவருளும் கைவரப் பெற்றிருந்தமையின் காளமேகம்போல் எவருக்கும் அஞ்சவில்லை.

பரிசு தந்த அரசர்கள்

சிவகங்கை அரசர், புதுகோட்டையரசர், வீரபாண்டியக் கெட்டிபொம்மு, மற்றும் அவர்காலத்திருந்த திருவாங்கூர் அரசர், குறுநில மன்னர்கள், பெருநிலக்கிழார்கள் முதலிய எல்லோரிடத்தினுஞ் சென்று சேதுபதியையும் தம் ஆசிரியரையும் பாராட்டிப் புகழ்ந்து பாடிப் பலவகைப் பரிசுகள் பெற்றார். இவர் பலவிடங்களினும் தாஞ்செய்த செயற்கருஞ் செயல்களையெல்லாம் சிவகங்கை அரசரிடஞ் சென்று,

“ அரியலூர் வீரன்மேல் பாடியவன் ஒருவீட்டை
 ஆயிரம்வீ டாக்கி வைத்தோம்
அம்மைநா தன்பேரில் வண்ணம் படித்தவனை
 அரசுநிலை யிட்டு வைத்தோம்
ஆப்பனூர்க் குறவஞ்சி பாடியே கோடையுடன்
 ஆடையும் விளைய வைத்தோம்
ஆனந்த நாதனுக் குப்புதுச் சேரிதனில்
 அழியாச்செல் வங்கொ டுத்தோம்,
கருதியச ரதுநபா புவையெதிர் வரச்சொலிக்
 காகிதம் அனுப்பி வைத்தோம்
கடலாடி முத்துக் கருப்பணன் வணந்தனைக்
 கற்றோர்க் கமுதம் ஆக்கினோம்
காரைநகர் லட்சுமண முதலிபுகழ் பெறநங்
 கடைக்கணால் பார்த்து விட்டோம்

கவித்தலந் தன்னின்முத் தயமூப் பனைக்கற்ப
காலமும் இருக்க வைத்தோம்,
வரிசைபெறு பஞ்சமால் பண்டாரம் உத்யோகம்
மாறா திருக்க வைத்தோம்
மற்றுமவ னுக்கிளைய பிச்சாண்டி செட்டிக்கு
வச்ரதே கங்கொ டுத்தோம்
வாடும்ப யிர்க்குத் திருக்கூட லூரிலே
மழைபெய்ய நாம்பா டினோம்
மகமது தம்பிக்கு நீடுழி சாகா
வரத்தைக் கொடுத்து விட்டோம்,
திருவையாற் றுச்சுப்ர மணையபிள் ளைக்குச்
சிரஞ்சீவி தனைய ளித்தோம்
சேதுபதி வாசல்அவ தானியா நம்மகிமை
தெரியாத பேரும் உண்டோ
தெள்ளமுது போலஎம் உளமீது பாடிவரு
செந்தமிழ் நிறுத்த லாமா
சிவகங்கை அரசுபுரி கவுரிவல் லவராச
செகமண்ட லாதி பதியே.”

என்னுஞ் செய்யுள் மூலம் தெரியப்படுத்திப் பல பரிசுகள் பெற்றார்.

மக்கள்

இவருடைய மகனாகத் தோன்றிய அருணாசலம் என்பவரும் கல்விகற்றுச் சிறந்து அருணாசலக் கவிராயர் என்னும் பெயருடன் விளங்கினார். இந்த அருணாசலக் கவிராயருடைய மகன் பாட்டனார் பெயரை இடப்பெற்றுக் கல்வி கேள்விகளிற் சிறந்து சிறிய சரவணக் கவிராயர் என்னும் பெயருடன் விளங்கினார். இவரால் குன்றைச் சிலேடை வெண்பா, திருச்சுழியலந்தாதி, மதுரை யமகவந்தாதி முதலிய நூல்கள் பாடப்பெற்றன.

நூல்கள்

முத்திருளப்பப்பிள்ளை என்பவர்மீது, "காதல்" என்னும் பெயருடன் ஒரு நூல் பாடினார். மற்றும் பணவிடு தூது, தருமர் அசுவமேதயாகப் புராணம், விநாயகர் திருமுக விலாசம் என்னும் நூல்களையும் இயற்றினார். இவர் மனிதர்கள்மீதும் தெய்வங்கள்மீதும் பாடிய பாடல்கள் பல தனிச் செய்யுட் சிந்தாமணி முதலிய நூல்களிற் சேர்க்கப் பெற்றுள்ளன.

கக. நல்லாப்பிள்ளை

தோற்றமும் கல்வியும்

தொண்டை மண்டலத்திலே முதலம்பேடு என்னுஞ் சிற்றூரிலே இற்றைக்கு இருநூற்று இருபத்திரண்டியாண்டுகட்கு முன்னர் நல்லாப்பிள்ளை தோன்றினார். நல்லாப்பிள்ளையின் குலம் கருணீகர் குலம். அவர் இளைஞராயிருக்கும்போதே கலைமகளை வழிபட்டு வந்தார். அதனால் கல்வியில் மிகச் சிறந்தவராக விளங்கினார். அவருக்கு வடமொழிப் பயிற்சியும் நன்கு அமைந்தது. செய்யுள் இயற்றுதலிலே மிக வல்லவராக விளங்கினார்.

நூல் இயற்றல்

முருகக் கடவுள் தோற்றமுதல் தெய்வயானையம்மை திருமணம் வரையில் பாடி, அந்நூலுக்குத் தேவசேனை புராணம் என்று பெயரிட்டு அரங்கேற்றினார். இதனால் இவருடைய புகழ் எங்கும் பரவியது. பலரும் போற்றப் பெருமையுடன் வாழ்ந்திருந்தார். இந்நூலை இயற்றியபோது இவருக்கு அகவை பதினெட்டு என்ப.

வீரராகவ ரெட்டியார்

அந்நாளில் அந்நாட்டில் செங்காடு என்னுஞ் சிற்றூரில், வீரராகவ ரெட்டியார் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியறிவுடையவர். இராமயணம் பாரதம் முதலிய இதிகாசங்களைப் படித்தவர். வடமொழிப் பாரதம் மிக விரிவானதென்றும், வில்லிபுத்தூரார் பாரதத்தை மிகச் சுருக்கமாகப் பாடியிருக்கிறார் என்றும் அவர் அறிந்தார். தமிழிலும் விரிவான பாரதம் இருக்கவேண்டும் என்று எண்ணினார். வடமொழிப் பாரதம்போல் விரிவாகப் பாடக்கூடிய சதுரர் யாவர் என்று பலரிடமும் உசாவினார். சிலர் நல்லாப்பிள்ளையின் பெருமையையும் அறிவாற்றலையுந் தெரியப்படுத்தினார்கள். ரெட்டியார் நல்லாப்பிள்ளையைக் கண்டு தமது நோக்கத்தைத் தெரியப்படுத்தினார். ஏதேனும் நூல்கள் இயற்றவேண்டும் என்று எண்ணமிட்டுக் கொண்டிருந்த நல்லாப்பிள்ளைக்கு ரெட்டியார் வேண்டுகோள் இரட்டை மகிழ்ச்சியை அளித்தது. அவர், "அப்படியே செய்யத் தொடங்குகிறேன்," என்று கூறிப் பாரதத்தை வடமொழியில் இருந்து மொழிபெயர்த்துப் பாடத் தொடங்கினார். அப்போது அவருக்கு அகவை இருபது தான்.

பாரதம் பாடுதல்

நல்லாப்பிள்ளை, வடமொழிப் பாரதம் பெருந்தேவனார் பாரதம் வில்லி பாரதம் ஆகியவைகளை நன்கு ஆராய்ந்தார். வில்லி பாரதத்தில் விடுபட்ட கதைகளை யெல்லாம் முற்றிலும் பாடினார். வில்லிபுத்தூரார் சுருக்கமாகப் பாடியவைகளைத் தாம் பெருக்கமாக்கினார். வில்லிபுத்தூரார் பாடல்களையும் சேர்த்துக்கொண்டார்.

அந்நாளில் பாண்டிநாட்டில் முருகப்ப உபாத்தியாயர் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் நல்லாப்பிள்ளை

யோடு உடன் படித்தவர். நல்லாப்பிள்ளை பாரதம் பாடுஞ் செய்தியை அவர் அறிந்தார். தாமும் நல்லாப்பிள்ளையோடு சேர்ந்து பாரதத்தை இயற்றவேண்டும் என்று எண்ணினர். அவர் உடனே புறப்பட்டு நல்லாப்பிள்ளையிடத்திற்கு வந்து சேர்ந்து தமது நோக்கத்தைத் தெரியப்படுத்தினர். நல்லாப் பிள்ளை மிகுந்த மகிழ்ச்சியுடன் அவரையும் பாரதம் பாடும் பணியில் பங்காளியாகச் சேர்த்துக் கொண்டார். முருகப்ப உபாத்தியாயர் தாமுஞ் சேர்ந்து பாரதத்தைப் பாடினர். பாரதம் மிகவிரைவில் முற்றுப்பெற்றது.

அரங்கேற்றம்

பாரதம் முற்றுப் பெற்ற செய்தியை ரெட்டியார் அறிந்து மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். காஞ்சிபுரம் வரதராசப் பெருமாள் சந்நிதியில் நல்லாப் பிள்ளையின் பாரதம் அரங்கேறுவதற்குச் சிறப்பான ஏற்பாடு செய்தார். நல்லாப்பிள்ளை தம் நண்பருடன் காஞ்சிக்குச் சென்று பாரதத்தைச் சிறப்பாக அரங்கேற்றி முடித்தார். கேட்டு மகிழ்ந்த புலவர்கள் சாற்றுக்கவி பாடிச் சிறப்புச் செய் தனர். ரெட்டியார் நல்லாப்பிள்ளைக்கும் முருகப்ப உபாத் தியாயருக்கும் பொருளும் ஆடைகளும் வழங்கிச் சிறப் புறச் செய்தனர்.

செய்யுள் தொகை

நல்லாப்பிள்ளை பாரதம் பதினாலாயிரத்து எழுநூற்று இருபத்தெட்டுப் பாக்களைக் கொண்டது. இவற்றுள் வில்லி புத்தூரார் இயற்றியது நாலாயிரத்து முந்நூற்றைம்பது. வில்லிபுத்தூரார், நல்லாப்பிள்ளை, முருகப்ப உபாத்தியாயர் என்னும் மூவரால் முடியப் பெற்றிருந்தும் நல்லாப்பிள்ளை ஒருவர் பெயரால் ' நல்லாப்பிள்ளை பாரதம் ' என்று வழங்கு வதற்குக் காரணம் பெரும்பான்மையான செய்யுட்களை

நல்லாப் பிள்ளை இயற்றியமையேயாகும். நல்லாப்பிள்ளையினால் முற்கூறிய தேவசேனை புராணம், பாரதம் ஆகிய இரண்டைத் தவிர வேறு நூல்கள் செய்யப் பெற்றிருப்பதாகத் தெரியவில்லை.

பூவெலாம் சுரும்பின் ஓசையே பொய்கைப்
புனலெலாம் ஓதிமக் குழூவே,
காவெலாம் குயிலின் கூக்குரல் ஒலியே
கடலெலாம் நிதிதரு கலமே,
தாவெலாம் கலாப மஞ்ஞையின் நடமே
தடமெலாம் தந்திகள் நெருக்கே,
நாவெலாம் மறையோர் ஆரண ஒலியே
நற்குரு நாட்டினுள் அம்மா.

என்பது நல்லாப்பிள்ளையின் பாடல்

உ௦. வீரமாமுனிவர்

பிறப்பும் பெயரும்

இத்தாலிய நாட்டில் வெனிஸ் மாகாணத்தில் காஸ்திகிளியோன் என்னும் சிற்றூரில் 1680-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 8-ஆம் நாள் வீரமாமுனிவர் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் கொண்டல்போ பெஸ்கி. தாயார் பெயர் எலிசபெத். வீரமா முனிவருக்கு இடப்பட்ட பிள்ளைப்பெயர் கான்ஸ்டான்ஷியுஸ் ஜோசப் பெஸ்கி. பெஸ்கி என்பது இவருடைய குடிப்பெயர். கான்ஸ்டான்ஷியுஸ் தமிழ் நாட்டிற்கு வந்தவுடன் தம் பெயரைத் தமிழ்ப் படுத்தித் தைரியநாதன் என்று மாற்றினார். தைரியம் என்னும் சொல் வடமொழி என்று கருதிப் பின் வீரமாமுனிவர் என்று அமைத்துக் கொண்டார்.

கல்வியும் தொண்டும்

இளமைக் காலத்தில் கற்க வேண்டிய கல்வியை நன்கு கற்றார். தாம் பிறந்த கிறித்து சமய வளர்ச்சிக்கு உழைக்க வேண்டும் என்னும் அவா இவருக்கு உண்டாகியது. தம் எண்ணத்தைத் தாய் தந்தையர்கட்குத் தெரியப்படுத்தினார். மைந்தனுடைய எண்ணத்திற்குப் பெற்றோர்கள் ஆதரவு தந்தனர். தமது பதினெட்டாவது ஆண்டில் துறவியாகி ஏசு சபையில் சேர்ந்தார். சமய நூல்களைக் கற்றுணர்ந்து 1706-ஆம் ஆண்டில் திருமறைக் குரு என்று பட்டம் பெற்றார். இந்தியாவை யடைந்து தொண்டு செய்ய வேண்டும் என்னும் எண்ணம் பெஸ்கிக்கு இருந்தது. தமது நோக்கத்தைத் திருச் சபைத் தலைவர்கட்குத் தெரியப்படுத்தினார். அவர்கள் 1711-ஆம் ஆண்டில் பெஸ்கியை இந்தியாவுக்கு அனுப்பிவைத்தார்கள். கப்பலேறி மேற்குக் கடற்கரையில் உள்ள கோவா நகரத்திற்கு வந்து சேர்ந்தார். அங்குச் சிலநாள் தங்கிப் பிறகு கொச்சியை அடைந்தார். கொச்சியின் அண்மையில் உள்ள அம்பலக் காடு என்னும் இடத்திற்குச் சென்று அங்கிருந்த திருமடத்தில் சில நாள் தங்கினார்.

பிறகு தமிழ்நாட்டிலே சுற்றத் தொடங்கினார். திருநெல்வேலி, பாளையங் கோட்டை, தூத்துக்குடி, கயத்தாறு முதலிய பல விடங்களுக்குச் சென்றார். ஆங்காங்கிருந்த அறிஞர்களிடத்தில் தமிழ்மொழியைக் கற்றார். தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களை மக்களுடன் நெருங்கிப் பழகி அறிந்து கொண்டார்.

இந்திய நாடெங்கும் சுற்றிய வீரமாமுனிவருக்கு இந்திய நாட்டு மொழிகளாகிய பார்சி, இந்துஸ்தானி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பிற மொழிகளினும் பயிற்சியுண்டாயிற்று. தாய் மொழியாகிய இத்தா

லிய மொழியோடு கிரேக்கம், எபிரேயம், இலத்தீன், பிரஞ்சு ஆகிய மொழிகளில் புலமை மிகுதியும் உண்டு. இத்தாலிய ரான வீரமாமுனிவருக்குத் தமிழ்நாட்டுப் பழக்க வழக் கங்கள் நன்றாகப் பிடித்தன. இந்த நாட்டுப் பழக்க வழக் கங்களை மேற்கொள்ளத் தொடங்கினார். சைவர்களான தமிழ்ச் சமையல்காரர்களைச் சமையலுக்கு ஏற்படுத்திக் கொண்டார். புலால் உணவை அறவே நீக்கிச் சைவரானார். நாள்தோறும் ஒருவேளை மட்டும் உண்ணுதலை மேற்கொண் டார். தமது கோலத்தையும் இந்தியப் பண்பாட்டிற்கு ஏற்றபடி மாற்றிக் கொண்டார். நெற்றியிற் சந்தனப் பொட்டு வைத்துக்கொள்வார். தலையிலே பட்டுக் குல்லா அணிவார். இடுப்பிலே காவியாடை கட்டிக் கொள்வார். திருநெல்வேலிக் கம்பிச் சோமனைப் போர்வையாகப் போர்த்திக் கொள்வார். கால்களிலே மிதியடிகளைப் போட் டுக் கொள்வார். வெளியே புறப்படும்போது முனிவரின் கோலம் இன்னும் சிறந்து விளங்கும். இவர் தமிழ்நாட் டோடு ஒன்றுபட்டுத் தம்மை முழுத் தமிழராகவே மாற்றிக் கொண்டார்.

தமிழ்ப் பயிற்சி

பலரிடத்தினும் தமிழ்மொழியைச் சிறிது சிறிது கற்ற வீரமாமுனிவர், சுப்பிரதீபக் கவிராயரிடத்திலே சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, தொல்காப்பியம், கம்பராமாயணம் முதலிய நூல்களை வரன்முறையாகப் பாடங்கேட்டுணர்ந்தார். திருக்குறளிடத்திலே வீரமா முனிவர் பெரும் பற்றுக்கொண்டிருந்தார்.

சமயத்தொண்டு

முதலில் வீரமாமுனிவர் ஓரிடத்திலும் நிலையாகத் தங்கி யிருக்கவில்லை. ஊரூராகச் சுற்றிச் சமயச் சொற்

பொழிவுகள் செய்து தமிழர்களைக் கிறித்துவர்களாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார். இந் நாளில் இவருக்குச் சில பகைவர்களும் ஏற்பட்டார்கள். 'குருக்கள் பாடி' என்னும் இடத்தில் இருக்கும்போது வீரமாமுனிவருக்குத் தொல்லை யொன்று ஏற்பட்டது. மக்களிற் சிலர் முனிவருக்குப் பகை யானார்கள். அந் நாளில் மதுரை நாயக்கர் படையினர் வரி வசூல் செய்வதற்கு அவ்வூருக்கு வந்திருந்தனர். மக்கள் பலர் படையினரிடம் போய் "வீரமாமுனிவர் கிறித்துவ மதத்தில் சேருமாறு தம்மைத் துன்புறுத்துகின்றார்." என்று கோளுரை புகன்றனர். படைத் தலைவனாக வந்திருந்த எல்லமராசன் என்பவன் முனிவரையும் அவர் துணைவர்களையும் கைதியாக்கி வருமாறு வீரர்களை அனுப்பினான். வீரர்கள் வீரமாமுனிவரை விரைவிற் பற்றிப்போய் எல்லமராசன் முன்பு நிறுத்தினர். எல்லம ராசன் கேட்ட கேள்விகட்கு வீரமாமுனிவர் விறைப் பாகப் பதிலுரைத்தார். எல்லமன் வெகுண்டான். எல் லோரையுந் துன்புறுத்தினான். ஒருவரைச் சித்திரவதை செய்தான். வீரமாமுனிவர்மீது பல குற்றங்களைச் சாட் டித் தூக்குத் தண்டனை விதித்தான். மறுநாள் காலையில் தூக்கிலிடுவதற்கு ஏற்பாடாயிற்று. கொலை செய்யுமிடத் திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். கழுத்தில் சங்கிலியும் மாட்டியாயிற்று. இச் சமயத்தில் எதிர்பாராத நிகழ்ச்சி யொன்று நடந்தது. இராச வம்சக் கிறித்துவர்கள் சிலர் வந்தனர். எல்லமனைக் கண்டனர். தங்கள் தலைவர் தலை போனால் தாங்களும் உயிரைவிட நேரிடுமென்றும், வீரமா முனிவர் எத்தகைய தவறுஞ் செய்தவர் அல்லர் என்றும் மன்றாடினர். படைத்தலைவன் அவர்களுடைய வேண்டு கோளைத் தட்ட முடியவில்லை. எல்லோரும் விடுதலை செய் யப்பட்டனர். மேலும் அந்நாளில் நாடெங்கும் இருந்த

கிறித்துவ போதகர்களும் சிற்றரசர்களாலும் படைத் தலைவர்களாலும் பலவகையான தொல்லைகட்கு உள்ளாயினர்.

திருக்காவலூர்

திருச்சிமாவட்டத்தில் உடையார்பாளையம் கூற்றத்தில் ஏலாக்குறிச்சி என்னும் சிற்றூர் உள்ளது அதில் கிறித்துவர்களுடைய கோயில் ஒன்று உண்டு. 1716-ஆம் ஆண்டில் வீரமாமுனிவர் ஏலாக்குறிச்சிக்குச் சென்றார். அவ்வூர்க் கோயிலின் அறச்செயல்களை மேற்கொண்டார். கோயிலை நல்ல முறையில் அமைத்தார். ஆண்டுதோறும் திருவிழாவும் செய்தார். ஏலாக்குறிச்சி திருக்காவலூர் என்னும் பெயருடன் சிறந்து விளங்கலாயிற்று. பலவிடங்களினுமிருந்த கிறித்துவர்கள் திருக்காவலூரை அடைந்து வீரமாமுனிவரிடம் அருளுரைபெற்றுச் சிறப்படைந்தனர்.

திருக்காவலூர் அரியலூர் பெருநிலக்கிழார் இரங்கப்ப மழவராயர் என்பவருக்கு உரிமையாக இருந்தது. அந்த மழவராயர் வீரமாமுனிவருடைய அறிவுத்திறனையும் நல்லொழுக்கத்தையும் கேட்டு மகிழ்ந்தார். நேரில் கண்டும் உரையாடினார். கோவிலுக்குச் சில இனாம் நிலங்களும் வழங்கினார்.

நூல்கள் இயற்றல்

வீரமாமுனிவர் தமிழ்ப்பாக்களை நன்கு பாடக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தார். திருக்காவலூர்க்கோவிலில் எழுந்தருளிய கன்னிமரியின்மீது கலம்பகம் ஒன்று பாடினார். மற்றும் அடைக்கல நாயகிமேல் கலி வெண்பா, அடைக்கல மாலை, உலா என்னும் நூல்களும் இயற்றினார். அவ்விடமே நிலையாகத் தங்கிய முனிவர் நூல்கள் பலவற்றை இயற்றலானார். சூசையப்பரின் வரலாற்றை விரித்துக் கூறுவதான தேம்பாவணி என்னும் நூலை 3615 விருத்தப்

பாக்களால் பாடினார். வீரமாமுனிவர் காலத்தில் தமிழ் மொழியில் அகரவரிசை நூல்கள் இல்லை. வீரமாமுனிவர் இந்தக் குறையைப் போக்க எண்ணினார். சதுர அகராதி என்னும் பெயருடன் அகராதி ஒன்றைத் தொகுத்து முடித்தார். தமிழில் அகரவரிசை நூல்கள் இயற்றும் வழக்கம் இதற்குப் பிறகுதான் உண்டாயிற்று. தமிழ் இலத்தீன் அகராதி ஒன்றும், போர்த்துக்கீசியம் தமிழ் இலத்தீன் அகராதி ஒன்றும் செய்தார். இவைகள் பிற மொழி கற்பவர்கட்குப் பேருதவியாக அமைந்தன. தொன்னூல் விளக்கம் என்னும் இலக்கண நூல் ஒன்றையும் முனிவர் எழுதினார். தமிழ்மொழியில் வேறு பல சிறந்த அகராதிகள் தோன்றியபடியால் இன்று சதுர அகராதி பெயரளவில் இருக்கிறது. தொல்காப்பியம் போன்ற அரிய இலக்கண நூல்கள் இருத்தலால் முனிவருடைய தொன்னூல் விளக்கமும் பெயரளவிலேயே இருந்துகொண்டிருக்கிறது.

வீரமாமுனிவர் காலத்தில் தமிழ்மொழியில் உரைநடை நூல்கள் அதிகமாக இல்லை. இருந்த சில உரைநடை நூல்களும் நீளமான மொழித்தொடராக விளங்கின. முனிவர் இக்குறையைப் போக்குதற்குப் பரமார்த்த குரு கதை முதலிய உரைநடை நூல்களை எழுதி வழிகாட்டினார். இந்நாளில் உரைநடை நல்வளர்ச்சியடைந்து சிறந்து விளங்குகிறது.

இறுதி

வாணாள் முழுவதையும் சமயத்தொண்டிற்குந் தமிழ்த்தொண்டிற்குமே செலவிட்ட வீரமாமுனிவர் 1747-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 4-ஆம் நாள் தம் அறுபத்தாறுவது அகவையில் அம்பலக்காட்டுக் குருமடத்தில் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

இயற்றிய நூல்கள்

1. தேம்பாவணி
2. தொன்னூல் விளக்கம்
3. திருக்காவலூர்க் கலம்பகம்
4. பரமார்த்த குருகதை
5. அடைக்கலநாயகி கலி வெண்பா
6. அடைக்கலநாயகி மாலை
7. அடைக்கலநாயகி உலா
8. அன்னை அழுங்கல் அந்தாதி
9. கருணாம்பரப்பதிகம்
10. கித்தேரியம்மாள் அம்மானை
11. சதுர அகராதி
12. வேத விளக்கம்
13. வேதியர் ஒழுக்கம்

என்னும் இவைகளும் இவைபோன்ற வேறு சில நூல்களும் வீரமாமுனிவரால் இயற்றப் பெற்றுள்ளன.

உக அழகிய சொக்கநாதபிள்ளை

தோற்றமுங் கல்வியும்

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக்கு வடக்கேயுள்ள தச்சநல்லூரிலே ஏறக்குறைய நூறுயாண்டுகட்கு முன்னர் அழகிய சொக்கநாதபிள்ளை தோன்றினார். இவருடைய குலம் சைவவேளாளர் குலம். தந்தையாருடைய பெயர் வன்னியப்பிள்ளை. வன்னியப்பிள்ளை ஆனைமுகக் கடவுளிடத்தில் பேரன்புடையவர். இலக்கிய இலக்கணங்களை வழுவறக் கற்றுக் கல்வியறிவிற் சிறந்து விளங்கினார். தந்தை மகற்காற்ற வேண்டிய கடமையை நன்குணர்ந்த வன்னியப்பிள்ளை தம் பிள்ளையையும் தம்போல் அறிவாளி

யாக்கினார். ஆகவே, அழகிய சொக்கநாதபிள்ளை இளம் பருவத்திலேயே முதுபெரும்புலவர்போற் சிறந்து விளங்கினார். அழகிய சொக்கநாதபிள்ளை தம் தந்தையாரிடத்தே கல்வி கற்றுத் தேர்ந்தவரென்பது,

கனிதரு பெருங்கருணை மருவுபதி னொருகரக்
கணபதியை அநவரதமும்
கருதலிற் பெறுபயன் அநந்தத்துள் ஒன்றெனக்
கடையனேன் தனையு மகவென்று
இனிதுபெற் றருமையின் வளர்த்துப் படிப்பித்
திகத்தொடு பரத்தும் இன்பம்
எய்தவருள் உபதேசம் உதவுசற் குருவான
எந்தைதாள் சிந்தை செய்வாம்.

என்னும் இவருடைய பாடலால் விளங்குகின்றது.

அலுவலும் ஊதியமும்

அறிஞர்களை வாட்டும் வறுமை அழகிய சொக்கநாதரையும் இளமையிலேயே பற்றியது. அதன் அல்லலைப் போக்க அலுவல் ஒன்று தேடினார். திருநெல்வேலி முனிசீபுக்கோர்ட்டில் பார்த்தெழுதும் வேலை அகப்பட்டது. அவ் வேலைக்கு அந்நாளில் திங்கள் ஒன்றுக்கு ரூபா பத்து. அக் கால நிலைமைக்கும் வாழ்க்கைச் செலவிற்கும் அப் பத்து ரூபா மிகப்பெரிய ஊதியமாக விளங்கியது. ஆகவே, சொக்கநாதர் மிக மனநிறைவுடன் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தார்.

மாசம்பத்து

அழகிய சொக்கநாதரைப் பார்த்து யாரேனும், "தங்கட்கு ஊதியம் எவ்வளவு" என்று கேட்பின் சொக்கநாதர் உடனே, "மாசம்பத்து" என்று மறுமொழி கூறுவார். இம்மறுமொழி மாசம் பத்து ரூபா என்று

பொருளாவதோடு மா சம்பத்து, பெருஞ்செல்வம் என்றும் பொருள்படுதலைப் பார்த்து மற்றவர்கள் மிகுந்த மகிழ்ச்சியடைந்து அறிஞரின் சொல்லாற்றலை வியந்து புகழ்வர்.

சுருக்கினன்

அழகிய சொக்கநாதபிள்ளை வேலைபார்த்துக்கொண்டிருந்த கோர்ட்டிலே ஒரு வேலை காலியாயிற்று. அதனைப் பெறுதற்குப் பலர் விரும்பி விண்ணப்பம் போட்டனர். முனிசீப் ஒருவனை அழைத்தார். அவனிடம் மனு ஒன்றைக் கொடுத்து, "இதனைச் சுருக்கி எழுதிக்கொண்டு வா. உன் அறிவுத்திறமையைப் பார்ப்போம்", என்று கூறினர். அந்த மனிதன் செய்தியைச் சுருக்காமல் இடத்தைச் சுருக்கி எழுதிவந்து முனிசீப்பிடம் கொடுத்தான். அதனைப் பார்த்த முனிசீப் நகைத்து, "நான் சுருக்கி எழுதச் சொன்னேன். நீ அப்படிச் செய்யக்காணோமே" என்று கேட்டார். அப்பொழுது அண்மையில் இருந்த அழகிய சொக்கநாதர், "கோர்ட்டார் சொன்னபடிதான் இவர் செய்திருக்கிறார். கோர்ட்டார் சொன்னது செய்திச் சுருக்கம். இவர் செய்திருப்பது இடச் சுருக்கம்", என்றார். இதனைக்கேட்டு முனிசீபும் அங்கிருந்தவர்களும் நகைத்தார்கள். முன்சீப் சொக்கநாதரின் அறிவுத் திறமையைப் பாராட்டினர்.

பொடிவைத்து நகை செய்தல்

அழகிய சொக்கநாதரோடு ஒரு சமயம் பல நண்பர்கள் சேர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களுள் பொடிப்போடும் பழக்கம் உடையவர் ஒருவரும் இருந்தார். அவர் ஒருமுறை பொடிடப்பியைக் கீழேவைத்த பொழுது வேறொரு நண்பர் அந்த டப்பியை எடுத்து

மறைத்துக்கொண்டார். பொடி டப்பி அன்பரோ பொடிப் போடுவதற்கு டப்பியைத் தேடினார். துணிமணிகளை யெல்லாம் உதறினார். காணமற்போகவே பதறினார். அவரது நிலைமையைக்கண்டு அங்கிருந்தவர்கள் இரங்கினார்கள். பொடி டப்பியை மறைத்துக்கொண்ட அன்பர் பத்தர்மரபினர். பொடிடப்பிக்காரரின் திண்டாட்டத்தைக் கண்டு அவர் நகைத்தார். பொடிடப்பி அவரிடம் இருக்கிறதென்பதை ஊகித்துக்கொண்ட சொக்கநாதர் அந்த நண்பர் முகத்தைப்பார்த்துத், "தாங்கள் பொடி வைத்துத்தான் நகை செய்கிறீர்களா?" என்று கேட்டார். இம்மொழி இரு பொருள் பயந்ததைக் கண்டு அங்கிருந்தவர்கள் நகைத்தனர். பத்தரோ, "இந்தாருங்கள்" என்று கூறிப் பொடிடப்பியைக் கொடுத்து விட்டார்.

முத்துசாமிப் பிள்ளை நட்பு

அந்நாளில் முத்துசாமி பிள்ளை என்னும் பெருஞ் செல்வர் சிறந்த வள்ளலாக விளங்கினார். அழகிய சொக்கநாதர் அறிவாற்றலும் உரையாடல் வன்மையும் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தன. இருவருக்கும் தொடர்ந்த நட்பு உண்டாகியது; இருவரும் இணைபிரியா நண்பர்களாயினர். இவர்களின் கூட்டுறவு மற்றவர்கட்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அறிஞரும் செல்வரும் இவ்வாறு நட்புக் கொள்ளும் புதுமையும் உண்டோ என்று அவர்களின் பண்பைக்கண்ட புலவர்கள் புகழ்ந்து பலவாறு பாடலாயினர். ஒரு புலவர்,

" பூமகளும் நாமகளும் மாதரெனப்
  புகல்குறைவு போதல் அன்றி,
மாமிமரு மகளாத லாற்பகைஞர்
  எனும்வசையும் மாற வேண்டித்,

தாழுயரா டவராநன் னேயரா
உலகின்முத்துச் சாமி யென்றும்,
தோமில்அழ கியசொக்க நாதனென்னும்
பெயர்பெற்றுத் தோன்றி னால்."

என்று பாடிக் களிகூர்ந்தார். அழகிய சொக்கநாதர் தமது நகைச்சுவை மிக்க உரையாடல்களால் முத்துசாமிப் பிள்ளையைக் களிப்பென்னுங் கடலில் அமிழ்த்திக் கொண்டிருந்தார்.

மிருதங்கக்காரன்

கைதேரு த மத்தளக்காரன் ஒருவன் ஒருநாள் மத்தளத்தைத் தொப்புத்தொப்பென்று அடித்துக்கொண்டு முத்துசாமிப் பிள்ளையிடம் நன்கொடை பெறுவதற்கு வந்தான். அவன் மத்தளத்தை அடித்த மாதிரி எல்லோருக்கும் மிகுந்த நகைப்பை உண்டாக்கியது. கூடையோடு தெருவிற் சென்றுகொண்டிருந்த சில பெண்களும் சிறுவர்களும் வந்து அவன் மத்தளம் அடிப்பதை வேடிக்கை பார்த்தனர். அப்போது முத்துசாமிப் பிள்ளையோடிருந்த அழகிய சொக்கநாதர்,

"எங்கண்முத்து சாமீமன்னா இங்கே ஒருவன்மிரு
தங்கமதை ஓயாமல் தட்டினான்—அங்கங்கே
கூடிநின்ற பெண்களெருக் கொள்வதற்குக் கூடையெடுத்
தோடிவந்தார் நீ பார்த்தா யோ."

என்று சொல்லிப்பாடினார். இதனைக்கேட்டு முத்துசாமிப் பிள்ளையும் அவையில் இருந்த பிறரும் விழுந்து விழுந்து நகைத்தனர்.

யாதிரி

ஒருநாள் சொக்கநாதப் பிள்ளை முத்துசாமிப் பிள்ளையைப் பார்த்து, முதலெழுத்து இல்லாவிட்டால் விளக்கிற் போடுவதாகும். இடையெழுத்து இல்லாவிட்டால் மனைவி

யின் பேராகும், கடையெழுத்தில்லாவிட்டால் அரையின் பேராகும்; மூன்றெழுத்தால் ஆகிய இம்மொழி கிறித்து மத குருவின் பெயராக இருப்பதுடன் ஒரு மரத்தின் பெயராகவும் இருக்கிறது. அம்மொழி எது என்பதைக் கூறுங்கள் பார்ப்போம் என்னும் கருத்தை அமைத்து,

"முருகனேகர் முத்துசாமி முதலெழுத் தில்லா விட்டால்
இரவிடு விளக்கிற் சேரும் இடையெழுத் தில்லா விட்டால்
கருணைசேர் மனைவி பேராம் கடையெழுத் தில்லா விட்டால்
அரையின்பே ரதுகி றித்து மதக்குரு மரத்தொன் றாமே."

என்று பாடினார்.

இதிற் குறிக்கப்பெறுகிற மொழி பாதிரி; விளக்கிற் சேர்வது திரி, மனைவிபேர் பாரி, அரையின் பேர் பாதி. மற்றும் விடுகவிகளாக;

புதையல்

" முற்பாதி போய்விட்டால் இருட்டே யாகும்
　　முன்னெழுத்தில் லாவிட்டால் பெண்ணே யாகும்,
பிற்பாதி போய்விட்டால் ஏவற் சொல்லாம்
　　பிற்பாதி யுடன்முனெழுத் திருந்தால் மேகம்
சொற்பாகக் கடைதலைசின் மிருகத் தீனி
　　தொடர்இரண்டாம் எழுத்துமா தத்தில் ஒன்றாம்
பொற்பார்திண் புயமுத்துச் சாமி மன்னா
　　புகலுவாய் இக்கதையின் புதையல் கண்டே."

முற்பாதி போய்விட்டால், அல் - இருள்,
முன்னெழுத் தில்லாவிட்டால், தையல் - பெண்
பிற்பாதிபோய்விட்டால், புதை - புதையென் னேவல்,
பிற்பாதியுடன் முன்னெழுத்து, புயல் - மேகம்,
சொற்பாகக்கடையும் தலையும், புல் - விலங்குணவு,
இரண்டாம் எழுத்து மாதத்தில் ஒன்று, தை - தைமாதம்.

ஈ

"வெள்ளனத்து மீதேறும் பிரமன் அல்ல
மேனிகறுப் பாயிருக்கும் மாலும் அல்ல,
தள்ளரிய வறுகாற்பூ சிக்க நாடும்
சங்கரனும் அல்லவிடம் தலையிற் கொண்டும்
தெள்ளுமதன் உயிர்போகா தெந்த நாளும்
சிறையிருக்கும் விடுதலையாய்ச் செகத்து லாவும்
பள்ளிகொள்ளு முகுந்தனிகர் முத்துச் சாமிப்
பாண்டியனே இக்கதையின் பயன்நீ சொல்லே."

இச்செய்யுளிலும் இறுதியில் விடை அமைந்துள்ளது. ஈ உணவின்மீது ஏறும்; உடல் கருநிறம் உடையது. தேனின் பொருட்டு மலரைத்தேடும். ஈக்கு விடம் தலையில். அதற்குச் சிறகும் உண்டு. அஃது எங்கும் பறந்து திரியும். இத்தகைய விடுகதைப் பாடல்களேயல்லாமல் இருபொருள் தருமாறு சிலேடையாகப் பாடுவதினும் இவர் வல்லவர். முத்துசாமிப்பிள்ளையை முன்னிலைப் படுத்திச் சிவனுக்கும் திருமாலுக்கும், சிவனுக்கும் தேங்காய்க்கும், சிவனுக்கும் வாழைப்பழத்திற்கும், திருமாலுக்கும் கைக்கடிகாரத்திற்கும், மன்மதனுக்கும் நெருப்புக்கும், வேசைக்கும் சவுளிக் கடைக்கும், வேசைக்கும் நாய்க்கும், வேசைக்கும் பேய்க்கும், கள்ளனுக்குஞ் செருப்புக்கும், மயிலுக்கும் கரும்புக்கும், ஒட்டுத்திண்ணைக்கும் கழுத்தணிக்கும், மரத்திற்கும் பீற்றற் குடைக்கும், இவர் பாடியுள்ள சிலேடைப் பாடல்கள் படிப்பவர்கட்கு மிகுந்த களிப்பையூட்டுவனவாம்,

பறவைகளின் பெயர்

பறவைகளின் பெயரை அடைமொழிகள் இல்லாமல்,

"சக்கரவா கங்கிளியாந் தைநாரை அன்னங்க
ரிக்குருவி கௌதாரி காடையன்றில்—கொக்கு
குயில்கருடன் காக்கைபுறு கோழியிரா சாளி
மயில்கழுகு கோட்டான்வெள வால்."

என்று பாடியுள்ளார்.

பூச்செண்டு

அழகிய சொக்கநாதர் ஒருநாள் காந்திமதியம்மை கோயிலுக்குச் சென்றார். அம்மையைத் தொழுது வாழ்த்தினார். பிறகு ஓரிடத்தில் நின்று வரம் வேண்டும் பாவனையில் கண்களை மூடிக் கைகளை நீட்டி ஏந்திக் கொண்டிருந்தார். அப்போது ஒரு செல்வர் உள்ளே போய் அம்மையைத் தொழுதார். அருச்சகர் அச்செல்வரின் கையிலே ஒரு பெரிய பூச்செண்டைக் கொடுத்தார். அப் பூச்செண்டுடன் செல்வர் வெளியே வந்தார். கைகளை ஏந்தியவாறு புலவர் கண்மூடி நின்றிருந்தலைக் கண்டார். அவர் கைகளிலே பூச்செண்டை வைத்து விட்டார். அழகிய சொக்கநாதர் கண்களைத் திறந்து பூச்செண்டைக் கண்டார். அம்மை வழங்கியதாக உள்ளங்களித்து மகிழ்ந்தார். பின்பு ஒருநாள் இதனை எண்ணி,

> "இணங்கொடுக்க நெறிசிறிதும் இல்லா நாயேன்
> 　　இசைத்தபிள்ளைக் கவிமாலை எத்திக் கும்போய்
> மணங் கொடுக்க நயந்தினிது வனைந்து கொண்ட
> 　　வண்கருணை நினைந்துருகி வழுத்து மோர்நாள்
> பணங்கொடுக்க துளதேனும் பாம்பும் போலப்
> 　　பாழ்த்தவறு மையும்கடனும் படுத்து கின்ற
> கணங்கொடுக்க மொழியும்வண்ணம் கைச்செண் டீந்த
> 　　காந்திமதித் தாயென்னைக் கைவி டாளே."

என்று பாடினார்.

சமகாலப் புலவர்கள்

கவிராச நெல்லையப்ப பிள்ளை, வேம்பத்தூர்ப் பிச்சுவையர், கல்போது புன்னைவனக் கவிராயர், முகவூர்க் கந்தசாமிக் கவிராயர், ககவூர் இராமசாமிக் கவிராயர், சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், முத்துவீருப் புலவர், கந்தசாமிப் புலவர், திருநெல்வேலி முத்துப் புலவர் முதலியவர்கள்

அழகிய சொக்கநாத பிள்ளை காலத்திருந்த சிறந்த புலவர்களாவர்.

இவரியற்றிய நூல்கள்

1. காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ்
2. பதசாகித்தியங்கள்
3. சிங்காரப்பதம்
4. அநவரததானநாதர் பதிகம்
5. காந்திமதியம்மை பதிகம்
6. காந்திமதியம்மை கலித்துறையந்தாதி
7. நெல்லைநாயக மாலை
8. முத்துச்சாமி பிள்ளை காதற்பிரபந்தம்
9. சங்கரநயினார் கோயில் அந்தாதி
10. ஸ்ரீவில்லிபுத்தூர்க் கோதையந்தாதி

முதலிய நூல்களும் தனிப்பாடல்கள் பலவும் அழகிய சொக்கநாத பிள்ளையவர்களால் செய்யப் பெற்றுள்ளன.

பாநயம்

இவருடைய பாடல்கள் எவ்வகையிலும் புதுமையுடையனவாகவே இருக்கும்.

"வெள்ளரிக் காயா விரும்புமவ ரைக்காயா
உள்ளமிள காயா ஒருபேச் சுரைக்காயா ?"

இவ்வடிகளில், வெள்ளரிக்காய், அவரைக்காய், மிளகாய், பேச்சுரைக்காய் முதலியவைகளைப் பார்க்கிறோம். ஆனால், இவ்வடிகளின் பொருள்,

வெள் அரிக்கு ஆயா—வெண்ணிறமுடைய திருமாலுக்கு (அவர் நரசிங்கமாகத் தோன்றிய தூணை) தாயா? (தூணைப்போல் பேசாமல் இருக்கிறாயே நீ தூணு) விரும்பும் அவரைக்காயா உள்ளம் இளகாயா—உன்னை விரும்புவோரை இயல்பாகச் சினவாத மனம் என்பால் இளக

மாட்டாயா? ஒருபேச்சு உரைக்காயா—ஒருமொழி சொல்ல மாட்டாயா என்பதாம்.

இறுதி

புலவர் திலகராய் விளங்கிய இவர் நல்லறிஞர்கள் உள்ளம் வருந்துமாறு 1885-ஆம் ஆண்டில் காலமானார்.

உஉ. நமசிவாயப் புலவர்

தென்பாண்டி நாட்டிலே செங்கோட்டை என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே நமசிவாயப் புலவர் தோன்றினார். நமசிவாயப்புலவர் குழவியாயிருக்கையில் தானே அவருடைய பெற்றோர் காலமாயினர். உறவினர் சார்பிலே நமசிவாயப் புலவர் வளர்ந்து பள்ளிக் கல்வியையும் பயின்றார். அகவை இருபது நிரம்பியபோது திருமணமும் முடிந்தது. நமசிவாயப் புலவர் பாபவிநாசச் சிவப்பதியை அடைந்து அப் பதியிலே வாழ்க்கை நடத்தத் தொடங்கினார். நூல்களைப் படித்தல் இறைவழிபாடு புரிதல் முதலியவைகளைச் செய்துகொண்டிருந்தார். அப் பதியில் எழுந்தருளிய இறைவியின் பெயர் உலகாம்பிகை என்பது நமசிவாயப்புலவர் அந்த அம்பிகைமீது பேரன்பு கொண்டு வழிபாடு செய்திருந்தார்.

விக்கிரமசிங்கபுரம் என்னும் ஊர் பாபவிநாசப்பகுதிக்கு அணித்தாக உள்ளது. அப்பதியில் அந்நாளில் அருள்நலம் கைவரப்பெற்ற பெரியார் ஒருவர் எழுந்தருளியிருந்தார். நமசிவாயர் அப்பெரியவரைப் போற்றி வழிபட்டார். அப்பெரியவர் இறைவியின் மூலமறையை நமசிவாயருக்கு நவின்று அதனை உருவேற்றப் பணித்தார். நமசிவாயரும் அவ்வாறே உருவேற்றினார். அம்மையின்

அருளால் நன்மைகள் பல இம்மையே நமசிவாயருக்கு உண்டாகத்தொடங்கின. அம்மையின் காட்சி புலவருக்குக் கனவின்கண் உண்டாகியது. கலைமகள் அருளும் புலவருக்கு மிகுதிப்பட்டது. சிங்கைவெண்பா முதலிய நூல்கள் பாடிச் சிறப்புடன் விளங்கியிருந்தார். புலவரின் கீர்த்தி பலவிடங்களினும் பரவியது. பாபவிநாசக்கோயில் சிங்கைக்கோயில் ஆகியவைகளில் பூசைக்குப்பிறகு அந்தணாளர்கட்கும் துறவிகட்கும் திருநீறு வழங்கியபின் நமசிவாயப்புலவருக்கு வழங்குதல்வேண்டும் என்னும் வழக்கமும் ஏற்பட்டது.

ஒரு காலத்தில் அரசன் ஒருவன் சிங்கைச் சிவன் கோயிலுக்கு வந்தான். அந்தணாளர்கட்கும் துறவிகட்கும் திருநீறு வழங்கிய பின் நமசிவாயப் புலவருக்கு வழங்குதலைக் கண்டான். அவருக்கு இச் சிறப்பு வழங்கக் காரணம் யாது என்று உசாவினான். நமசிவாயப் புலவர் தெய்வத்திருவருள் கைவரப்பெற்றவர் என்று பலரும் பகர்ந்தனர். ஆனால், அரசனுக்கு அச் செய்தியில் ஐயம் உண்டாயிற்று. அவன் நமசிவாயப் புலவரின் ஆற்றலை ஆராய்ந்துபார்க்க விரும்பினான். நமசிவாயப் புலவரைப் பார்த்து, "நீவிர் உம்முடைய பெருமையை எமக்குப் புலப்படுத்தவேண்டும். அவ்வாறு செய்யத் தவறுவீராயின், திருநீறு முதற்கண் பெறுஞ்சிறப்பு உமக்கு இல்லாமற் செய்வேன்," என்று கூறி வீம்புரையாடினான். கொற்றவன் கூற்றைக் கண்டு கற்றறி புலவர் சினங்கொண்டிலர் "ஓ அரசே! நீவிர் யாது செய்யவேண்டும் என்று கூறுகிறீர்? அதனைக் கூறுவீராயின் அவ்வாறே செய்வோம்," என்றார்.

அரசன் அறிஞரைப்பார்த்து, "உலகாம்பிகையின் திருக்கையில் உள்ள பூச்செண்டு எல்லோரும் பார்க்கும்

படி உம்முடைய கைக்கு வந்து சேருமாறு ஒரு செய்யுள் இயற்றும்,'' என்று கூறினன். அவ்வளவிற் புலவர்,

"விண்டல நின்ற சரக்கால சோம சுவேதமுக
மண்டல முங்கை மலரோடுந் தோளில் வடிந்தரத்னக்
குண்டல மும்புனை வாலப் பிராயக் குமாரத்தியாய்ச்
செண்டலர் செங்கை உலகாளென் நாவிற் சிறந்தனளே"

என்று ஒரு செய்யுளைப்பாடினர். உலகாம்பிகையின் திருக்கையில் இருந்த பூச்செண்டு நமசிவாயப் புலவரின் கைக்கு எல்லோரும் பார்க்கும்படியாகச் சென்றது. இந் நிகழ்ச்சியைக் கண்ட அரசன் அஞ்சிக் கலங்கினன். கீழே விழுந்து புலவரை வணங்கினன். அங்குக் கூடியிருந் தவர்கள் யாவரும் புலவரை வணங்கிப் போற்றினர்.

பிறகு அரசன் நமசிவாயப் புலவரைப் பார்த்து, "ஆணவத்தினலே அடியேன் செய்த தவற்றினைப் பொறுத்தருளல் வேண்டும்,'' என்று வேண்டிக்கொண்டு பல நன்கொடைகள் வழங்கிச் சென்றன். இதன்பின் நமசிவாயப்புலவர் பெருமை மேலும் சிறந்து விளங்கியது.

ஒருநாள் வசைகவியாண்டான் கவிராயர் நமசிவாயப் புலவரைக்கண்டார். இருவரும் ஒருவர்மீது ஒருவர் வசை பாடி அழியவில்லை. சிறிதுபோது அளவளாவியிருந்து பிரிந்தனர்.

நமசிவாயப் புலவர் மனைவியோடு இல்வாழ்க்கையைச் சிறப்புற நடத்திக்கொண்டிருந்தார். தமது குலத்தொழி லாகிய பயிர்த்தொழிலையே நாளும் விரும்பிச்செய்தார். அவருக்கு அத்தொழிலில் பலவகையான அல்லல்கள் உண் டாயின. உழவுமாடுகள் சண்டிகளாயிருந்ததுடன் பண்ணை யாளும் பெருஞ்சண்டியாக இருந்தான். வயலோ மேட்டு நிலமாக அமைந்திருந்தது. புலவர் இவைகளைக் குறித்து,

"கயல்வாய்த்த கண்ணி உலகே உனது கருணையினால்
இயல்வாய்த்த தந்தைக்கு யான்வந்து வாய்த்ததும் என்றனக்கோர்
வயல்வாய்த்த துங்கள்ள மாடொன்று வாய்த்ததும் வம்புபள்ளப்
பயல்வாய்த்த துந்தமி யேன்முன்னை நாள்செய்த பாக்கியமே."

என்று ஒரு செய்யுள் பாடினார்.

தண்ணீரை நிலத்திற்குப் பாய்ச்சிக்கொள்ளும் செயலிலே இவருடைய பக்கத்து நிலத்துக்காரர்கள் இவருக்கு அடிக்கடி தொல்லையளித்தனர். தண்ணீர் பாயாதபடியால் ஒருமுறை இவருடைய நிலம் பலநாள் காய்ந்து பயிர்கள் வெய்யிலால் வாடின. நமசிவாயப்புலவர் உலகாம்பிகைமீது சில செய்யுட்கள் பாடித் தமது நிலத்திற்கும், தமக்கு வேண்டியவர்கள் சிலர் நிலத்திற்கும் மட்டும் மழை பெய்யச்செய்து கொண்டனர். இந் நிகழ்ச்சி பக்கத்து வயல்காரர்களுக்கும் பிறருக்கும் அச்சத்தை உண்டாக்கியது.

ஒருநாள் புலவர் இல்லத்திற்கு விருந்தினர் சிலர் வந்தனர். ஈயாப்பேயன் ஒருவனிடஞ் சென்று நமசிவாயப் புலவர் வாழையிலை கேட்டார். அத் தீயன் வாழையிலை கொடாமல், "உமது வீட்டுவாசலில் இருந்த ஒரு வாழை மரம் ஏன் பட்டுப்போயிற்று. நீவிர்தாம் கெட்டிக்காரராயிற்றே அது தழைத்து வளருமாறு ஒருபாட்டுப்பாடிக் கொள்ளக்கூடாதா?" என்று கூறிப் பலவாறு பேசினான். புலவர் தம் வீட்டு வாசலில் வாழைமரம் ஒன்று தழைத்து வளருமாறு இறைவியைப்பாடி அவ்வாறே ஆகப் பெற்றனர்.

நமசிவாயப் புலவர் தலைமயிரை வளர்க்காமல் மொட்டையடித்த தலையினராக விளங்கியிருந்தார். ஒரு நாள் சிலர் நமசிவாயப்புலவர் தலை மொட்டையடித்து விளங்குவதைக்குறித்துப் பலவாறு பேசி எள்ளி நகையாடினர். அப்பொழுது நமசிவாயப் புலவர்,

"கட்டுப் படாதுள் ளழுக்கடை யாது கனத்தசண்டைக்கு
எட்டுக் கொடாது நல் எண்ணெய்செல் லாதிள மாதர்கையால்
குட்டுப்பட் டாலும் கணீரென்று கேட்கும் குவலயத்தில்
மொட்டைத் தலைக்கு நிகரோ முடித்தலை மூடர்களே."

என்னும் செய்யுள் ஒன்றைப் பாடித் தம்மை இகழ்ந்தவர் களைப் பார்த்துக் கேலி செய்தார்.

நமசிவாயப்புலவர் ஒருமுறை திருவநந்தபுரஞ் சென்று அந்நகரத்து அரசன்மீது சில செய்யுட்கள் இயற்றினார். அதனைக்கேட்டு மகிழ்ந்த அரசன் நமசிவாயப்புலவருக்குத் தக்கவாறு நன்கொடை வழங்கினான். வழுதலங்காயைக் குறித்து நமசிவாயர்,

"தேங்காயைத் தின்னிற் சிரங்காய் வெடிக்குந் தினமுமுன்னி
மாங்காயைத் தின்றிடில் வங்காய்ச் சொரியும் வளம்பெருகு
பாங்காரும் வாழை பலாக்காயும் வாய்வுப் பதார்த்த நமக்கு
ஆங்காய் வழுதலங் காயொன்று மேமேலை யாளத்திலே"

என்று ஒருசெய்யுள் இயற்றினார். நமசிவாயப்புலவர் நூல்களிலே சிங்கைவெண்பா முதலிய சில நூல்கள் அச்சாகியுள்ளன.

---

௨௫. சின்னத்தம்பிப் புலவர்

அரிய சிற்றிலக்கியங்களாக விளங்கும் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி ஆகிய நூல்களை இயற்றிய சின்னத்தம்பிப்புலவர் என்பவர், யாழ்ப்பாணத்திலே நல்லூரிலே வில்லவராய முதலியார் என்பவருக்கு அருமைத் திருமகனாகத் தோன்றினார்.

வில்லவராயமுதலியார் 1886-இல் யாழ்ப்பாண நியாயசபைக் கனவான்களுள் ஒருவராக விளங்கியிருந்தார். இவர் கல்வியறிவிற் சிறந்த புலமைபெற்றுச் செய்யுள் நூல்கள் பாடுந்திறமுடையவராக அமைந்திருந்தார்.

பேரறிவாளராகிய முதலியாருக்கு மகனாகத் தோன்றிய சின்னத்தம்பிப் புலவரோ, கல்வி கற்றலில் கருத்துச் சிறிதும் அற்றவராய் மாடுமேய்க்குஞ் சிறுவர்களோடு விளையாடுதலை மேற்கொண்டொழுகினார். முற்பிறப்பின் நல்வினைப்பயனால் சின்னத்தம்பியார் சின்னத்தம்பியாக இருக்கும் போதே கலைமகள் திருவருளைப் பெற்றார்

ஒருநாள் சின்னத்தம்பியார் சில சிறுவர்களோடு தெருவிலே விளையாடிக்கொண்டிருந்தார். அப்பொழுது வேற்றூர்ப் புலவர் ஒருவர் வில்லவராய முதலியார்மீது நூல் ஒன்று பாடிக்கொண்டு பரிசில் பெறும்பொருட்டு வந்தார். அவருக்கு வில்லவராய முதலியாரின் வீடு தெரியாது. ஆகவே, அவர் தெருவில் நின்ற சிறுவர்களைப் பார்த்து, "வில்லவராயமுதலியார் வீடு யாது?" என்று உசாவினார். அப்பொழுது அங்கிருந்த சின்னத்தம்பியார் முன் வந்து,

"பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கும் நன்னிழலாம்—மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரன் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்"

என்னும் ஒரு வெண்பாவினால் தம் வீட்டின் அடையாளத்தைக் கூறினார். இதனைக்கேட்ட அப் புலவர் திகைத்துப் போனார்.

சின்னத்தம்பி பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் சென்று கல்வி பயிலாமையைக்கண்ட வில்லவராயர் தம் மகனைக் கண்டித்தார். பள்ளிக்கூடம் போகாவிட்டால் வீட்டிலே சாப்பாடு கிடையாது என்று அச்சுறுத்தினார். வீட்டிலே உணவிடக்கூடாது என்று தம் மனைவியையுங் கண்டித்தார். ஆனால், சின்னத்தம்பியோ வீட்டிற்குப் போய்க் கள்ளத்தனமாகச் சாப்பிட்டுவிட்டுத் துள்ளித்

திரிந்துகொண்டிருந்தார். அந் நாளில் வில்லவராயர் ஓர் அந்தாதி பாடத் தொடங்கியிருந்தார். ஒருநாள் ஒரு பாட்டில் ஓர் அடியை எழுதிவிட்டு அலுவலின் பொருட்டு வெளியே போய்விட்டார். போகும்பொழுது பாட்டின் அடி எழுதப்பெற்ற ஓலைச்சுவடியையும் எழுத்தாணியையும் வெளியே ஓரிடத்தில் வைத்துவிட்டுச் சென்றார்.

நண்பகலில் சாப்பிடவந்த சின்னத்தம்பி ஓலையை எடுத்துப்பார்த்தார். பாட்டின் 2, 3, 4, அடிகளைத் தாம் எழுதிவைத்துவிட்டுப் போய்விட்டார். பிறகு வீட்டிற்கு வந்த வில்லவராயர் உணவு முதலியவைகளை முடித்துக் கொண்டபின் பாட்டை முடிக்க எண்ணினார். ஓலைச்சுவடியை எடுத்துப்பார்த்தார். பாட்டு நிறைவேறியிருந்தது. அந் நிறைவேற்றம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர் தம் மனைவியைக் கூப்பிட்டு, "இங்கே வந்தவர் யாவர்?" என்று உசாவினார். முதலில் அச்சங் கொண்ட அவ்வம்மை ஒருவரும் வரவில்லை என்று கூறி மறுத்தாள். கணவன் வற்புறுத்திக் கேட்கவே, "அந்த பேய்ப்பையல்தான் இங்கே வந்து ஓலையை எடுத்துக் கிறுக்கிக் கொண்டிருந்தான்," என்று கூறினாள். முதலியார் சின்னத்தம்பியைத் தேடியழைத்தார். அவர் மீது அன்பு பாராட்டிப் போற்றினார். பிறகு அந் நூலைச் சின்னத்தம்பியாரே செய்து முடித்தார்.

ஒருநாள் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் கனைசையர் என்பவருடைய வீட்டிலே பல புலவர்கள் ஓர் அவையாகக்கூடி இராமாயணத்திற்குப் பொருள் செய்து கொண்டிருந்தனர். அப்பொழுது ஒரு பாட்டிற்குப் பொருள் விளங்காதபடியால் எல்லோரும் விழித்தார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்குத் தோன்றியவாறு கூறினார்கள். அவர்கள் கூறிய பொருள் சிறிதும் பொருந்தவில்லை.

அப்பொழுது மிக இளைஞராக இருந்த சின்னத்தம்பிப்புலவர் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவர் அந்தப் பாட்டிற்கு ஓர் உரை கூறினார். சின்னத்தம்பியார் கூறிய உரை எல்லோருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்கியது. யாவரும் சின்னத்தம்பிப்புலவரைப் போற்றினார்கள். கணேசையர் பெருமகிழ்ச்சியடைந்தவராய்ப், பண்டாரக்குளம் என்னும் பெயருடைய வயல் ஒன்றைச் சின்னத்தம்பியார்க்கு நன்கொடையாக வழங்கினார்.

சின்னத்தம்பிப்புலவரால் பாடப் பெற்றனவாக இரண்டு அந்தாதிகள் வழங்கிக்கொண்டிருக்கின்றன. ஒன்று மறைசையந்தாதி. இது சோழவளநாட்டிலே திருமறைக் காட்டிலே திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய சிவபெருமான்மேல் பாடப்பெற்றது. இது சொல்னுக்கும் பொருளுக்கும் மிக்கதாய்க் கற்பார் உள்ளத்தைக் கழி பெருங்களிப்பில் ஆழ்த்துவதாய்ச் சிறந்து விளங்குகின்றது. இந்த மறைசையந்தாதிக்கு ஆசிரியர் சின்னத்தம்பிப்புலவர் என்பது,

"செந்தா தியன்மணிப் பூண்புலி யூரற்குச் சேர்ந்தளித்த
சிந்தாத் தியானஞ்செய் வில்லவ ராசன் திருப்புதல்வன்
நந்தா வளந்திகழ் நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வீசற் கணிந்தனனே"

என்னுஞ் செய்யுளால் பெறப்படும். மற்றது கல்வளையந்தாதி. இது சண்டியிருப்பாயில் உள்ள கல்வளைப் பிள்ளையார்மேல் பாடப்பெற்றது. இதுவுஞ் சொற்செறிவு பொருட் செறிவுடையதாய்ச் சிறந்து விளங்குகின்றது.

"கல்வளை யாத விரும்புநெஞ் சேகைய ரோடுறவா
கல்வளை யார்சுனை வாயரக்காம் பல்செங் காவியின்பக்
கல்வளை யார நிலாவீச விள்ளுங் கழனிசுற்றுங்
கல்வளை யானங் குசபாச மேந்துங் கரன் புகழே."

என்பது கல்வளையந்தாதியில் ஒரு பாட்டு.

உ௪. சங்கர நமச்சிவாயப் புலவர்

சங்கரநமச்சிவாயப்புலவர் திருநெல்வேலியிலே வேளாளர் குலத்திலே தோன்றினார். இலக்கணக்கொத்துச் செய்த சாமிநாத தேசிகர் இவருடைய ஆசிரியராதலின் சங்கர நமச்சிவாயப்புலவருடைய காலம் சாமிநாத தேசிகருடைய காலமேயாகும்.

சாமிநாததேசிகரிடம் சங்கர நமச்சிவாயர் தொல்காப்பியம் முதலிய இலக்கணநூல்களையும் இலக்கியங்களையும் ஐயமறக் கற்றுச் சிறந்து விளங்கினார். அந்நாளில் ஊற்றுமலை என்னும் ஊரில் இருதயாலய மருதப்ப தேவர் என்னும் பெருஞ் செல்வர் நுண்ணறிவாளராகவும், அருங்கொடையாளராகவும் சிறந்து விளங்கினார். சங்கரநமச்சிவாயப் புலவருக்கும் இருதயாலய மருதப்ப தேவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. நாளடைவில் சங்கர நமச்சிவாயர் இருதயாலய மருதப்பதேவருடைய அவைக்களப் புலவராக அமர்ந்தார்.

சங்கர நமச்சிவாயருடைய பேரறிவை நன்கறிந்த இருதயாலய மருதப்பதேவர், நன்னூலுக்கு விருத்தியுரை ஒன்று எழுதுமாறு சங்கர நமச்சிவாயரைக் கேட்டுக்கொண்டார். சங்கரநமச்சிவாயர் நன்னூல் உரையை அவருடைய விருப்பப்படியே எழுதி முடித்தார். சங்கர நமச்சிவாயர் நன்னூல் உரையை எழுதிய காலத்தில் இவருக்குத் திங்கள் ஒன்றுக்கு நான்கு கோட்டை நெல்லும் நாள் ஒன்றுக்கு ஒருபடி பாலும் கொடுக்கப்பட்டதாகவும் உரை அரங்கேற்றஞ் செய்யப்பட்ட பின்னர் தகுந்த நன்கொடை அளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இருதயாலய மருதப்ப தேவருடைய வேண்டுகோளின்படி நன்னூல் விருத்தியுரை செய்யப்பட்ட தென்னுஞ் செய்தி,

" நன்னூலுட் கருத்துலகோர் அறியவுரை
செய்கவென நரேந்த்ர சிங்கம்
தென்னாற்று மலைமருதப் பன்புகலப்
பொருள்விளங்கச் செய்தான் பாரில்
எந்நூற்கும் எழுத்தொடுசொற் பொருளறிசங்
கரநமச்சி வாயன் என்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா
மணிநெல்லைப் பதியினனே (௧)

" அகத்தியந்தொல் காப்பியமே முதலிய முன்
னூல்கள்பல ஆய்ந்து முப்பால்
பகுத்ததிரு வள்ளுவரே முதன்னூன
நூல்களெல்லாம் பகல்செய் வான்போல்
இகத்திலுரை செயவல்சங் கரநமச்சி
வாயன்எனும் இயற்பேர் பெற்ற
தகைப்புலவன் நன்னூலுக்கு உரைவகுத்தது
ஒருவியப்போ தமிழ்வல் லோரே. (௨)

"முன்னூற்கும் மலயமுனி தன்னூற்கும்
புவியிடத்து முதியோ ராற்சொல்
எந்நூற்கும் தமிழ்க்கடலுள் இனிஇயற்றும்
நூற்கும்வகை இதனால்காட்டி
நன்னூற்கு விரித்துரைசெய் தான்திகந்
தத்தளவும் நடத்தும் கீர்த்தித்
தென்னாற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமச்சி வாயன் தானே." (௩)

என்னும் நன்னூல் உரைச் சிறப்புப்பாயிரத்தால் பெறப் படுகிறது.

சங்கர நமச்சிவாயப்புலவர் தமது நன்னூல் விருத்தி யுரையிலே, அகநானூறு, அரிச்சந்திரபுராணம், ஆசாரக் கோவை, இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கம், இறை யனார் அகப்பொருள், ஐங்குறுநூறு, ஐந்திணையைம்பது, ஒருதுறைக் கோவை, கந்தபுராணம், கம்பராமாயணம்,

கலித்தொகை, களவழி நாற்பது கார்நாற்பது, குறுந்தொகை, கோடீசுரக்கோவை, சிலப்பதிகாரம், சிவஞான சித்தியார், சீவகசிந்தாமணி, சூளாமணி, தக்கயாகப் பரணி, தண்டியலங்காரம், திணைமாலை நூற்றைம்பது, திரிகடுகம், திருக்குறள், திருக்கோவையார், திருநூற்றந்தாதி, திருவாசகம், திருவாய்மொழி, திருவிளையாடற்புராணம், தேவாரம், தொல்காப்பியம், நம்பியகப்பொருள், நளவெண்பா, நற்றிணை, நாலடியார், நான்மணிக்கடிகை, நீதிநெறிவிளக்கம், நேமிநாதம், நைடதம், பட்டினத்தார் பாடல், பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, பரிபாடல், பன்னிருபடலம், பிரபுலிங்கலீலை, பிரயோகவிவேகம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பெரியபுராணம், பெருங்கதை, மணிமேகலை, யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்கலம், வச்சணந்திமாலை, முதலிய பலநூல்களில் இருந்து மேற்கோள் எடுத்துக்காட்டியுள்ளார்.

இலக்கண விளக்கம் வைத்தியநாத நாவலர், சுப்பிரமணிய தீட்சிதர், சாமிநாத தேசிகர், மயிலேறும் பெருமாள் பிள்ளை முதலியோர் சங்கர நமச்சிவாயப் புலவர் காலத்திய புலவர் பெருமக்களாவர்.

இவருடைய நன்னூல் விருத்தியுரை மிகச்செவ்விய முறையில் அமைந்துள்ளது. சிவஞான முனிவர் தாம் வடமொழி தென்மொழியுட் கண்ட அரிய இலக்கண முடிபுகளை இவ்வுரையின் இடையிடையே செருகி மிகச் சிறப்பாக்கி யிருக்கிறார். இவரால் புதுக்கப்பட்ட வுரையும் சங்கர நமச்சிவாயர் தனி உரையும் இரண்டும் அச்சிற் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்துலவுகின்றன.

---

௨௫. இராமாநுசக் கவிராயர்

தோற்றம்

இராமநாதபுரம் என வழங்கும் முகவையில் இராமாநுசக் கவிராயர் தோன்றினார். இவருடைய காலம் இற்றைக்கு நூற்றிருபது யாண்டுகட்குச் சற்று முன்பின்னாக இருக்கலாம். இவருடைய சமயம் வைணவம்.

வாழ்க்கை வரலாறு

இவருடைய தாய் தந்தையர் பெயர் விளக்கமாகத் தெரியவில்லை. சிவஞான முனிவருடைய மாணவர்களுள் ஒருவராகிய சோமசுந்தர கவிராயரிடம் இவர் இலக்கண இலக்கியங்களை ஐயமறக் கற்றறிந்தார். இவர் கல்வி கற்றதைப் பற்றிப் பலவாறு வரலாறுகள் வழங்குகின்றன.

இராமாநுசக் கவிராயர் இளைஞராயிருந்த காலத்தில் கல்வியில் அதிக ஆர்வங் காட்டினராம். ஆயினும் நினைவாற்றல் போதிய அளவு இன்மையின் கற்றவை கேட்டவைகளெல்லாம் உடனுக்குடன் மறந்து போயினவாம். மறப்பெனுங் கள்வனால் வஞ்சிக்கப்பெற்ற இவர், மிகுந்த மனவாட்டமடைந்து கலைமகளை நினைந்து நெஞ்சுருகிப் போற்றினராம். பிறகு தம்முடைய கழுத்தைக் கத்தியால் அறுத்துக்கொண்டாராம். கலைமகள் தோன்றித் திருவருள் செய்து மறைந்தனளாம். அதன் பிறகு இவருக்குப் பொருள்விளக்கம், நினைவாற்றல முதலிய பண்புகள் உண்டாயினவாம்.

மற்றொரு வரலாறு, இவர் நாற்பதாண்டு அளவு கல்வி கற்காது கல்வியறிவு அற்றவராக இருந்தார் எனவும், ஓர் அவையில் ஒருசமயம் இவர் ஏதோ கூற அவ்விடத்தில் இருந்த ஒரு புலவர், "கற்றோர் அவையில் நீ பேசுதல் தகாது. உன்போலும் அறிவிலிகள் மாட்டுச்சென்று

நீ பேசுதல்தான் தக்கதாகும்,” என்று கூறினர் எனவும், அவ்வுரையைக்கேட்ட இராமாநுசர் மிகவும் வருந்தி, அந் நாளிற் பேரறிஞராக விளங்கிய சோமசுந்தரக் கவிராயர் இடஞ்சென்று தமக்குக் கல்வி கற்பிக்கும்படி வேண்டிக் கொண்டனர் எனவும், அதற்குச் சோமசுந்தரக் கவிராயர், “அகவை முதிர்ந்து நெடும்பனை போல வளர்ந்துள்ள நினக்கு இனிமேல் கல்வி கற்பித்தல் பயனற்றதாக முடியும்; ஆதலின் உனக்குக் கல்வி கற்பிக்கத் தொடங்குதல் வீண் முயற்சியாம்,” என்றுகூறி மறுத்துவிட்டார் எனவும், அதனால் மனம் வருந்திய இராமாநுசர் அமயம் நோக்கிக் கொண்டே இருந்து, ஒருநாள் சோமசுந்தரக் கவிராயர் பல் லக்கிவர்ந்து தெருவிற் சென்று கொண்டிருக்கும்போது அவருக்கு முன்னே ஓடி ஒரு கத்தியால் தமது கழுத்தை அறுத்துக்கொள்ளத் தொடங்கித், “தாங்கள் எனக்குக் கல்வி கற்பிக்க முடியாதெனக்கூறி விட்டமையின், நான் கழுத்தை அறுத்துக்கொண்டு சாகிறேன். அறிவற்ற யான் இவ்வுலகில் இருப்பது பயனில்லை,” என்று கூறின ரெனவும், உடனே கவிராயர் விரைந்து பல்லக்கை விட்டுக் கீழே இறங்கி ஓடிவந்து இராமாநுசருடைய கையைப் பிடித்துக் கொண்டதன்றி, “நான் உனக்குக் கல்வி கற்பிக் கிறேன்; கழுத்தை அறுத்துக்கொண்டு சாகவேண்டாம்,” என்று கூறித் தம்முடன் அழைத்துக்கொண்டு சென்று நிகண்டு, நன்னூல் முதலிய நூல்களை மனப் பாடஞ்செய்து வரக் கட்டளை யிட்டனர் எனவும், இராமாநுசரும் அவ் விதமே செய்தபடியால் மனமகிழ்ச்சியடைந்த சோம சுந்தரக் கவிராயர் எல்லா நூல்களையும் வரன் முறையாகப் பாடஞ் சொன்னார், எனவும் வழங்குகின்றது.

கற்கவேண்டிய நூல்களை யெல்லாம் நன்கு கற்றுத் தேர்ந்தபின் இவர் சென்னைமாநகரை அடைந்து வண்ணை

ரப்பேட்டையில் தங்கினார். அங்கிருந்த பிள்ளையார் கோயிலில் அநுமாரையும் அமைத்து, அக்கோயிலுக்குச் சஞ்சீவிராயன் கோயில் என்று பெயரிட்டார். அக்கால முதல் அக்கோயில் சஞ்சீவிராயன் கோயில் என்று வழங்கப்பட்டதுடன், அக்கோயில் உள்ள தெரு சஞ்சீவிராயன் கோயில் தெரு எனவும், அதனைச் சூழ்ந்த இடம் சஞ்சீவிராயன் பேட்டை எனவும், வழங்கத் தொடங்கியது.

இராமாநுசக் கவிராயர் சஞ்சீவிராயன் பேட்டையில் தங்கியிருந்து கொண்டு, திருத்தணிகை விசாகப்பெருமாள் ஐயர், சரவணப் பெருமாள் ஐயர், அறிஞர் தாண்டவராய முதலியார், அட்டாவதானம் வீராசாமி செட்டியார், ரெவரெண்டு ஜி. யூ. போப்பையர், மழவை மகாலிங்கையர் முதலியோருக்குக் கல்வி கற்பித்துக்கொண்டிருந்தார்.

பாடல்பெற்ற குளம்

இராமாநுசக் கவிராயர் ஒரு நாள் மாணவர் சிலரோடும் மற்றும் பலரோடும் பெத்துநாய்க்கன் பேட்டையில் உள்ள கிருட்டிணப்ப நாய்க்கன் குளத்துத் தெருவழியே சென்றுகொண்டிருந்தார். அக் குளத்திலே அப்பொழுது வீட்டுக்குத் தூரமான (மாதவிடாயான) சில பெண்கள் நீராடிக்கொண்டிருந்தார்கள். கவிராயர் உள்ளத்தில் அருமையான கற்பனை ஒன்று தோன்றியது. உடனே அவர்,

"கிருட்டிணப்ப நாய்க்கன் குளத்திலே வீட்டுக்குத் தூரமானவர்களும் மூழ்கி வீட்டை அடையுந் தன்மையை அறிந்தபடியினால், கங்கையானது வீட்டிலே உள்ளவர்கள் தன்னில் மூழ்கி வீட்டையடைவதால் சிறப்புப் பொருந்திய புகழ் உண்டாகமாட்டாது என்று காமனை வருத்திய சிவபெருமானுடைய சென்னியை அடைந்துவிட்டதென்றால் கிருட்டிணப்ப நாய்க்கன் குளத்துப் பெருமை நம்மால்

உரைக்கக் கூடிய அளவுடையதாகுமோ?" என்னும் பொருளை அமைத்து,

"சாரவீ டிருந்தோர் படிந்துசார்ந் திடில் சீர்
தருபுகழ் இலை என்றே வீடு
அாரமா யினரும் படிந்துவீ டடையும்
தோற்றமற் றறிந்தத னாலே,
வீரவேள் அலைத்த நுதற்கணன் சென்னி
மேயதச் சுரநதி என்றால்,
மாரகண் ணப்ப நாயகன் குளத்து
மகிமையாம் உரைசெயும் தகைத்தோ?"

என்னும் செய்யுள் ஒன்றைப் பாடினார்.

எனக்குத் தெரியாது

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தலைவர் அக்கலைக் கழகத்திற்கு ஒரு தமிழ்ப்புலவரை அமர்த்த எண்ணினார். சிலர் இராமானுசக் கவிராயரைப்பற்றிக் கூறினர். இவருடைய மாணவர்களைப் பற்றியும் பேச்சு நிகழ்ந்தது. பல்கலைக் கழகத் தலைவர் கவிராயரையும், மகாலிங்கையர் முதலிய மாணவர்களையும் தம்மிடம் அழைத்தார். எல்லோரையும் வரிசைக்கு இணங்க அமரச் செய்தார். பிறகு அவர்களுடைய அறிவின் மதுகையை ஆராயத் தொடங்கினார். கவிராயரைப்பார்த்து, "குற்றியலுகரத்திற்கு ஓர் உதாரணம் கூறுங்கள்," என்று கேட்டார். உடனே கவிராயர், "எனக்குத் தெரியாது" என்று விடையளித்தார். இவர் கூறியதன் பொருள் பல்கலைக் கழகத் தலைவருக்கோ இவருடைய மாணவர்கட்கோ விளங்கவில்லை. இவர் தமக்குத் தெரியாது என்று கூறிவிட்டார் என்றே எல்லோரும் எண்ணினர்.

பல்கலைக்கழகத் தலைவர் பிறகு மாணவர்களைக் கேட்டார். மாணவர்களோ நம்முடைய ஆசிரியரே தெரியாது

என்று கூறிவிட்டபோது நாம் எப்படிப் பதில் அளிப்பது என்று எண்ணிப் பேசாமல் இருந்தனர். பல்கலைக் கழகத் தலைவர் கவிராயரைப் பார்த்துப், "பெரும்புலவராகிய தாங்களே தெரியாது என்று கூறிவிடின் மற்று யாவர்தாம் கூறுவர்?" என்று கேட்டார். உடனே கவிராயர், "நான் எனக்கு உதாரணம் கூறத் தெரியவில்லை என்று சொல்லவில்லை. உதாரணம்தான் கூறியிருக்கிறேன். நான் கூறியதில் குற்றியல் உகரத்திற்கு மட்டும் அன்று; முற்றியலுகரத்திற்குக் கூட உதாரணம் இருக்கின்றது. தெரியாது என்பது குற்றியலுகரத்திற்கு உதாரணம், 'எனக்கு' என்று மொழியிடையில் வந்திருப்பது முற்றியலுகரத்திற்கு உதாரணம்," என்றனர். கவிராயரின் மறுமொழி பல்கலைக் கழகத் தலைவரையும் அவருடைய மாணவர்களையும் திகைப்படையச் செய்தது. அவர்கள் தம் மடமையை எண்ணி நாணியதுடன் கவிராயருடைய வியத்தகு பதிலை எண்ணி மகிழ்ச்சியும் அடைந்தனர்.

பல்கலைக் கழகத் தலைவர் கவிராயரைப் பல்கலைக் கழகத் தமிழ் ஆசிரியராக அமர்ந்து பணியாற்றுமாறு வேண்டிக் கொண்டார். கவிராயர் தமக்கு அத் தொழில் வேண்டியதில்லை என்று மறுத்து விட்டார். "அப்படியானல் தங்கள் மாணவர்களுள் தக்கார் யாவர் என்பதைத் தாங்களே கூறுங்கள் அவரை அமர்த்தலாம்," என்றார் பல்கலைக் கழகத் தலைவர். மகாலிங்க ஐயரே தக்கவர் என்பதை இராமாநுசர் தெரியப்படுத்தினர். அப்படியே மகாலிங்க ஐயருக்குப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் பதவி வழங்கப்பட்டது.

நன்னூல் உரை முதலியன

பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட நன்னூலுக்கு அந்நாளிலே தக்க உரை இல்லை. அக் குறையைப் போக்கு

மாறு இராமாநுசக் கவிராயர் நன்னூலுக்கு ஓர் அரிய உரை இயற்றினர். அவ்வுரை விருத்தியுரை. விரித்து விளக்கப் படவேண்டிய இடங்களில் தக்காங்கு விரித்துரைத்து விளக்கியுள்ளார். அவ்வுரையில், திருக்குறள், தண்டியலங்காரம், இலக்கண விளக்கம், அகநானூறு, ஆசாரக் கோவை, இலக்கணக் கொத்து, பத்துப்பாட்டு, தொல்காப்பியம், முத்தொள்ளாயிரம், புறநானூறு, நற்றிணை, நாலடியார், புறப்பொருள், பதிற்றுப்பத்து, திரிகடுகம், நான்மணிக் கடிகை, யாப்பருங்கலக்காரிகை, திருக்கோவையார், கலித்தொகை, குறுந்தொகை, சிந்தாமணி, மணிமேகலை, திருவாசகம், சிலப்பதிகாரம் முதலிய பல நூல்களில் இருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்டியுள்ளார். நன்னூல் உரையை அன்றி, ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, திருக்குறள் முதலிய நூல்களுக்கும் இவர் உரை செய்துள்ளார்.

திருவேங்கட அநுபூதி, இலக்கணச் சுருக்கம், சூடாரம், ஆத்தும போதப் பிரகாசிகை முதலிய நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். தமிழறிவு பெற்ற ஆங்கிலேயர் சிலர் ஆங்கில-தமிழ் அகராதி ஒன்றைத் தொகுத்தபோது இராமாநுசக் கவிராயர் உடனிருந்து பேருதவி செய்துள்ளார். தமிழ்க்குத் தொண்டுசெய்தவர்களில் இவரும் ஒருவர். இவருடைய நன்னூல் உரை ‘இராமாநுச காண்டிகை’ என்னும் பெயருடன் வெளிவந்து உலவுகின்றது.

௨௬. பொன்னம்பல அடிகள்

பாண்டி நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அனுமந்தக்குடி என்னும் சிற்றூர் பொன்னம்பல அடிகளது முன்னோர் வாழ்ந்திருந்த ஊராகும். அடிகளாரின் குலம், “முதுகுலத்தார், முதுகுடிகள்” என்று சங்க நூல்களால் விதந்தோதப் பெற்ற அகம்படியர் குலமாகும். அடிகளாரின் தந்தையார் விசயநகர மன்னரின் போர்ப்படையில் போர்வீரராகத் திகழ்ந்த ஞான்று கலி ௪௬௯௪ கர ஆண்டில் பொன்னம்பல அடிகள் விசய நகரத்தில் பிறந்தார்.

அடிகளாரின் தந்தையார் அடிகளாரின் குழவிப் பருவத்தில்தானே விண்ணுலகடைந்தார். அவரின் பெயர் இன்னதென்று விளக்கமாக வில்லை. அடிகளாரின் தாயார் பெயர் அங்கம்மாள். தாயாரால் அருமையாக வளர்க்கப் பட்ட பொன்னம்பல அடிகள் இளமை முதலே அடியார் வழிபாடு, இறைவழிபாடு முதலியவைகளில் பற்றுமிக்கவராக விளங்கினார்.

பொன்னம்பல அடிகள் தமக்குத் தேய்த்து முழுகுதற்குத் தாயார் அளிக்கும் நல்லெண்ணெயை ஆனைமுகக் கடவுளுக்கு முழுக்காட்டி அக்கடவுளைப் போற்றி வழிபடும் வழக்கத்தை இளமையில் மேற்கொண்டிருந்தார். அடிகளாரின் இச்செயல் அவரது வீடுபேற்றிற்கே காரணமாக அமைந்தது. பொன்னம்பலம் என்று பெயரிடப்பெற்ற காரணத்தினாலோ என்னவோ பொன்னம்பல அடிகள் தமது பதினாறும் ஆண்டில் திருத்தில்லையை அடைந்தார்.

கூத்தப்பிரானுக்குத் தொண்டு செய்வதில் அடிகளாரின் எண்ணஞ் சென்றது. மலர்பறித்து மாலை கட்டிக் கொடுத்தல், திருவலகிடுதல், விளக்கு விளக்குதல் முதலிய

திருத்தொண்டுகளைச் செய்துகொண்டு அம்பலவாணனை ஆறுகாலமும் போற்றி வழிபட்டார். அந்நாளில் பெத்தாச்சி யடிகள் என்னுந் தனவணிகத் துறவியொருவர் தில்லையில் இருந்தார். அவரிடம் துறவு பெற்று அடிகளார் கூத்தப் பிரானைப் போற்றி வழிபட்டார்.

கோயிலூர் முத்துராமலிங்க அடிகளின் மாணவர் சிதம்பர அடிகள் என்னும் பெரியார் கூத்தப்பிரானை வழி பட்டுய்யத் தில்லையை அடைந்தார். பொன்னம்பல அடி கள் சிதம்பர அடிகளைக் கண்டு போற்றித் தமக்கு அறிவு நூல்களைப் போதித்தருளவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். சிதம்பர அடிகள் அதற்கு இணங்கினார். பொன்னம்பல அடிகளைக் கோயிலூருக்கு அழைத் துச் சென்று வேதாந்த நூல்களைப் போதித்தார். பொன் னம்பல அடிகள் வேதாந்த நூல்களைத் தாம் ஐயமறக் கற்றுத் தேர்ந்ததுடன் அவைகளைப் பிறருக்குப் போதிக் கும் ஆற்றலும் பெற்று விளங்கினார்.

பிறகு தம் ஆசிரியராகிய சிதம்பர அடிகளின் உடன் பாடு பெற்றுக் காசியை அடைந்து வடமொழியையும் இந்தியையும் நன்கு கற்று அம் மொழிகளிலும் வல்லவ ரானார். பிறகு கோயிலூரையடைந்து தம் ஆசிரியருடன் தங்கியிருந்தார். ஆசிரியர் காலமான பிறகு சிக்கல், திரு வாரூர், திருப்புனவாசல் ஆகிய இடங்களில் தங்கியிருந்தார். இறுதியில் இறைவன் திருக்குறிப்பின்படி தில்லையை அடைந்து அங்குத் தங்கினார். அன்பர்கள் பலருடைய உதவியைக் கொண்டு திருமடம் ஒன்றை ஏற்படுத்தி அம் மடத்திற்குக் கோ. சித. மடம் என்று பெயரிட்டார்.

கூத்தப்பெருமானுடைய திருக்கோயிலை அழகுறப் புதுக்கிப் பொன் தகடு வேய்ந்தார். பொன்னம்பலனார்

கூத்தப்பிரான் திருக்கோயிலைப் பொன்னம்பலமாகச் செய்தது அன்பர் பலருக்கும் பெருமகிழ்ச்சியை அளித்தது. எறும்பூர் என்னும் பதியில் எழுந்தருளிய தத்துவராயர் என்னும் பெரியாருடைய திருக்கோயிலை அழகுற அமைத்துக் குடமுழுக்கும் இயற்றினர்.

கைவல்ய நவநீதம், பகவத்கீதை என்னும் இரண்டு சீரிய வேதாந்த நூல்கட்கு அடிகள் அழகிய பதவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தினர். பொன்னம்பல அடிகளாரின் உரை வெளியாகிய பின் மற்றைய போலி உரைகள் மறைந்தொழிந்தன. விசாரசாகரம் என்னும் நூலை இந்தியில் இருந்து தமிழில் எளிய உரை நடையாக மொழி பெயர்த்தார். வேதாந்த சூடாமணி என்னும் நூலுக்கும் அடிகள் அரிய பதவுரை இயற்றினர். பஞ்ச தசி, பாடுதுறை முதலிய பல நூல்களைப் பிழையற ஆராய்ந்து அச்சியற்றி வெளியிட்டார்.

பொன்னம்பல அடிகளாரின் சீரிய முயற்சியால் வேதாந்தக்கலை நல்ல வளம்பெற்றது. அடிகள் காசிக்குச் சென்றிருந்தபோது ஒருநாள் அன்னபூரணியைப் போற்றி வழிபடச் சென்றார். அன்பர்கள் கூட்டம் மிகுதியாக இருந்தது. அடிகளார் அன்னபூரணிக்கு அணியச் சந்தனஞ் சிறிது கொண்டுசென்றிருந்தனர். அதனை அன்னபூரணியின் திருநுதலைக் குறி பார்த்து வீசினர் அது தேவியின் திருநுதலில் தக்க இடத்தில் பொட்டாக அமைந்தது. இவ் வியத்தகு காட்சியைக் கண்ட அன்பர்கள் உள்ளங்களித்தனர்.

அடிகளார் தம் அருமைத் திருக்கைகளால் பலருக்குத் திருநீறணிந்து அவர்கள் நோயைப் போக்கினர். அடிகளாரைக் கொண்டு அம்பலவாணன் தனக்குப் பல திருப்

பணிகளை நிறைவேற்றிக் கொண்டான். அடிகளார் கலி ருOOசு குரோதியாண்டு ஐப்பசித் திங்கள் இருபத்திரண்டாம் நாள் சித்திரை விண்மீனிலே தீபாவளிப் புதுமை நாளில் வீடுபேற்றை யடைந்தார்.

உஎ. தியாகராசச் செட்டியார்

தோற்றம்

திரிசிரபுரத்திற் கடுத்த பூவாளூரிலே, சிதம்பரம் செட்டியார் என்பவருடைய மைந்தராகத் தியாகராசச் செட்டியார் 1826-ஆம் ஆண்டிற் பிறந்தார். சிதம்பரஞ் செட்டியார் உயிர்த்தொழிலெல்லாம் பயிர்த்தொழில் தன்னால் தான் என்று திடமாயுணர்ந்து அத்தொழிலிலே ஈடுபட்டிருந்தார். தம் புதல்வரையும் அத்தொழிலிற் பழக்கமுயன்றார். அகவை ஐந்து நிரம்பியவுடன் பள்ளியை அடைந்த தியாகராசர் பள்ளிக் கல்வியை நன்கு பயின்றார். கல்வியிலே அவருக்கு மிகுந்த ஊக்கம் உண்டாயிற்று. தந்தையார் நோக்கப்படி பயிர்த்தொழிலில் இறங்க அவர் விரும்பவில்லை. குடும்பத்தொழில்கள் பலவற்றையும் தியாகராசர் நன்கு உணர்ந்துகொண்டனராயினும் அவைகளில் தியாகராசர் உள்ளம் பதியவில்லை. அவர் மனநிலை கலைநிலையையே நாடி நின்றது.

மகாவித்துவான் தொடர்பு

அந்நாளில் திரிசிரபுரத்தில் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சிறந்த அறிஞராகத்திகழ்ந்திருந்தார். பூவாளூர்ச் செல்வர்கள் சிலர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கொண்டு பூவாளூர்ப் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் நூலை இயற்றச் செய்தார்கள். அந்நூலின் அரங்கேற்றம்

பூவாளூரிலே சிறப்பாக நடைபெற்றது. அப்போது தியாக ராசர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையைப் பார்த்தார். அவரிடங்கல்வி கற்கவேண்டும் என்னும் அவா தியாகராசரைப் பிடர் பிடித்துந்தியது. தம் கருத்தைத் தந்தையாரிடம் வெளியிட்டார். தந்தையாரோ, "தமிழ்க் கல்விவேண்டாம். அது பிழைப்புக்குப் பயன்படமாட்டாது. தமிழ் படித்தவர்கள் வறுமையால் வாடிக்கலங்குவார்கள்," என்று கூறித் தடுத்தார். ஆனால், தியாகராசரோ உறுதி யுடன் நின்றார். இறுதியில் இவருடைய உறுதி வெற்றி பெற்றது. திரிசிரபுரத்தில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்துகொண்டு மகாவித்துவானிடம் (பெரும் புலவர்) பாடங்கேட்பது என்று முடிவாகியது. தமது பதினெட்டாவது ஆண்டில் திரிசிரபுரத்திற்குச் சென்று பெரும் புலவரிடம் மாணவராகச் சேர்ந்தார். இலக்கியங் களையும் இலக்கணங்களையும் வரன்முறையாகப் பாடங் கேட்டார். ஆசிரியரோடு ஒன்றுபட்டு உறைந்தார். ஆசிரி யருடைய குற்றேவல்களையெல்லாம் குறிப்பறிந்து செய் தார். ஆசிரியருடைய நல்லியல்புகளையெல்லாம் தியாகரா சரும் பழகிக்கொண்டார். நாளடைவில் தியாகராசர் கல்வி யில் நல்ல வளர்ச்சியடைந்தார். தம் ஆசிரியரைப்போலவே செய்யுள் இயற்றவும், பிறருக்குப் பாடஞ்சொல்லவும் கைவரப்பெற்றார். தியாகராசரின் ஆசிரிய அன்பு பிறர் வியக்கத்தக்கவாறாக அமைந்திருந்தது. தம் ஆசிரியர் மீது நாளுக்கு ஒரு பாட்டுவீதம் நூறுபாட்டுகள் இயற்றினார். தனிப்பாடல்கள் பல சமயத்திற்கேற்றவாறு பாடினார். பெரும் புலவரிடம் பாடங்கேட்பதற்குப் புதிதாக வருபவர் கட்குப் பெரும் புலவர் அவர்கள் தியாகராசரைக்கொண்டே பாடஞ்சொல்லச் செய்தார்கள்.

வேலை

தியாகராசர் கல்வியிற் சிறந்தவராக விளங்கியிருந்த போது திரிசிரபுரத்தில் இருந்த பள்ளி ஒன்றுக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவைப்பட்டார். அந்த வேலை தியாகராசருக்குக் கிடைத்தது. அவ்வேலைக்கு ஊதியம் பத்து வெண்பொற்காசுகளே. ஆயினும் அதற்கு அந்தக் காலத்தில் எவ்வளவோ மதிப்பிருந்தது. இந்த நிலைமையில் தியாகராசருக்குத் திருமணமும் நடந்தேறியது. தியாகராசருக்கு வாழ்க்கைத் துணையாக அமைந்த பெண்மணி தியாகராசரின் வருவாயில் பாதி மிஞ்சுமாறு இல்லறம் நடத்தினர் எனின், அம் மாதரசி திருவள்ளுவர் கூறியாங்கு வளத்தக்காராக அமைந்திருந்தார் என்று கூறவும் வேண்டுமோ? தியாகராசர் திரிசிரபுரத்தில் இருந்து திருவரங்கத்திற்கு மாற்றப்பட்டார். ஊதிய உயர்வும் கிடைத்தது. மாணவர்கள் இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் கதையைப்போல் விரும்புமாறு பாடஞ்சொல்வதில் தியாகராசர் கைதேர்ந்து விளங்கினர். தியாகராசர் தமது சொல்லாற்றலாலும் குணநலத்தாலும் மாணவர்களைத் தம் வழிப்படுத்தி நடத்தினர்.

நாவலரைக் காண்டல்

தியாகராசர் திருவரங்கத்தில் ஆசிரியத்தொழில் நடத்திக்கொண்டிருந்தபோது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் திரிசிரபுரத்திற்கு வந்தார். செட்டியார் திருச்சிக்குச் சென்று நாவலரைப் பார்த்தார். நாவலரைப் பற்றித் தியாகராசரும் தியாகராசரைப் பற்றி நாவலரும் முன்னரே கேள்விப்பட்டிருந்தார்கள். கேள்வியளவில் அறிந்திருந்த அவ்விரு அறிஞர்களும் ஒன்ருகக்கூடிய போது பெருமகிழ்ச்சியடைந்து அளவளாவினர். அழகாபுரி பதியில் எழுந்தருளிய உமையாம்பிகை என்னும்

இறைவிமீது பிள்ளைத்தமிழ் ஒன்றைப்பாடி முடிக்க வேண்டும் என்றும், தமக்கு நேரமில்லையென்றும் நாவலர் செட்டியாரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், அப் பிள்ளைத் தமிழைச் செட்டியார் பாடி முடித்தாரா என்று தெரிய வில்லை.

கும்பகோணத்தில் வேலை

செட்டியார் திருவரங்கத்தில் இருந்தபோது, கும்ப கோணம் கல்லூரியில் தமிழாசிரியர் வேலை ஒன்றுக்குத் தக்காரைக் கல்லூரிப் பொறுப்பாளர்கள் தேடினர். தியாகராசச் செட்டியார் அவ் வேலைக்குத் தக்கவர் என் பதை உணர்ந்து அவருக்கு அவ்வேலையைத் தந்தனர். செட்டியார் திருவரங்கத்தைவிட்டுத் திருக்குடந்தையை அடைந்து அவ் வேலையை மேற்கொண்டார். அந்நாளில் பெரும் புலவர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் திருவாவடு துறையில் இருந்தமையால், அவரோடு அடிக்கடி நெருங்கிப் பழகுதற்கும் ஐயங்களைக் கேட்டுத்தெளிதற்கும் தியாக ராசச் செட்டியாருக்கு மிகவும் எளிதாக இருந்தது. அடிக் கடி திருவாவடுதுறை மடத்திற்குச் சென்று அப்போது தலைவராக எழுந்தருளியிருந்த பெரியார்களிடத்திலும் நெருங்கிய தொடர்புகொண்டவராக விளங்கினார்.

வசைகவி

செட்டியாரிடம் சிறப்புப்பாயிரம் பெற்றுக்கொண் டால் மதிப்பாக இருக்கும் என்று எண்ணிய சில அரை குறைப்புலவர்கள் தாம் பாடிய நூல்களை எடுத்துக்கொண்டு போய் அவரிடம் காட்டிச் சிறப்புப்பாயிரம் பெற முயற்சித் தனர். அவர்களுடைய தொல்லை பொறுக்கமுடியாத செட்டியார் இரட்டைப்பொருள் பயக்குமாறு வசைகவி யாகச் சிறப்புப்பாயிரப் பாடல்களைப் பாடிக்கொடுத்து

அவர்களின் தருக்கை அடக்கினர். தவறுகண்ட இடத்தில் எவராக இருந்தாலும் கண்டிப்பதற்குச் செட்டியார் பின் வாங்கமாட்டார். அப்படியே குணங்களை எடுத்துப்பாராட்டு வதற்கும் தயங்கமாட்டார்.

உடுக்கையும் பம்பையும்

மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் ஒரு சமயம் கும்ப கோணஞ்சென்றார். அங்குச் சில நாட்கள் தங்கியிருந்தார். ஒரு நாள் மாலைப்போதில் அரசாங்க வேலையில் இருந்த பெரிய அலுவலாளர் ஒருவர் பெரும் புலவரையும் அவரு டைய மாணவர்கள் பலரையும் தம் இல்லத்திற்கு அழைத் தார். அந்தக் கூட்டத்தோடு தியாகராசச் செட்டியாரும் சென்றிருந்தார். முதலில் பெரும் புலவரிடம் பல அரிய செய்திகளைக்கேட்ட அந்த உத்தியோகத்தர், பிறகு தம் ஊர்க்கதைகளையெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தார் அத னைப் பிள்ளையவர்களும் கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இரவில் வெகுநேரம் ஆகிவிட்டது. எல்லோருக்கும் இவர் சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்போலும் என்று எண்ணிக்கொண்டு எல்லோரும் பசியைப் பொறுத் துக்கொண்டு அந்த உத்தியோகத்தரின் வாயைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இரவில் அகாலமாகிவிட்டது. அதன் பின் அந்த உத்தியோகத்தர் "போய்வாருங்கள்" என்று எல்லோருக்கும் விடைகொடுத்தார். இந்த அகாலத்தில் உணவுக்கு எங்கே போவது என்று எல்லோரும் கலங்கினர். தியாகராசச் செட்டியாருக்குத் தம் ஆசிரியர் மீதே மிகுந்த எரிச்சல் உண்டாகியது. அவர் பிள்ளையவர்களைப் பார்த்து, "உங்கள் கையில் உடுக்கையும் பம்பையும் இல் லாதது ஒன்றுதான் குறை," என்று கூறினர். இதனைக் கேட்டு எல்லோரும் நகைத்தனர். பிள்ளையவர்கள் தம்

மாணவரான செட்டியாரைப் பார்த்து, "நான் என்ன செய்வது தியாகராசு! அவர்விட்டால்தானே புறப்படலாம்," என்று கூறி அவரும் நகைத்தார்.

வழக்கறிஞரின் நன்னூல்

சென்னையில் அந்நாளில் இருந்த வழக்கறிஞர் ஒருவர் நன்னூற் சூத்திரங்களில் தமக்கு விருப்பமில்லாத பாதிச் சூத்திரங்களைத் தள்ளிவிட்டு மற்றைப் பாதிச் சூத்திரங்களை மட்டும் சிறு புத்தகமாக அச்சிட்டுப் பள்ளிகளில் பாடப் புத்தகமாக வைக்குமாறு பள்ளிகளுக்கு அனுப்பினுர். அந்நூற் பிரதி தியாகராசச் செட்டியாருடைய பார்வைக்கும் வந்தது. அந்நூலைப் பார்த்த செட்டியார், "இந்நூல் நன்னூலும் அல்ல நந்நூலுமல்ல," என்று கூறி அதனை ஒதுக்கிவிட்டார். செட்டியார் ஒதுக்கிவிட்ட செய்தியை உணர்ந்து மற்றைப்பள்ளி ஆசிரியர்களும் அந்நூலை ஒதுக்கி விட்டனர். இச்செய்தியை வழக்கறிஞர் உணர்ந்தார். அவருக்குச் செட்டியார்மீது சீற்றம் உண்டாயிற்று. அவர் செட்டியாரை நேரிற் பார்த்துக் கண்டிக்க வேண்டும் என்று எண்ணிஞர். புறப்பட்டுக் கும்பகோணத்தையடைந்தார். செட்டியாரைப் பார்த்து, "நான் வெளியிட்டுள்ள நன்னூலை ஏன் பாடமாக வைக்கவில்லை? அதில் என்ன குறை?" என்று உசாவிஞர் உடனே செட்டியாருக்கு மிகுந்த சீற்றம் உண்டாகிவிட்டது. "தமிழ் நூல்களைக் கூட்டவும் குறைக்கவும் உமக்கு யார் அதிகாரம் கொடுத்தது? நீர் தள்ளிவிட்ட சூத்திரங்கள் மாணவர்கட்கு வேண்டாதன என்று நீர் எவ்வாறு உணர்ந்தீர்? நீதி மன்றங்களில் வாய்ப்போரிடுவதற்குத்தான் நீர் தகுந்தவரே அன்றி வேறெதற்குத் தகுந்தவர்? இனிமேல் தமிழ் நூல்களில் கை வைக்காதீர். அவ்வாறு வைப்பீராஞல் தமிழ்உலகம் உமது ஆணவத்தைப் போக்குவதற்குச் சிறி

தும் பின்வாங்காது,'' என்று சண்டப் பிரசண்டாகச் சொற்பொழிவில் இறங்கிவிட்டார். வழக்கறிஞரால் எத்தகைய பதிலும் உரைக்க முடியவில்லை. செட்டியாரைக் கண்டிக்க வந்தவர் செட்டியாரால் கண்டிக்கப்பட்டு ஓட்டம் பிடித்தார்.

சுப்பையா பண்டாரம்

தியாகராசச் செட்டியார் கும்பகோணத்தில் வேலை பார்த்துக் கொண்டிருந்தபோது மீனாட்சி சுந்தரம்பிள்ளை சிறிது காலம் பட்டீச்சுரத்தில் ஆறுமுகத்தாபிள்ளை என்பவரின் வீட்டில் தங்கி யிருந்தார். அந்த ஆறுமுகத்தா பிள்ளைக்குச் சுப்பைய பண்டாரம் என்னும் பெயருடைய மைத்துனர் ஒருவர் இருந்தார். ஆறுமுகத்தா பிள்ளைக்கும் சுப்பைய பண்டாரத்திற்கும் எப்போதும் பூசலேற்பட்டுக் கொண்டே யிருக்கும். ஒருநாள் ஆறுமுகத்தா பிள்ளை சுப்பைய பண்டாரத்தைப் பார்த்து, "நீ மிகுதியாக வாயாடி அடிக்கிறாயே; ஒரு பாட்டு இயற்றிக்கொண்டு கும்பகோணம் போய்த் தியாகராசச் செட்டியாரைப் பார்த்து உன் பாட்டை அவருக்குச் சொல்லி அவரிடம் இருந்து பணம் பெற்று மாம்பழங்கள் வாங்கிக்கொண்டு வா பார்ப்போம்,'' என்றார். பிள்ளையவர்கள் முடியும் என்று கூறுமாறு குறிப்பாகச் சைகை செய்யவே சுப்பைய பண்டாரம், "ஏன் முடியாது நன்றாக முடியும், செய்யுள் இயற்றிக் கொண்டு போய் வாங்கி வருகிறேன் பார்,'' என்று பந்தயம் போட்டார்.

பிள்ளையவர்கள் தாமே ஒரு பாட்டை இயற்றிச் சாமிநாதையரைக் கொண்டு சுப்பைய பண்டாரத்திற்குக் கற்பித்துக் கும்பகோணத்திற்கு அனுப்பினார். சுப்பைய பண்டாரம் கும்பகோணத்தை அடைந்து தியாகராசச் செட்டி

யாரைக் கண்டார். தியாகராயச் செட்டியார், "ஐயா அவர்கள் வந்திருக்கிறார்களா?" என்று உசாவினார். பண்டாரம், "இல்லை நான் மட்டுந்தான் வந்துள்ளேன். தங்கள்மீது செய்யுள் ஒன்று பாடியிருக்கிறேன்; அதனைக் கேட்டு நன்கொடை வழங்கவேண்டும்," என்று சொன்னார். இதனைக் கேட்ட செட்டியார், "உமக்குப் பாட்டியற்றத் தெரியுமா? நீர் ஐயாவோடு சுற்றித் திரிவதைத்தான் நான் பார்த்திருக்கிறேனேயல்லாமல் பாடங் கேட்டலையோ செய்யுள் இயற்றலையோ நான் பார்த்ததில்லையே?" என்றார். அதற்குப் பண்டாரம், "பாட்டியற்றிப் பலரிடமும் நன்கொடை பெறுவதுதான் என்னுடைய வேலையே. நான் இயற்றியுள்ள பாடலைக் கேளுங்கள்," என்றுகூறி, பிள்ளை அவர்கள் இயற்றிக் கொடுத்த,

" புண்ணியமெல் லாந்திரண்ட வடிவென்கோ
குறுமுனிவன் பொதிய நீத்திங்கு
அண்ணியதோர் வடிவென்கோ தமிழிலுள்ள
பலகலைகள் அனைத்துங் கூடி
நண்ணியதோர் வடிவென்கோ பின்னுமெந்த
வடிவமெனை நாட்டு கோயான்
மண்ணியமா மணியனைய தியாகரா
சப்புலவன் வடிவந் தானே "

என்னுஞ் செய்யுளைப் பாடினார்.

தியாகராசச் செட்டியார் இந்தச் செய்யுளைக் கேட்டார். அவருக்கு மிகுந்த வியப்பு உண்டாயிற்று. பண்டாரத்தைப் பார்த்து, "இந்தச் செய்யுள் நீர் இயற்றியதா?" என்றார். "ஆமாம்," என்றார் பண்டாரம். பண்டாரம் கூறியதைச் செட்டியார் நம்பவில்லை. "இத்தகைய பாடல்களை இயற்றுவதாயின் எவ்வளவு நூல்களைப் படித்திருக்க வேண்டும் தெரியுமா? நமது ஐயா அவர்கள் ஒருவரால்

தான் இத்தகைய பாடல்கள் இயற்ற முடியும். இந்தப் பாடல் ஐயா அவர்கள் செய்ததுதான். அவர்கள் எதற்காக இதனை உம்மிடம் பாடிக்கொடுத்தார்கள் அதனைக் கூறும்,'' என்றார். சுப்பைய பண்டாரமோ இப்பாடல் தம்முடையது தான் என்று சாதிக்கத் தொடங்கினார். செட்டியார் எளிதில் விடுவதாக இல்லை. பாட்டில் உள்ள இலக்கணங்களைப் பற்றியெல்லாம் கேள்வி கேட்கத் தொடங்கினார். சுப்பைய பண்டாரமோ வல்லடி வழக்காகவும் வாய்வீச்சாகவும் பதிலுரைத்தார்.

இறுதியில் தியாகராசச் செட்டியார் பண்டாரத்தைப் பார்த்து, "இந்தப் பாட்டு நீர் செய்ததுதான் என்று சத்தியஞ் செய்வீரா?'' என்று கேட்டார். சுப்பைய பண்டாரம் அதற்கும் இசைந்தவராய்த் துணியைப் போட்டுத் தாண்டிச் சத்தியஞ் செய்யவுந் தொடங்கினார். செட்டியார் பண்டாரத்தைப் பார்த்து, "நீர் சத்தியஞ் செய்தாலும் இந்தப் பாட்டு நீர் இயற்றியதுதான் என்று நான் ஒருநாளும் ஒப்புக் கொள்ளப் போவதில்லை. ஐயா அவர்கள் எதற்காக இந்தப் பாட்டைப் பாடி உம்மிடம் கொடுத்தார்கள் என்பதை மட்டும் கூறும்,'' என்றார். பிறகு சுப்பைய பண்டாரம் பட்டீச்சுரத்தில் நிகழ்ந்த செய்திகளையெல்லாம் கூறிவிட்டார். பிறகு செட்டியார் நல்ல மாம்பழங்களாக வாங்கிக் கொடுத்துப் பண்டாரத்தை அனுப்பி வைத்தார். மறுநாள் பட்டீச்சுரத்தை அடைந்து பிள்ளை அவர்களைக் கண்டு முதல் நாள் நடந்தவைகளையெல்லாம் நவின்றார்.

பள்ளியில் பாடஞ் சொல்லுதல் எளிது

ஒருமுறை செட்டியார் திருவாவடுதுறை மடத்திற்குச் சென்றார். அப்பொழுது மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் மடத்தில் சிலருக்குப் பாடஞ் சொல்லிக் கொண்டிருந்

தார்கள். செட்டியார் அதனைக் கேட்டுக் கொண்டிருந்தார். பிறகு பிள்ளையவர்கள் செட்டியாரைப்பார்த்து, "இவ்வாறு அகவை முற்றியவர்கட்குப் பாடஞ் சொல்வது மிகத் தொல்லையாக இருக்கிறது. பள்ளியில் சிறிய பிள்ளைகளுக்குப் பாடஞ் சொல்வது எவ்வளவோ எளிது," என்று கூறினார். இதனைக் கேட்ட செட்டியார், "பள்ளியில் பாடஞ் சொல்வது எளிது என்று எண்ணுகிறீர்கள். இவ்வாறு வளர்ந்துள்ள பெரியவர்கள்தாம் அமைதியாகக் கேட்பார்கள். சிறுவர்கள் அடிக்கடி தொல்லை கொடுத்து உயிரை வாங்கி விடுவார்கள்," என்று கூறினார். அப்பொழுது பிள்ளையவர்கள் மேற்கொண்டு யாதும் பதில் உரைக்கவில்லை.

பின்னொரு நாள் செட்டியார் மடத்திற்குச் சென்றார். அப்போது பாடஞ் சொல்லிக்கொண்டிருந்த பிள்ளையவர்கள் செட்டியாரைப் பார்த்துச், "சிறிது நேரம் பாடஞ் சொல்லிக் கொண்டிரு; வெளியே போய்வருகிறேன்," என்றுகூறி மெதுவாக நழுவிவிட்டார்கள். செட்டியார் பாடஞ் சொல்லத் தொடங்கினார். கேட்டவர்கள் பலவகையான கேள்விகளைக் கேட்கத் தொடங்கி விட்டார்கள். செட்டியாரின்பாடு பெரும் பாடாகிவிட்டது. அவர் திக்கு முக்காடிக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் பிள்ளையவர்கள் திரும்பிவந்து மாணவர்களை அடக்கிவிட்டுத் தாம் பாடத்தைச் சொல்லத் தொடங்கினார்கள். அன்றுமுதல் செட்டியார் தமது கருத்தை மாற்றிக் கொண்டார்.

திருக்குறளில் திருத்தம்

செட்டியார் ஓய்வு பெற்ற பிறகு தமது ஊருக்குச் சென்று கவலையற்றுக் காலங்கழித்துக்கொண்டிருந்தார். ஒருநாள்வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது ஒருவெள்ளைக்காரரும் வேறுசிலரும் செட்டியாரின்

வீட்டிற்கு வந்தார்கள். செட்டியார் அவர்களை வரவேற்றுப் பேசிக்கொண்டிருந்தார். வெள்ளைக்காரர் செட்டியாரைப் பார்த்து, "நான் மதுரையில் இருந்து வருகிறேன். தமிழ் நூல்கள் பலவற்றைப் படித்திருக்கிறேன். தமிழ்ச் செய்யுள் இலக்கணம் அறிவேன். திருக்குறள் என்னும் நூலைப் படித்துப் பார்த்தேன். அந்நூலில் சில இடங்களில் எதுகை மோனைகள் நன்றாக அமையவில்லை. நான் அந்த இடங்களெல்லாம் பொருத்தமாக அமைத்திருக்கிறேன். "தக்கார் தகவிலரென்பது அவரவர், எச்சத்தாற் காணப்படும்" இந்தக் குறளில் எச்சத்தால் என்றிருப்பதில் எதுகை சரியாக இல்லை. இதனை நான் மக்களாற் காணப்படும் என்று மாற்றியிருக்கிறேன். இவ்வாறு நான் மாற்றியிருப்பது எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?" என்றி கூறி மேலும் என்னென்னவோ கூறத் தொடங்கினார்.

வெள்ளைக்காரரின் மொழிகளைக் கேட்ட செட்டியார் துள்ளியெழுந்தார். தம்முடைய தலையிலே கைகளால் அடித்துக்கொண்டார். "சிவசிவா" என்று சொல்லிக் காதுகளையும் மூடிக்கொண்டு திண்ணையை விட்டெழுந்தார். தெரு வாசல் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு உள்ளே போய்விட்டார். வெள்ளையருடன் வந்தவர்கள் செட்டியாரைக் கூப்பிட்டு எவ்வளவோ நயமாகவும் பயமாகவுஞ் சொல்லிப் பார்த்தார்கள். எதையுஞ் செட்டியார் காதுகளில் வாங்கவில்லை. வந்தவர்கள் வந்தவழியே நடையைக் கட்டினார்கள்.

செட்டியாரின் குணநலன்கள்

செட்டியார் தவறுகண்ட இடத்தில் எத்தகையோரையும் கண்டிப்பதற்குச் சிறிதும் பின்வாங்கமாட்டார்.

செட்டியாரை ஏய்த்து விடுதலென்பதும் யாராலும் முடியாது. உண்மையாக நடந்து பணிவாகப் போனவர்கட்குச் செட்டியார் எத்தகைய உதவியையுஞ் செய்யப் பின் வாங்கார். செட்டியார் பெயரால் தனிநூல்கள் வெளிப்படவில்லையாயினும் நூல்கள் பல வெளிவருவதற்குச் செட்டியார் பேருதவியாக இருந்தார்.

இறுதி

செட்டியார் வேலையைவிட்டு ஒய்வு பெற்றபின் அவர் கண்பார்வை மிகவும் மங்கியது. பார்வையை ஒழுங்குபடுத்துவதற்குச் சென்னையை அடைந்து செய்த மருத்துவங்கள் பலன் அளிக்கவில்லை. செட்டியார் செட்டாகவே வாழ்க்கையை நடத்தியமையின் இறுதிக்காலத்தில் பொருட் கவலையற்றவராகக் காலங்கழித்தார். பிள்ளையவர்கள் தமது நூல் அரங்கேற்றஞ் செய்யுமிடங்களில் செட்டியாரை அழைத்து வைத்துக்கொண்டே அரங்கேற்றத்தைத் தொடங்குவார்கள். செட்டியாரோ தம் ஆசிரியரிடத்தில் பேரன்புடையவர். எவரேனும் தம் ஆசிரியரின் நூலின் இடத்திலே வீணை குற்றங்களைக் கூறின் செட்டியார் அவர்கட்குத் தக்க பாடங்கற்பித்து விடுவார். 1888-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 19-ஆம் நாள் செட்டியார் இவ்வுலக வாழ்வை நீத்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

உ-அ. கால்டுவெல்

தோற்றமுங் கல்வியும்

1814-ஆம் ஆண்டில் ராபர்ட் கால்டுவெல் அயர்லாந்து நாட்டிலே ஒரு சிற்றூரில் பிறந்தார். பத்தாண்டுகள்வரை அவ்வூரிலேயே வளர்ந்தார். தொடக்கப்பள்ளிப்படிப்பு அவ்வூரில் தொடங்கப்பெற்றது. பிறகு தாய் தந்தையர் ஸ்காட்லாந்திற்குச் செல்லவே அங்குஞ் சென்று ஆறு ஆண்டுகள் கல்வி கற்றூர். பதினாரும் ஆண்டிற்குள் இலக்கண இலக்கியங்களை இனிது கற்றுத் தேர்ந்தார். தந்தையாரின் விருப்பப்படி ஓவியக் கலையையும் நன்கு கற்று அதிலும் சிறந்து விளங்கினார். பிறகு கிளாஸ்கோ பல்கலைக் கழகத்திற்குப் போய் அதிற்சேர்ந்தார். அங்குச் சமய நூல்கள் நீதிநூல்கள் முதலியவைகளை நன்கு கற்றுத் தெளிந்தார். சர், டேனியல் சென்ட் போர்டு என்னும் பேராசிரியர் இலத்தீன், கிரீக்கு, செர்மன் முதலிய பன்மொழிப்புலவராக இருந்தமையின் ஒருமொழிக்கும் மற்றொரு மொழிக்கும் உள்ள ஒற்றுமையை நன்கு விளக்கிக்காட்டிக் கால்டுவெல்லுக்குக் கற்பித்தார். அதனால் கால்டுவெல் மொழியொற்றுமையை ஆராய்ந்துணர்வதில் வல்லவரானார்.

சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும்

கால்டுவெல் மற்றவர்களைப் போல் இன்பவாழ்க்கையை இனிது நடத்துதற்கு விரும்பவில்லை. சமயப் பணியில் இறங்கிக் கிறித்துவ மதத்தை இந்திய நாட்டிலும் பரப்புதற்குத் தொண்டு செய்யவேண்டும் என்று எண்ணினார். தமது நோக்கத்தைச் சமயத் தலைவர்கட்குத் தெரியப்படுத்தினார். சமயத் தலைவர்கள் இவரைத் தமிழ் நாட்டிற்கு அனுப்பினார்கள். 1838-ஆம் ஆண்டில் தம்

நாட்டைவிட்டுப் புறப்பட்ட கால்டுவெல் நான்கு திங்கள் கப்பல் பயணத்திற் கழித்துச் சென்னையை அடைந்தார். அந்நாளில் இந்தியாவிற்குக் குறுக்குவழி கண்டுபிடிக்கப் படாமையால்தான் கால்டுவல் நான்கு மாதம் கப்பற் பயணம் செய்ய நேரிட்டது. கப்பலில் சி. பி. பிரௌன் என்னும் பெயருடையார் கால்டுவெல்லுக்குப் பழக்கமானார். பிரௌன் வடமொழிப் பயிற்சியும் தெலுங்கு மொழிப் பயிற்சியும் பெற்றிருந்தமையால், கால்டுவெல் இந்த இரண்டு மொழிகளையும் பிரௌனிடம் கற்றுத் தெளிந்தார்.

சென்னையில் துருவர் என்னும் ஐரோப்பியர் ஒருவர் தமிழ்ப்புலமையுடையவராய் அந்நாளில் விளங்கியிருந்தார். அவர் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர், திருந்திய அறிவும் பெருந்திய பண்பும் அமைந்தவர். கால்டுவெல் துருவர் வீட்டில் விருந்ினராகத் தங்கினார். அக்காலத்தில் போப், ஆண்டர்சன் என்பவர்களும் சென்னையில் இருந்தார்கள். அவர்களும் கால்டுவெல்லைப்போல் சமயத் தொண்டிற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்தவர்கள். அவர்கள் மலையாளம், தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்திருந்தார்கள். கால்டுவெல் அவர்களை அடுத்துத் தமிழ், மலையாளம் முதலிய மொழிகளை நன்கு கற்றுத் தெளிவடைந்தார். சென்னையில் மூன்றாண்டுகள்வரை தங்கியிருந்தார். அப்போது கிறித்துவக் குருப்பட்டமும் கால்டுவெல்லுக்குச் சூட்டப்பெற்றது. அதுமுதல் அவர் தம் பெயரைக் கால்டுவெல் ஐயர் என்று வைத்துக்கொண்டார். சென்னையில் இருந்த சமயத் தலைவர்கள் கால்டுவெல்லைத் தென்பாண்டி நாட்டிற்கு அனுப்பிவைத்தார்கள்.

அந்நாளில் ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்குச் செல்வதற்குப் புகைவண்டி தென்னாட்டில் ஏற்படவில்லை. மாட்டுவண்டி, குதிரைவண்டி முதலியவைகளில் ஏறி நெடுந் தொலை செல்வதும் அருமையான செயல். ஆகவே, கால்டுவெல் தமிழ்நாட்டுப் புதுமைகளைப் பார்வையிட்டுக் கொண்டு கால்நடையாகவே புறப்பட்டார். மகாபலிபுரம், செஞ்சி, மயூரம், தரங்கம்பாடி, தஞ்சை, திரிசிரகிரி, திருவரங்கம் முதலிய ஊர்களின் வழியாகச் சென்று அவ்வூர்களின் சிறப்புக்களை யெல்லாம் பார்த்துக்கொண்டு நீலகிரியை அடைந்தார். பிறகு கோயம்புத்தூர் வழியாக மதுரையை அடைந்தார். இவர் வழிப்பயணம் சென்றவிடங்களில் பல ஊர்களில் பல வகையான தொல்லைகள் ஏற்பட்டன. தமிழ் நாட்டார் விருந்தினரைப் பேணும் திருந்திய மாண்பு பொருந்தியவர்களாக இருந்தும் கால்டுவெல் கிறித்தவ மதத்தைப் பரப்ப வந்தவர் என்பதை எண்ணி மக்கள் அவரைப் பல விடங்களில் விரட்டியடித்தனர். கால்டுவெல் ஓரிடத்தில் விரட்டப்பெற்றாரேனும் ஓரிடத்தில் போற்றப் பெற்றார். போற்றுதலுந் தூற்றுதலும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் நிகழ்தல் இயற்கை தானே!

மதுரையை அடைந்த கால்டுவெல் அந்நகரின் புதுமைகளையும், மாண்பையும் கண்டு இன்புற்றார். அங்குச் சிலகாலந் தங்கியிருந்தார். பிறகு புறப்பட்டுப் பாளையங் கோட்டையை அடைந்தார். அங்கிருந்த கிறித்துவர்கள் கால்டுவெல்லைப் பெரிதும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். அங்குச் சிலநாள் தங்கியிருந்தார். பிறகு தாம் நிலைபெற்றிருந்து தொண்டு செய்தற்குத் தக்க இடத்தை முடிவு செய்துகொள்ள எண்ணினார். நாசரேத் என்னும் ஊருக்குச் சென்றார். அங்கு முதன்முதலாக ஒரு சொற்

பொழிவு செய்தார். கால்டுவெல்லின் சொற்பொழிவைக் கேட்டவர்கள் அவரைப் பெரிதும் பாராட்டினார்கள். பிறகு பலவிடங்களினுஞ் சுற்றிக்கொண்டு இடையன்குடி என்னும் சிற்றூருக்குச் சென்றார். அவ்வூரிடத்தே கால்டுவெல்லுக்கு மிகுந்த பற்றுண்டாகியது. தமது தொண்டுக்கு அவ்வூரே தக்கது என்று முடிவு செய்தார்.

இடையன்குடி

இடையன்குடி என்னும் சிறிய ஊர், தண்ணீர், உடல் நலத் தகுதி முதலிய நலன்கள் அற்ற ஊராக இருந்தது. மேலும் அவ்வூரின் மக்கள் யாதும் அறியாத ஏழை மக்களாகக் காணப்பட்டனர். அம் மக்கட்குத் தொண்டு செய்து அவர்களைத் தம் மதத்தினராக்க எண்ணினார். ஊரின் பல இடங்களினும் கிணறுகள் தோண்டினார். தெருக்களை ஒழுங்குபெற அமைத்தார். காற்றோட்டம் வெளிச்சம் முதலிய சிறப்புகள் அமைந்த வீடுகளைக் கட்டுமாறு மக்களுக்கு அறிவு புகட்டினார். பள்ளிக்கூடத்தை உண்டாக்கினார், ஆண்களோடு பெண்களும் கல்வி கற்கச் செய்தார். முதலில் மக்கள் எதிர்ப்புக்காட்டிப் பெண் கல்வியைத் தடுக்க முற்பட்டனர். ஆயினும் நாளடைவில் அவர்கள் கால்டுவெல் காட்டும்வழி சிறந்த தென்று அவரெண்ணப்படியே நடக்கலாயினர். கோயில் ஒன்றையும் ஊரின் நடுவில் அமைத்து அவ்வூரைச் சிறந்த ஊராக மாற்றினார். அந்நாளில் சென்னைக் கவர்னராக இருந்த லார்டு நேப்பியர் என்பார், கால்டுவெல்லின் தொண்டினைப் பற்றிக் கேள்விப்பட்டார். தமது உறுதிச் சுற்றத்துடன் இடையன்குடிக்கு வந்து கால்டுவெல்லுடன் சின்னாள் தங்கி அவருடைய பணியைப் போற்றிப் புகழ்ந்து சென்றார்.

திருமணம்

கால்டுவெல்லுக்கு அவருடைய இருபத்தொன்பதாம் அகவையில் திருமணம் நடைபெற்றது. வாழ்க்கைத்துணைவியாக அமைந்தவர் நாகர்கோவிலில் இருந்த ஆங்கிலப் பாதிரியார் சார்லஸ்மால்ட் என்பவருடைய மகளான எலிசா என்னும் பெண்மணி. அப் பெண்மணி தமிழ் நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்கு உணர்ந்தவர். நன்றாகத் தமிழ் பேசும் ஆற்றலுடையவர். ஆகவே, கால்டுவெல்லின் தமிழ்ப் பயிற்சியும் ஆராய்ச்சியும் மேலுஞ் சிறந்தோங்க வழியாயிற்று. கால்டுவெல்லுக்கு இரண்டு பெண் மக்களும் ஓர் ஆண்மகனும் தோன்றினர். மகன் கல்வி கற்றபின் அலுவலின் பொருட்டு ஆத்திரேலியா சென்றான். பெண்மக்கள் இருவருக்கும் தமிழ் நாட்டிலேயே திருமணம் நடைபெற்றது.

நூலாராய்ச்சி

கால்டுவெல் சமயத் தொண்டுடன் தமிழ்த்தொண்டிலும் முழுக்கருத்தையுஞ் செலுத்தினர். தம்மை ஒரு தமிழன் என்று எண்ணியவராய்த் தமிழாராய்ச்சியில் ஈடுபட்டார். இடையன்குடியின் தட்ப வெப்ப நிலை கால்டுவெல்லுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதனால் அடிக்கடி உடல் நலமற்று வருந்தினர். ஆயினும் தம் தொண்டுகளில் சிறிதுந் தளர்ச்சியடையவில்லை. சங்க நூல்களைக் கற்றறிதல் கால்டுவெல்லுக்கு மிகுந்த இன்பத்தை அளித்தது. தமிழ் இலக்கண இலக்கிய ஆராய்ச்சியிலும் சமய போதனையிலும் தமது காலத்தைப் போக்கினர். ஆண்டுதோறுங் குற்றால நீர்வீழ்ச்சிக்குச் சென்று நீராடி உடல்நலம் பெற்றார். குற்றால நீர் பலவகையான மலை மூலிகைகளால் மருந்துத் தன்மை பெற்று விளங்குகிறதென்பது கால்டு-

வெல்லின் கொள்கை. கிறித்துவ சமயத் தெய்வ வணக்க நூலுக்கும், பைபிள் தமிழ் மொழிபெயர்ப்புக்கும் கால்டு வெல் பெரிதும் உழைத்தார். தமிழ்நாட்டு ஆராய்ச்சியில் கால்டுவெல் பெரும்பங்கு கொண்டார். மறைவுபட்டுக் கிடந்த பல செய்திகளை வெளிப்படுத்தினர். அதனல் தமிழ்நாட்டின் சிறப்பு நன்கு புலப்படுவதாயிற்று.

நாட்டின் உயர்வுக்கே அல்லாமல் மொழியின் உயர்வுக்கும் கால்டுவெல் காரணராக அமைந்து நின்ருர். மொழியாராய்ச்சிகள் பலவற்றைப் படித்தார். மொழிகளின் வேர்ச் சொற்களை ஆராய்ந்தார். ஏறக்குறைய இருபதாண்டுகள், தென்னிந்திய மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், துளுவம், குடகு, துதம், கோதம், கோண்டு, கந்தம், இராஜ்மகால் ஒராவோன் ஆகிய மொழிகளை ஆராய்ச்சி செய்து தாம் கண்ட முடிவுகளையெல்லாம் ஒன்றுபடுத்தி, "தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்னும் அரிய நூலை வெளிப்படுத்தினர். இத்தகைய நூல் இதற்கு முன் வெளிவராத படியால் இந்நூல் தலைசிறந்த முதல்நூலாக விளங்கியது. இதனல், இவருடைய புகழ் மேலும் வளர்ந்து சிறந்தது.

மொழியாராய்ச்சியில் கால்டுவெல் தம் கருத்துக்களை, "மலையாளம் தமிழொடு நெருங்கிய தொடர்புடையது. அது பிற்காலத்தில் வடமொழியோடு கலந்து தன் பழைய வடிவத்தை இழந்துவிட்டது. அவ்வகையே கன்னடமும் தெலுங்கும் வடமொழிகளை மிகுதியாக ஏற்றுத் தனித்தியங்கும் ஆற்றல் இழந்தன. தமிழ்மொழி வடசொற்கள் பலவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாயினும் அவைகளை நீக்கிவிட்டுத் தனியாக இயங்கும் ஆற்றல் உடையது," என்று வெளிப்படுத்தினர். மற்றுந் தமிழ்மொழியின் இலக்

கணச் சிறப்பு முதலியவைகளையும் உலகிற்குப் புலப்படுத்தினார். இவருடைய தமிழ்த்தொண்டு எல்லோராலும் நன்கு போற்றப் பெற்றது. கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தார் கால்டுவெல்லின் தொண்டுகளைப் பாராட்டி, 'டாக்டர்' என்னுஞ் சிறப்புப்பெயர் கொடுத்து மேன்மைப்படுத்தினர்.

இறுதி

ஐம்பது யாண்டுகளுக்குமேல் பொதுநலத்தொண்டு புரிந்து முதுமையை அடைந்த கால்டுவெல் ஓய்வு பெற்று அமைதியாகக் காலங்கழிக்க எண்ணினார். கோடைக்கானலுக்குச் சென்றார். அங்குக் கோயில் இல்லாமையைக் கண்டு கோயில் ஒன்றைக் கட்டினார். மகன், மருகன், மனைவி, மகள் முதலியோர் சூழ்ந்திருக்கத் தமது எழுபத்தாறும் அகவையில் 1891-ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை அடைந்தார். அவருடைய உடல் பெட்டியொன்றனுள் வைக்கப்பட்டு இடையன்குடிக்கு எடுத்துச்செல்லப்பட்டது. அவர் முன்பே தெரிவித்திருந்தபடி அங்கு அவர் அமைத்திருந்த கோயிலுக்குள் அடக்கஞ் செய்யப்பட்டது.

இயற்றிய நூல்கள்

1. தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம்
2. தாமரைத் தடாகம்
3. ஞானஸ்நாநம்
4. திருநெல்வேலிச் சரிதம்
5. நற்கருணை

முதலியன கால்டுவெல்லால் எழுதப்பெற்ற நூல்களாம்.

உ௯. கனகசபைப் பிள்ளை

தோற்றமுந் தொழிலும்

1855-ஆம் ஆண்டு மேத்திங்கள் இருபத்தைந்தாம் நாள் சென்னை கோமளேசுரன் பேட்டையில் கனகசபைப் பிள்ளை பிறந்தார். அவருடைய தந்தையார் பெயர் விசுவநாத பிள்ளை. அவர் யாழ்ப்பாணத்திலுள்ள மல்லாகம் என்னும் ஊரினர். ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்த அறிவு பெற்றிருந்தார் அந் நாளில் வின்ஸ்லோ என்னும் வெள்ளைப் பாதிரியார் சென்னைமா நகரிலே ஆங்கிலத் தமிழ்ப் பேரகராதி ஒன்றைத் தொகுத்துக் கொண்டிருந்தார். அப்போது சென்னைக்கு வந்து கல்வித் துறைத் தலைவரின் அலுவலகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த விசுவநாதர் வின்ஸ்லோவின் அகராதிக்குப் பெருந்துணையாக அமைந்து நின்றார்.

கனகசபைப் பிள்ளை இளைஞராக இருந்தபோதே அறிவுநலஞ் சிறந்தவராக விளங்கினார். மிக இளைஞராக இருந்தபோதே இவர் பட்டம் பெற்றமையின் இவரைப் பலரும் பட்டதாரிப் பையன் என்று அழைத்தனர். பி. ஏ. பட்டம் பெற்றபின் வழக்கறிஞர் தொழிலுக்குப் படித்துத் தேர்ச்சி பெற்றார். தம் மாமன் மகளாகிய செல்லம்மாள் என்னும் நல்லாளை மணம்புரிந்து இல்வாழ்க்கையைத் தொடங்கினார். சிறிது காலம் மதுரையிலே வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டிருந்தார். பின்னர்ச் சென்னைமா நகரை அடைந்து அஞ்சற் பிரிவில் பணியாற்றத் தொடங்கினார். படிப்படியாக உயர்ந்து அஞ்சல் நிலையங்களின் மேற்பார்வையாளரானார்.

தமிழாராய்ச்சி

அலுவலை முன்னிட்டுக் கனகசபைப் பிள்ளை அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஊர்கள்தோறுஞ் செல்ல

வேண்டியதாக இருந்தது. பிள்ளையவர்கட்குத் தமிழ்ப் பற்று மிகுதியாக உண்டு. பல நூல்களையும் ஆராய்ச்சி செய்திருந்தார். அந் நாளில் உ. வே சாமிநாதையர் நூலாராய்ச்சியிலும் ஏடு தேடும் வேலையிலும் ஈடுபட்டிருந்தார். கனகசபைப் பிள்ளை தாம் செல்லும் இடங்களிலும் பழைய ஏட்டுச்சுவடிகள் எவரிடமேனும் உள்ளனவா என்று ஆராய்ந்து பெற்றார். அவ்வாறு பெற்றவைகளிற் பலவற்றை மேற்படி ஐயரவர்கட்கும் வழங்கினார்.

கனகசபைப் பிள்ளையின் தாய் தந்தையர் கனகசபைப் பிள்ளையின் முப்பதாவது அகவையிலே காலமாயினர். அதற்குமேல் அடுத்தடுத்துத் தம் இரண்டு குழந்தைகளை இழந்தார். இவைகளால் அவருடைய உள்ளம் உலக வாழ்வை வெறுத்தது. உள்ளம் பொய்வாழ்வில் சென்று நையாவாறு ஆழ்ந்த கருத்துடன் நூல்களை ஆராய்ச்சி செய்தார். எட்டுத்தொகை பத்துப் பாட்டு முதலிய நூல்களை நன்கு ஆராய்ந்ததில் ஆயிரக் கணக்கான ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருந்த மக்களின் வரலாறுகள் ஒருவாறு விளங்கலாயின. அம் முடிபுகளை உடனுக்குடன் கட்டுரைகளாகப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தினார். அக் கட்டுரைகளைப் படித்த அறிஞர்கள் அவைகளைப் பெரிதும் பாராட்டினர். அந்நாளில் சென்னை உயர்தர நீதிமன்றத்தில் தலைமை நீதித் தலைவராக இருந்த சுப்பிரமணிய ஐயர் என்பவர் கனகசபைப் பிள்ளையின் கட்டுரைகளைப் பாராட்டினார். மேலும் அத்தகைய கட்டுரைகளை எழுதி வெளியிடுமாறு ஊக்கினார். கனகசபைப் பிள்ளை ஐந்தாறு ஆண்டுகள்வரை தொடர்ந்து பல கட்டுரைகள் எழுதினார். அக் கட்டுரைகளை ஒன்றுபடுத்தி நூல் வடிவாக வெளியிட வேண்டுமென்று பலரும் ஊக்கினர்.

1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர்

கட்டுரைகள் தனித் தனியாக இருப்பின் நாளடைவில் அழிந்தொழிந்து மறைந்து போகும் என்று எண்ணிய கனகசபைப் பிள்ளை தம் கட்டுரைகளை யெல்லாம் ஒன்று படுத்தி ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் என்று பெயர் கொடுத்து 1904-ஆம் ஆண்டில் வெளிப்படுத்தினர்.

அந் நூல் பதினறு பிரிவுகளாக அமைந்து அக் கால மக்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தெளிவாக விளக்குகின்றது. நிலப் பிரிவுகள், தமிழகத்தைச் சுற்றியுள்ள நாடுகள், வாணிபம், அரசர்கள் முதலிய எல்லாச் செய்திகளையும் அந் நூலில் காணலாம்.

இவருடைய, நூல் பிற நாட்டறிஞர்களாலும் பெரிதும் பாராட்டப் பெற்றது. இந் நூலைப் படித்த ஸ்மித் என்னும் ஆங்கிலப் பேராசிரியர், "இந்திய சரித்திரம் தென்னிந்தியாவில் இருந்து தொடங்கி எழுதப் பெருத வரையில் அது நிறைவு பெற்றதாகாது," என்று கூறினர். இவர் நிறைவேற்றியது இவ்வொரு நூலேயாயினும் இதனல் இவருக்குப் பெரும் புகழ் உண்டாயிற்று.

கனகசபைப் பிள்ளை தமிழில் மட்டும் அன்றி ஆங்கிலத்திலும் சிறந்த அறிஞராக விளங்கினர். ஆங்கிலத்திலும் பல கட்டுரைகள் எழுதிச் சீர்த்தி பெற்றார். நூல்களை மொழி மாற்றி மொழி பெயர்ப்பதினும் இவருக்கு மிகுந்த திறமையுண்டு.

பிற தொண்டுகள்

கனகசபைப் பிள்ளை தமிழாசிரியராக இருக்கவில்லை. ஆயினும், இவரது தமிழாராய்ச்சித் திறனை நன்குணர்ந்தவர்

கள் பல சொற்பொழிவுகட்கும் விழாத் தலைமைக்கும் அழைத்துச் சென்றனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர் 1905-ஆம் ஆண்டில் அச் சங்க விழாவிற்குத் தலைமை தாங்கச் செய்தனர். கல்வித் துறையினர் இவரை அத் துறைக்கு இழுத்து பி. ஏ., எம். ஏ. முதலிய தேர்வுகளில் தேர்வாளராகச் செய்தனர். சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் இவரிடத்தில் பெரு மதிப்பும், பேரன்பும் உடையவர்.

இறுதி

கனகசபைப் பிள்ளை தமிழாராய்ச்சியில் மிகுதியாக ஈடுபட்டிருந்தபோதினும் தம் அலுவலில் சிறிதுந் தவறினாரல்லர். அத் துறை அதிகாரிகள் இவருடைய வேலைத் திறமையைப் பெரிதும் போற்றினார்கள். 1906-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் இவர் தம் அலுவலை முன்னிட்டுக் காஞ்சி நகருக்குச் சென்றார். சிவராத்திரி நன்னாளில் அவ்விடத்திலேயே இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

---

௩௦. கிருட்டிண பிள்ளை

தோற்றம்

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிப் பாளையங்கோட்டைக்கு அண்மையில் உள்ள இரட்டியாபட்டி என்னுஞ் சிற்றூரிலே, 1827-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் இருபத்துமூன்றாம் நாள் கிருட்டிணபிள்ளை பிறந்தார். கிருட்டிண பிள்ளையின் தந்தையார் பெயர் சங்கர நாராயண பிள்ளை. தாயார் பெயர் தெய்வநாயகி யம்மாள். குலம் வேளாளர் குலம். சங்கர நாராயண பிள்ளை திருமாலிடத்திலே பெருமால் கொண்ட வைணவ சமயத்தினர். நல்ல தமிழறிஞர். அவருடைய மனைவியாராகிய தெய்வநாயகி

யம்மையாரும் கல்வியறிவுடையவர். இராமாயணப் பாடல்களுக்குப் பொருள் உரைக்கக் கூடியவர். கிருட்டிண பிள்ளைக்கு இளவலாய் முத்தையா என்றொரு மைந்தருந் தோன்றினர்.

கல்வி

பெற்றோர்கள் மக்கள் இருவரையும் வைணவ சமயக் கொள்கைக்கேற்ப வளர்த்து வந்தனர். உரிய காலத்திலே கல்விப் பயிற்சி தொடங்கப் பெற்றது. முதலில் தந்தையாரே மைந்தர்கட்கு ஆசிரியராக அமைந்து நின்று கல்வி போதித்தார். வைணவ சமய நூல்களாகிய திருவரங்கத் தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், திருவேங்கடமாலை, திருவேங்கடத் தந்தாதி முதலிய நூல்கள் போதிக்கப்பட்டன. கிருட்டிண பிள்ளை அகவை பதினொன்கை யடைந்தபோதே கம்பராமாயணத்தைப் படிக்கவும் பொருள் கூறவும் வல்லவரானர். பின்னர்த் தந்தையார் மாணிக்கவாசகத் தேவர் என்னும் புலவரை அமர்த்தி இலக்கணங் கற்றுக்கொடுத்தார்.

திருமணம்

1842-ஆம் ஆண்டிலே, கிருட்டிண பிள்ளைக்குத் திருமணம் நடைபெற்றது.

மேலுங் கல்விப் பயிற்சி

கிருட்டிண பிள்ளைக்குத் திருமணமான பின் தந்தையார் சங்கர நாராயண பிள்ளை காலமானர். அதன் பின் கிருட்டிண பிள்ளையும் அவருடன் பிறந்தார் முத்தையா பிள்ளையும், அந் நாளில் மிகுபுகழ் பெற்று விளங்கிய பெரும் புலவர் திருப்பாற்கடல்நாத கவிராயர் என்பவரிடத்தே ஐந்திலக்கணங்களையும் வழுவறக் கற்றுத் தேறினர்.

சமயப்பற்று

கிருட்டிணபிள்ளை முதலில் வைணவசமயத்தில் பெரும்பற்றுக் கொண்டவராய், வீர வைணவராய் விளங்கினார். அக் காலத்தில் திருநெல்வேலி நாட்டில் கிறித்து சமய வளர்ச்சிப்பணி மிகக் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. கிறித்து சமயம் நாட்டில் விரைவாக வளர்ச்சியடைவதைக் கண்டு தளர்ச்சி கொண்ட கிருட்டிண பிள்ளை, அவ் வளர்ச்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்வாரோடு கூடிக் கொண்டு, கிறித்துவர்களை அடித்துத் தொல்லைப்படுத்தினார். கிருட்டிண பிள்ளையின் கூட்டத்தார் கிறித்தவர் வீடுகளிற் புகுந்து கொள்ளையடித்தனர். இச் செய்தி மாவட்டத் தலைவருக்கு எட்டியவுடன் அவர் கொள்ளைக் காரர்களைப் பிடித்து வரும்படி கட்டளை அனுப்பினார். கிருட்டிண பிள்ளையின் கூட்டத்தார் பலர் பிடிபட்டு அடிபட்டுத் தண்டனைக்குள்ளாயினர். ஆனால், கிருட்டிண பிள்ளை மட்டும் பிடிபடவுந் தண்டனையடையவும் இல்லை. கிறித்துவர்களிடம் கொள்ளையடித்த உப்பு மூட்டைகள் பலவற்றைச் சிலர் அதிகாரிகட்கு அஞ்சிக் கிருட்டிண பிள்ளை வீட்டுக் கிணற்றில் கொட்டிவிட்டனர். அக் கிணற்று நீர் இன்றைக்கும் உப்புக்கரித்துக்கொண்டே இருக்கிறது.

ஆசிரியத் தொழில்

அந் நாளில் சாயர்புரம் என்னும் இடத்தில் இருந்த கிறித்துவர்களுடைய கல்லூரிக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவைப்பட்டனர். அவ் வேலையைப் பெறுதற்கு மூவர் போட்டியிட்டனர். மூவரும் ஆராயப் பெற்றதில் கிருட்டிண பிள்ளைக்கே தமிழாசிரியர் வேலை 1852-ஆம் ஆண்டு மேத் திங்கள் 27-ஆம் நாள் கிடைத்தது. கிருட்டிண

பிள்ளை அவ் வேலையைப் பெருக்கத்துடனும் கல்லூரித் தலைவர் போற்றுமாறும் ஆற்றினார்.

கிறித்துசமயப் பற்று

கிறித்தவர்களுடைய ஆதரவிலே தொழில்புரியத் தொடங்கிய கிருட்டிண பிள்ளை, கிறித்துவர்கள் மனமகிழுமாறு கிறித்துவ சமய நூல்களைப் படித்து அச் சமயச் செய்திகள் பலவற்றைத் தெரிந்து கொண்டார். பாதிரிமார்கள் இதுதான் தக்க சமயம் என்று கிருட்டிணபிள்ளைக்குச் சிறிது சிறிதாக மதமாற்ற மருந்தேற்றத் தொடங்கினார்கள். முதலில் கிருட்டிணபிள்ளை அந் நிலைக்கு இடங்கொடாமல் உறுதியான கொள்கையில் இருந்தார். அந்நாளில் திருநெல்வேலியில் இருந்த உயர் வகுப்பினர் பலர் கிறித்துசமயத்தில் புகுந்தனர். பாளையங்கோட்டைக் கல்லூரியில் தமிழாசிரியராக இருந்த சண்முகநாதக் கவிராயர், தனக்கோடிராசு, மனக்காவலப் பெருமாள் பிள்ளை என்னுஞ் சிலர் கிறித்து சமயம் புகுந்தனர். கிருட்டிண பிள்ளையையுங் கிறித்துவ சமயத்தில் சேருமாறு பாதிரிகள் வற்புறுத்தினர். இச் சமயத்தில் கிருட்டிண பிள்ளையின் உடன்பிறந்தாராகிய முத்தையாபிள்ளையும் 1857-ஆம் ஆண்டில் கிறித்து சமயத்தில் புகுந்தார். இதனை யறிந்து கிருட்டிணபிள்ளை வியப்பும் மனவருத்தமுங் கொண்டார்.

கிருட்டிணபிள்ளை கிறித்தவராதல்

முத்தைய பிள்ளை கிறித்துவரான பின் கிருட்டிண பிள்ளையையுங் கிறித்துவராக்கப் பாதிரிகள் பெரிதும் முயன்றனர். கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையும் அன்றோ? நாளடைவில் கிருட்டிண பிள்ளையின் உள்ள

மும் மாறத்தொடங்கியது. அவர் கிறித்துவராதலைப்பற்றிப் பல நாள் எண்ணமிட்டார். கிறித்துவராகும் எண்ணம் கிருட்டிண பிள்ளையின் உள்ளத்தில் ஏற்பட்டிருக்கிறதென் பதை யறிந்து அவருடைய குடும்பத்தினர் பெருங்கவலை கொண்டனர். கிருட்டிணபிள்ளையின் உடன் பிறந்தாராகிய முத்தையபிள்ளை முதலியோர் கிறித்துவசமயத்தில் சேரும்படி அடிக்கடி கிருட்டிணபிள்ளையை வற்புறுத்திக் கொண்டிருந்தனர். சென்னையை அடைந்து கிறித்து சமயத்தில் சேருவதென்று முடிவு செய்தார். வேலையை வேறொருவரிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்னைக்குச் சென்றார். இராயப்பேட்டையில் இருந்த சலிவன் தோட்டத்துக் கிறித்துவர்களுடன் சேர்ந்துகொண்டார். 1858-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள், சென்னை மயிலாப்பூரில் உள்ள கிறித்துவக்கோயிலில் ஞான தீட்சை பெற்று, "ஹென்ரி ஆல்பிரெட்" என்று அழைக்கப்பெற்றார். இவருக்கு ஞான தீட்சை கொடுத்தவர் ஜான் ஹெஸ்டு ஐயர். கிருட்டிணபிள்ளை கிறித்துவசமயம் புகுந்து ஹென்ரி ஆல்பிரெட்டாக மாறியபோது அவருக்கு அகவை முப்பது. முப்பது ஆண்டுகள் வரை கொடிய வீரவைணவராக விளங்கிய இவர் பிறசமயம் புகுந்ததைக் கண்டு பலரும் பெருவியப்படைந்தனர்.

பிறசமயம் புகுந்தவுடன் கிருட்டிண பிள்ளை,

"பிறவியில் பிடிவாத கொடியவைணவனாய்ப்
பிறந்து முப்பது வற்சரம்
பிரபஞ்ச மயல்கொண்டு மூடந்த காரப்
பிழம்பில் அடைபட் டுழன்று,
மறவினைக் காளாகி நெறிகிலாத் தூர்த்தமன
வாஞ்சைக் கிடங்கொடுத்து
மருளுற்று வறிதுநாள் செலவிட்ட நீசனெனை
மலரடிக் காட்ப டுத்தி,

குறைவிலாப் பேரருள் அளித்தின் றுகாறும்
குறிக்கொண்டு காத்தி யெனினும்
கொச்சைமதி யேற்கின்னும் நன்றியறி யாக்கெட்ட
குணதோடம் ஒழிய விலையே,
இறைவலப் புறமிருந் தடியருக் காப்பரிந்து
என்றுமன் றாடு முகிலே
ஏசுநா யகசருவ லோகநா யககிறித்
தியேசுநா யகசு வாமியே."

என்னும் பாடலைப் பாடினார்.

குடும்பத்தாரும் கிறித்துவராதல்

கிருட்டிண பிள்ளை கிறித்துவராக மாறியபின் பாளையங்கோட்டையை அடைந்து தம் உடன்பிறந்தாராகிய முத்தைய பிள்ளையின் வீட்டில் தங்கினார். கிருட்டிண பிள்ளை கிறித்துவராக மாறிவிட்டார் என்னுஞ் செய்தியை அறிந்ததும் அவருடைய குடும்பத்தினர் பெருங்கவலை கொண்டனர். மனைவியார் தம் பிள்ளைகளைப் பாளையங் கோட்டையில் விட்டுவிட்டுத்தம் பெற்றோர் வீடு போய்ச் சேர்ந்தார். ஒன்றரையாண்டுகள் கழித்து மக்களைப் பிரிந் திருக்கமுடியாமல் பாளையங்கோட்டையை அடைந்து தனி யாக ஒரு வீட்டில் தங்கினார். மக்கள் தாய் தந்தை என் னும் இருவரிடத்திலும் போக்குவரத்துடன் இருந்தனர். நாளடைவில் அவர்களுடைய மனங்களும் மாறின. 1860-ஆம் ஆண்டில் அவர்களுங் கிறித்துவ சமயத்தில் புகுந்தனர்.

மீண்டும் ஆசிரியத்தொழில்

மனைவிமக்களும் கிறித்துவர்களான பின் கிருட்டிண பிள்ளை மனமகிழ்ச்சியடைந்தார். திருநெல்வேலி சி. எம். எஸ். கல்லூரியில் தலைமைத் தமிழாசிரியராக அமர்ந்தார்.

நூல் இயற்றல்

நூல் இயற்றுதலினும், செய்யுள் இயற்றுதலினும் வல்லவராக இருந்த கிருட்டிண பிள்ளை 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலை இனிய பாக்களால் பாடினார். இது முதலில் நற்போதகம் என்னும் பத்திரிகையில் வெளியாயிற்று. பிறகு 1894-ஆம் ஆண்டில் புத்தகவடிவமாகவும் வெளியாயிற்று. இந்நூல் கிறித்துவசமயத்தினருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

இறுதி

ஹென்ரி ஆல்பிரெட் கிருட்டிண பிள்ளை அவர்கட்கு அடிக்கடி பலவகையான நோய்கள் உண்டாகித் தொல்லை கொடுத்தன. மனைவியாரும் நோய் கண்டு வீடு பேறுற்றார். கிருட்டிண பிள்ளை 1900-ஆண்டில் பிப்ரவரித் திங்கள் 3-ஆம் நாள் தமது எழுபத்துமூன்றும் அகவையிலே, "ஏசு பெருமானே என்னை இரட்சியும்," என்று கூறி இவ்வுலக வாழ்வைத் துறந்தார்.

---

௩௧. போப்பையர்

தோற்றமுங் கல்வியும்

புலவர் போப்பையர் என்று புகழ்பெற்ற போப், 1820-ஆம் ஆண்டில் நோவா ஸ்கோஷியோவில் உள்ள பிரின்ஸ் எட்வர்ட் தீவில் பிறந்தார். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப் பெயர் ஜியார்ச் யுக்ளோ என்பது. ஜியார்ச் யுக்ளோ போப்பின் தந்தையாரது பெயர் ஜான் போப் என்பதாகும். அவர் பிளிமத்துக்கு அண்மையில் டர்ன் சேப்பல் என்னுமிடத்தில் குடியிருந்தார். அவர்

சபைப் போதகராகவும் சமயத்தைப் பரப்புந்தொண்டரா கவும் பணிசெய்ய விரும்பினார். ஆயினும் அவருடைய எண்ணம் நிறைவேறவில்லை.

போப்பையரோடு உடன் பிறந்தவர்கள் பத்துப் பெயர். எல்லோரும் சமயத்தொண்டர்களாகிப் பணி புரிந்தனர். போப் சிறுவராயிருக்கும்போதே சமயத் தொண்டில் ஈடுபடவேண்டும் என்று எண்ணங்கொண்டார். இந்தியாவிலும் மற்றைய இடங்களினும் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தொண்டைப்பற்றி அவர் கேள்விப் பட்டார். தென்னிந்தியாவுக்குக் கிறித்து சமயத்தொண்ட ராகச் செல்லவேண்டும் என்னும் விருப்பும் அவருக்கு ஏற்பட்டது. அதுமுதல் அவர் தம்மைச் சமயத்தொண்டு செய்வதற்குத் தோது செய்து கொண்டார். கிறித்துவ மறையைப் பன்முறை படித்தார். கிறித்துவ மறையை நன்கு ஆராயும் பொருட்டு எபிரேய மொழியையும் கிரேக்கு மொழியையும் பயின்றார். தகுந்த பயிற்சியில்லா மல் எவருஞ் சமயத்தொண்டில் இறங்கக்கூடாது என்பது போப்பின் கொள்கை.

இந்தியாவுக்கு வருதல்

1838-ஆம் ஆண்டு முதல் போப் தமிழ்மொழியும் வடமொழியும் பயிலத்தொடங்கினார். 1839-ஆம் ஆண்டில் வெஸ்லியன் சங்கத்தார் போப்பை இந்தியாவுக்கு அனுப்பத் தெரிந்தெடுத்தார்கள். போப் மனமகிழ்ச்சியடைந்தார். சென்னைக்குப் புறப்பட்ட மரக்கலம் ஒன்றில் பயணமானார். அக்கால மரக்கலப்பயணம் மிகவுந் தொல்லையானது. அந் நாளில் குறுக்குவழி கண்டு பிடிக்கப்படவில்லை. சுற்றுவழி களில்தான் மரக்கலங்கள் வரவேண்டும். போப்பையர் புறப்பட்ட மரக்கலம் சென்னை வந்து சேர்வதற்கு எட்டுத்

திங்கள்களாயின. எட்டுத் திங்கள்களும் அவர் கப்பலில் இருக்கும்படியாகநேர்ந்தது. அக்காலத்தை அவர் அவமாக்க வில்லை. கப்பலில் நாள்தோறும் எட்டுமணி நேரம் அவர் தமிழும் வடமொழியும் படித்தார். கப்பலில் வரும் போதே அவர் தமிழ்மொழியில் சொற்பொழிவு ஒன்றை எழுதி முடித்துக்கொண்டு வந்தார். அக் கப்பலில் தமிழ் அறிந்த வேறுசில வெள்ளையரும் சென்னைக்கு வந்தனர். போப் சென்னையை அடைந்ததும் மிகுந்த மகிழ்ச்சியடைந் தார்.

தமிழ்நாட்டு வாழ்க்கை

சென்னையை அடைந்த போப்பையர் தமது திருப் பணிகளைத் தொடங்கினார். தாம் கப்பலில் வரும்போது எழுதி வைத்திருந்த சொற்பொழிவைச், "செந்தோம்" என்னும் இடத்தில் எடுத்துப் படித்துத் தமது சொற் பொழிவைச் சென்னையில் முதன் முதலாகத் தொடங்கி னார். அச்சொற்பொழிவின் எழுத்துப்படி போப்பையரின் குடும்பத்தாரிடம் இன்னும் இருக்கிறதாம். அச் சொற் பொழிவைக் குறித்துப் போப்பையர் பின்னாளில் தம் மக னிடம் "நான் இந்தியாவில் முதன்முதலாகச் செய்த சொற் பொழிவு இது. இந்தச் சொற்பொழிவுக்கு வந்தவர்கள் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆயினும், அவர் களுக்கு ஒன்றும் விளங்கியிராது என்பது உண்மை. இன்று நான் இதனைப் படித்துப் பார்த்தால் எனக்கே இதன் பொருள் விளங்கவில்லை," என்று சொன்னாராம். தமிழ்நாட்டில் தமிழில் பேசினால்தான் எல்லோரும் அறிந்து கொள்வார்கள் என்பது போப்பையரின் கொள்கை. ஆகையால்தான் இந்தியா வந்ததும் தமிழி லேயே பேசத் தொடங்கி விட்டார். தமிழ்நாட்டில் பிறந்

தும் தமிழிற் பேசத் தெரியாத சிலர் இருப்பது மிகுந்த வியப்பன்றோ?

போப்பையர் சென்னையில் செந்தோம் என்னும் இடத்தில் சமயப்பணி செய்தார். திருச்சபை வரலாற்றையும் திருச்சபை பற்றிய பல நூல்களையும் நன்கு ஆராய்ந்தார். தமிழ்மொழியையுங் கருத்துடன் கற்றார். மலையாளம், கன்னடம், தெலுங்கு முதலிய தமிழின் கிளைமொழிகளையும் கற்றார். போப்பையர் ஒரு கணப்பொழுதையும் வீணாக்கவில்லை.

ஜியார்ஜ்போப் ஆராய்தற்குரிய நூல்கள் பலவற்றை ஆராய்ந்து, இங்கிலாந்து திருச்சபையைச் சேர்வதென்று முடிவு செய்தார். அக் காலத்தில் சென்னை அத்யட்சராயிருந்தவர் அவரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு குருப்பட்டம் கொடுத்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் சமயப்பணி செய்யுமாறு அங்கு அனுப்பினார்.

சாயர்புரம்

சாயர்புரம் என்னும் ஊர் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடிக்குப் பத்து மைலுக்குத் தென்மேற்கே இருக்கிறது. அவ்வூரையடுத்துள்ள இடங்களெல்லாம் மணற்குன்றுகளாக இருக்கும். சாயர்புரத்திற்கும் கடற்கரைக்கும் ஐந்து மைல் இருக்கும். கொற்கை சாயர்புரத்திற்கு ஏழுமைல் தொலைவில் இருக்கிறது. போப்பையர் சாயர்புரத்திற்குச் சென்று அவ்வூரில் அமர்ந்து திருப்பணி செய்யத் தொடங்கினார். சாயர் என்ற போர்த்துக்கீசிய வணிகரால் நிறுவப் பெற்றமையின் இவ்வூர் சாயர்புரம் எனப் பெயர்பெற்றது.

கிறித்துவக் கலாசாலை

இந்து மதத்தினரைக் கிறித்துவர்களாக மாற்றவேண்டுமாயின் இந்தியரைக் கொண்டே அச் செயலை முடிக்க வேண்டுமென்று எண்ணினார். கிறித்துவக் கலாசாலை ஒன்றை ஏற்படுத்தி இடையன்குடி முதலிய இடங்களில் இருந்து இந்தியக் கிறித்துவப் பிள்ளைகளை அக் கலாசாலைக்குக் கொண்டுபோய்ப் படிக்கவைத்தார். பிள்ளைகளுக்கு நல்ல சாப்பாடு போட்டு நல்ல அடிகொடுத்து நல்ல படிப்புச் சொல்லிக் கொடுத்தார். அப் பள்ளியில் கல்வி பயில்வோர் பிற்காலத்தில் குருமார்களாதற்குத் தக்கவாறு பயிற்றுவிக்கப்பட்டனர். நல்ல சாப்பாடு, நல்ல படிப்பு, நல்ல அடி என்பது சாயர்புரக் கலாசாலையின் சட்டம்.

போப்பையர் இரவும் பகலும் வகுப்புகள் நடத்துவார். இரவு பன்னிரண்டு மணி வரையில்கூட வகுப்புகள் நடக்கும். அவர் மாணவர்களை மிகக் கண்டிப்பாக நடத்தினார். நன்கு படியாத மாணவரை நன்றாக அடிப்பது போப்பையர் வழக்கம். போப்பையருடைய கண்டிப்பைக் குறித்து அவருடைய வரலாற்று நூல்காரர் ஒருவர் கீழ்வருமாறு வரைந்துள்ளார் :

"பள்ளிக்கூடத்துக் கோட்டைக்குள் எண்ணிறந்த புளியமரங்கள் இருந்தன. புளியம்பழங்கள் கொடுக்குமென்று அம்மரங்கள் வைக்கப்பட்டனபோல் தோன்றவில்லை. அம்மரங்கள் செழிப்பாக வளர்ந்திருந்தமையால் நாள்தோறும் மாணவர்களை அடிக்கப் பயன்படுவதற்கு வளார்களை வழங்கிக் கொண்டிருந்தன. புளியமரங்களின் இளங் கொம்புகள் மாணவருக்கு யமன்களாகத் தோன்றின. மாணவர்களின் முதுகுகள் அவ் வளார்களைக் கண்டு நடுங்கின. இளங்கொம்புகளை வழங்குவதற்கே அப் புளிய

மரங்கள் வளர்க்கப்பட்டன என்றும் சொல்லப்பட்டது. சில வகுப்பறைக்குள் நுழைந்தால், உபாத்தியாயர் மேசையில் புத்தகங்கள் மட்டுமன்று; புளிய வளார்களும் வைக்கப்பட்டிருக்கும். சில வகுப்பறைகளில் புளிய மரத்தின் இளம் கொம்புகள் கட்டாகக் கட்டப்பட்டு ஒரு மூலையில் சார்த்தப்பட்டிருக்கும். அவற்றைக் கையிற்பற்றி மாணவர் முதுகில் சுழற்ற வேண்டுமென்று ஆசிரியர் நினைத்தவுடன் அவை அவரது கையைச் சேரும். அவ்விளங் கொம்புகளைக் கொண்டு முதுகில் அடித்தால் அவை வளைந்து வயிற்றையுஞ் சுற்றி இரண்டு அடிகளாக ஏழை மாணவன் உடலில் விழும். அடிபட்ட இடமெல்லாம் செந்நிறமாகி விடும். சில சமயங்களில் உடலினின்றும் செங்குருதி பிலிற்ற ஆசிரியன்மார் அடித்தலும் உண்டு. வகுப்பறைகளில் உபாத்திமார் படித்துக் கொடுக்கும் சத்தம் மட்டுமன்று, புளிய வளார்கள் முதுகுகளில் தாண்டவமாடும் ஓசையும் இடையறாது கேட்கும். மாணவர் கண்ணீர் உகுத்து அழுது நிற்குங் காட்சியையும் காணலாம். அவர்கள் விம்மி விம்மி அழும் ஓசையும் கேட்கும்..................''

சாயர்புரம் கலாசாலையைச் சுற்றிலும் போப்பையர் மதிலை எழுப்பியிருந்தார். பள்ளிக்கூடம் இருக்கும் இடம் இன்று கோட்டை எனப்படுகிறது. போப்பையர் சாயர்புரத்தில் பல கட்டிடங்கள் கட்டினார். போப்பையர் சாயர்புரத்தில் எட்டாண்டுகள் பணி செய்தார். பிறகு அவ்வூரை விட்டு வேறிடஞ் செல்லும்படியாக நேரிட்டது. போப்பையர் சாயர்புரத்தில் கல்வித்தொண்டு மட்டுமன்றிச் சமயத் தொண்டும் செய்தார். சாயர்புரத்தைச் சுற்றியுள்ள ஊர்கட்குஞ் சென்று சமயச் சொற்பொழிவுகள் செய்தார். சுப்பிரமணியபுரம் என்னும் ஊரில் போப்பையர் தெருவில் நின்று சொற்பொழிவு செய்து கொண்டிருந்த

போது ஒரு பெண் மாட்டுச் சாணியைத் தண்ணீரில் கரைத்து ஐயர்மேல் ஊற்றிவிட்டாள். கிறித்துவ சமயத் தொண்டில் அளவு கடந்த ஊக்கங் கொண்ட போப்பையர் அம் மாதின் செய்கையை ஒரு பொருளாக மதிக்கவில்லை. தமது சொற்பொழிவை நிறுத்தாமலே மேலுந் தொடர்ந்து செய்தார். நாளடைவிற் பலரின் மனதை மாற்றிக் கிறித்துவர்களாகச் சேர்த்துவிட்டார்.

தஞ்சையில் தொண்டு

தொடர்ந்து எட்டாண்டுகள் சாயர்புரத்தில் தொண்டு செய்தமையால் போப்பையர் உடல்நலத்தின் பொருட்டுப் புறப்பட்டுத் தாய்நாட்டிற்குச் சென்றார். சிலகாலம் அங்கு தங்கியபின் மேலுந் தொண்டுசெய்வதற்காக இந்தியாவுக்குப் புறப்பட்டு வந்தார். சென்னையில் இருந்த சமயத் தலைவர் போப்பையரைத் தஞ்சைக்கு அனுப்பினார். போப்பையர் தஞ்சையை அடைந்து தொண்டு செய்தார். போப்பையர் தஞ்சையில் இருந்த காலத்தில் தமிழ் நூல்களை மிகுதியாகக் கற்றார். ஆரியங்காவுப் பிள்ளை என்னும் அறிஞரும், இராமநுச கவிராயரும் போப்பையருக்குப் பல நூல்களைப் பாடஞ் சொல்லினர். போப்பையர் தஞ்சையிற் கற்ற கல்வியினால் நல்ல தமிழ்ப்புலவராக மாறினார். தமிழினிடத்திலே போப்பையருக்கு மிகுந்த பற்றுண்டாயது. போப்பையர் சமயப் பணிகளோடு தமிழ் கற்றலையும் மேற்கொண்டு வெற்றி பெற்றபின் நூல் எழுதுஞ் செயலில் ஈடுபட்டார்.

நூல்கள் எழுதுதல்

அக்காலத்தில் மாணவர்கள் பயிலுதற்கு உரைநடையில் இலக்கண நூல்கள் இல்லை. போப்பையர் அக் குறையைப் போக்க எண்ணினார். தொல்காப்பிய இலக்கண நூல், நன்னூல் முதலியவைகளைப் படித்து ஓர் உரைநடை இலக்

கண நூலை இயற்றினர். அஃது எளிய முறையில் அமைந்து தமிழ் இலக்கணங் கற்கும் மாணவர்கட்கு நற்றுணையாகியது. அந்நூல் போப்பையர் இலக்கணம் என்னும் பெயருடன் விளங்குவதாயிற்று. தமிழ் கற்கும் ஆங்கிலேயர்கட்கு உதவியாகத் 'தமிழ்க் கைப்புத்தகம்' என்னும் நூலையும், 'தமிழ்-ஆங்கிலம், ஆங்கிலம்-தமிழ்' என்னும் அகர வரிசையையுந் தொகுத்தார். அந்நாளில் வரலாற்று நூல்கள் பள்ளிகளில் கற்பிக்கப்படவில்லை. நாட்டு வரலாறு கற்பியாவிடின் கல்வி பயனளிக்காதென்றறிந்த போப், தமிழ் மாணவர்கள் படிப்பதற்குத் தமிழில் வரலாற்று நூல்கள் சில எழுதினர். இதன் பிறகே பள்ளிகளில் நாட்டின் வரலாறும் போதிக்கப்படலாயிற்று. மாணவர்கள் தமிழ் மொழியில் உள்ள பல நூல்களின் சுவையையும் ஒரே நூலால் அறியவேண்டுமென்று எண்ணினர். உடனே 'தனிச் செய்யுட் கலம்பகம்' என்னும் நூல் ஒன்றைத் தொகுத்து முடித்தார். பாடல்களைத் திரட்டித் தொகுக்கும் முறை இதன் பின்னரே வழக்கத்திற்கு வந்தது. பள்ளிக் கூடத்தில் மாணவர்கள் செய்யுள் நூல்களைமட்டுங் கற்றால் போதாது. உரைநடை நூல்களையுங் கற்றல்வேண்டும் என்று முடிவு செய்து மாணவர்கள் கற்கத்தக்க உரைநடை நூல்கள் சிலவற்றையும் எழுதி வெளியிட்டார். பள்ளிக்கூடத்தில் மாணவர்கட்கு உரைநடைப் பாடங்கள் போதிக்கும் வழக்கம் இதன் பிறகே நடைமுறைக்கு வந்தது. இவ்வாறு போப்பையர் நூல்கள் எழுதியும் சமயத் தொண்டு புரிந்துந் தஞ்சையில் எட்டாண்டுகள் கழித்தார்.

உதக மண்டலம் செல்லுதல்

தஞ்சையில் போப்பையருக்குச் சில தொல்லைகள் உண்டாயின. ஆகவே, அவர் தமது பதவியில் இருந்து

விலகிக்கொண்டார். தஞ்சையில் இருந்து மாட்டு வண்டியிற் குடும்பத்துடன் புறப்பட்டு இருபத்து நான்கு நாட்கள் பயணஞ் செய்து உதக மண்டலம் போய்ச் சேர்ந்தார். அங்கு அப்போது ஐரோப்பியர் சிலர் இருந்தனர். அவர்களின் மக்கட்குப் பாடசாலை ஒன்றை ஏற்படுத்தி அதில் ஆசிரியராக அமர்ந்து பணியாற்றினார். பல பொது நல வேலைகளிலும் ஈடுபட்டுப் பெருந்தொண்டு செய்தார். பெங்களூர் முதலிய இடங்களும் போப்பையருடைய தொண்டைப்பெற்றன.

தாய் நாடடைதல்

இந்தியாவில் ஏறக்குறைய நாற்பத்தைந்தாண்டுகள் தொண்டு புரிந்த போப்பையர் தமது அறுபத்திரண்டாவது அகவையில் 1882-ஆம் ஆண்டில் தம் குடும்பத்தாருடன் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். போப்பையர் தமிழ் நாட்டை விட்டுச் செல்வதற்கு மனம் விரும்பினார் அல்லர். நாற்பது யாண்டுகட்குமேல் இந்தியாவில் தமிழ் நாட்டில் தங்கியிருந்த அவருக்குத் தமிழ்நாட்டுப் பழக்க வழக்கங்கள் நன்கு பிடித்து விட்டன. ஆயினும் அவரது உடல் நலம் கெட்டுப் போயிற்று. பிறந்த நாட்டிற்குச் சென்றால் தான் உடல் நலம் சீரடையும் என்னும் நிலைமை யேற்பட்டு விட்டது.

அங்குந் தொண்டு

தாய்நாட்டை யடைந்த போப்பையர் ஓய்வு பெற்று விடவில்லை. அங்குந் தமிழ்த் தொண்டு செய்யத் தொடங்கினார். 1885-ஆம் ஆண்டில் ஆக்ஸ்பர்ட் பல்கலைக் கழகத்தார் தமது பல்கலைக் கழகத்தில் ஐயர் பேராசிரியராக அமர்ந்து பணி புரிதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்

டார்கள். போப்பையர் அவர்களுடைய வேண்டுகே
கிணங்கினார். இருபத்து மூன்று ஆண்டுகள் மேற்படி
கலைக் கழகத்தில் தமிழ் தெலுங்கு ஆகியமொழிகள் ப
வாருக்குப் பேராசிரியராக இருந்தார்.

ஆசிரியராக இருந்ததோடு மட்டுமன்றித் திருக்கு
நாலடியார், சிவஞான போதம், திருவாசகம் ஆகிய
களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து இந்நூல்களி
யையும் தமிழ்நாட்டின் பண்பாட்டையும் ஆங்கில
டாரும் தெரிந்து கொள்ளுமாறு செய்தார். அவர் அ
செய்த சமயச்சொற்பொழிவுகளும், கலைச்சொற்பொ
களும் பல. அவர் தம் இறுதிக்காலம் வரையில் ஆக்ஸ்ப
பல்கலைக்கழகத்தில் தொண்டு செய்தார்.

இறுதி

1908-ஆம் ஆண்டில் பிப்ரவரித் திங்களில் ஒரு ந
உலாவச் சென்றார். திரும்பி வரும்போது உடலில் சி
நோய் உண்டாயிற்று. இரண்டொரு நாட்கள் நோயுட
இருந்து தமது தொண்ணூறுவது அகவையில் காலமா
அவருடைய விருப்பப்படி அவருடைய கல்லறையில் அ
'ஒரு தமிழ் மாணவர்' என்று எழுதப்பட்டது.

75817
031:1Au
H9.6
MADURAI UNIVERSITY LIBRARY
5 JAN 1973
MADURAI-2.